Koviloor Digital Library

நாயன்மார் அறுபத்து மூவர்

Acc. No. 26741

செல்லம்மாள்

அல்லயன்ஸ்

Koviloor Digital Library

Koviloor Digital Library

நாயன்மார் அறுபத்துமூவர்

செல்லம்மாள்

KOVILOOR ANDAVAR LIBRARY. KOVILOOR
26741

அறிவே விளக்கு
அல்லயன்ஸ்

அல்லயன்ஸ்
(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ் புத்தக நிறுவனம்)

Koviloor Digital Library

உரிமைப் பதிப்பு

முதற் பதிப்பு	:	1991
நான்காம் பதிப்பு	:	1997
ஐந்தாம் பதிப்பு	:	1998
ஆறாம் பதிப்பு	:	2001
ஏழாம் பதிப்பு	:	2003
எட்டாம் பதிப்பு	:	2010
ஒன்பதாம் பதிப்பு	:	2017

© பதிப்பகத்தார்

விலை : ரூ. **80.00**

அல்லயன்ஸ் கம்பெனி

ப.எண். 244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
தபால் பெட்டி எண். 617,
மயிலாப்பூர், சென்னை - 600 004.
தொலைபேசி : 2464 1314
இணைய தளம் : www.alliancebook.com
மின்னஞ்சல் : books@alliancebook.com

Laser Typeset : Srimath Kumaraguru Computers, Chennai - 41
Printed at : Sree Durga Printers, Chennai - 117

Koviloor Digital Library

முன்னுரை

பாரத நாட்டில் தோன்றியிருக்கும் ஞான நூல்கள் கணக்கிலடங்காதவை. ஆனால், அவைகளில் எந்தவொரு (பக்தி) நூலுக்கும் 'பெரிய' புராணம் என்று பெயர் கிடையாது. ஒரு லக்ஷம் பாடல்கள் கொண்ட; மஹாபாரதமோ, சிவ ரஹஸ்யமோ, கந்த புராணமோ 'பெரிய' புராணம் என்று அழைக்கப்படுவதில்லை. அளவில் குறைந்த இந்த நூலைப் 'பெரிய புராணம்' என்று அழைக்கிறோம். காரணம்... மீதி நூல்கள் எல்லாமே தெய்வங்களைப் பற்றியோ அல்லது மன்னர்களைப் பற்றியோ பேசும். ஆனால் பெரிய புராணமோ இறைவனின் அடியார்களைப் பற்றியும், அவர்கள் செய்த தொண்டுகளைப் பற்றியும் பேசுகிறது.

'செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்க லாதார்' — குறள்

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க செயற்கரும் செயல்களைச் செய்த அடியார்களின் வாழ்க்கை வரலாற்றைச் சொல்வதால், இந்நூல் பெரிய புராணம் என்றழைக்கப் படுகிறது.

இந்நூலில், தெய்வத்தொண்டில் சிறந்து விளங்கியவர்களைப் பற்றி விரிவாகச் சொல்லப்பட்டிருப்பதுடன், அப்படிப்பட்ட தொண்டர்கள் எல்லா இனங்களிலும் இருக்கிறார்கள் என்பதை நன்கு விளக்குகிறது. தெய்வ பக்தியிலும், தொண்டிலும் தலைசிறந்து விளங்கிய அடியார்களிடையே, எந்தவிதமான பேதமும் இல்லை என்பதைத் தெளிவாக்குகிறது. சாதாரண மனிதர்களால் செய்ய முடியாத காரியங்களைச் செய்த அடியார்களைக் காண்பிக்கும் இந்த நூல், அதே நேரத்தில் எல்லாராலும் செய்ய முடிந்தவைகளைச் செய்த அடியார்களைப் பற்றியும் கூறுகிறது.

Koviloor Digital Library

இறைவனைவிட அவனடியார்கள் பெரியவர்கள் என்பதை ஆணித்தரமாக விளக்கும் இந்நூலின் ஆசிரியர் 'ஸ்ரீ சேக்கிழார் ஸ்வாமிகள்'. சேக்கிழாருக்குப் பெற்றோர் வைத்த பெயர் 'இராம தேவன்' என்பது. இதைத் திருமழ பாடி கோவில் கல்வெட்டு 'சேக்கிழார் என்கின்ற இராமதேவன்' என்று கூறுகிறது.

மந்திரியாக, உயர்ந்த பதவியில் இருந்த சேக்கிழார் அறியாத .விவரங்களே கிடையாது என்பது மூலநூலைப் படித்துப் பார்த்தால் புரியும்.

'உலகெலாம்' என்று சிவபெருமானே அடி எடுத்துக் கொடுத்த அற்புதமான நூல் இது.

தாயும், தந்தையும் இல்லாத பரமேச்வரனாலேயே 'அம்மா!' என்று அழைக்கப் பெற்ற காரைக்காலம்மையார் கதை; 'மறையே நமது வடிவாகும்' என்ற திருவிளையாடல் வாக்கின்படி வேதத்தின் வடிவமேயான பரமேச்வரன் கண்ணப்பன் எச்சிலை ஏற்ற கதை, உழவாரப்பணியின் உயர்வை விளக்கும் அப்பர் ஸ்வாமிகள் கதை எனப் பல விதமான கதைகள் இந்நூலில் உள்ளன.

இப்பெரிய புராணத்தை, 'அறுபத்து மூவர் விழா' வெகு விமரிசையாக நடக்கும் மயிலாப்பூரில் உள்ள ஜெனரல் பப்ளிஷர்ஸ் வெளியிடுவது மிகமிகப் பொருத்தம். அன்பர்கள் அனைவரும் இந்நூலைப் படித்து பக்தியும், வைராக்கியமும் அடைய வேண்டுகிறேன்.

அன்பன்,
பி.என். பரசுராமன்

Koviloor Digital Library

பொன்னம்பலப் பெருமான்

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்.

1. சுந்தரமூர்த்தி நாயனார்

திருமுனைப்பாடி நாட்டிலுள்ள நாவலூரில், சடையனார் என்ற பெயருடைய ஓர் அந்தணர் வாழ்ந்து வந்தார். அவர் சிவபக்தியில் சிறந்தவர். எப்பொழுதும் சிவபிரானை வழிபடுவதிலேயே ஈடுபட்டிருப்பார். அத்தகைய சிறந்த வேதியற்கு, மனத்திற்கேற்ற மாண்புடையாளாய் 'இசை ஞானியார்' என்ற மங்கை இல்லறத் துணைவி ஆயினார்.

தவத்தில் சிறந்த அவ்விருவருக்கும், இறைவன் அருளால், சைவ சமயம் தழைத்து ஓங்கவும், உலகின் கண்ணுள்ள சிவடினயார்கள் உய்யவும் ஓர் மகவு தோன்றிற்று. அவ்வாண் மகவுக்கு நம்பியாரூரர் என்ற திருநாமமிட்டுப் பெற்றோர் வளர்த்து வந்தனர்.

ஒரு சமயம் நம்பியாரூரர் வீதியில் விளையாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது அவ்வூர் அரசன் நரசிங்கமுனையர், ஆரூரரைக் கண்டு, அவரிடத்து ஆசை கொண்டு அவரை அழைத்துச் சென்று வளர்த்து வந்தார்.

Koviloor Digital Library

ஆரூரர் வேதியற்குரிய கலைகளைக் கற்றும் பூணூல் முதலிய சடங்குகள் செய்விக்கப்பட்டும் மணப் பருவத்திற்குரிய தக்க பருவத்தை அடைந்தார்.

சடையனார் தமது அருந்தவப் புதல்வனுக்கு மணம் செய்விக்க விரும்பி, புத்தூரிலுள்ள சடங்கவி சிவாச்சாரியருடைய பெண்ணை நிச்சயம் செய்தார்.

திருமணத்திற்குரிய நன்னாளும் கிட்டியது. முதல் நாளில் செய்ய வேண்டிய வேதியற்குரிய விருதம் முதலியனவும் செய்யப்பட்டன. நம்பியாரூரர், திருமணக் கோலத்துடன் சுற்றத்தாரும் ஊராரும் சூழ, அந்தணர் நான்மறையோத, வாத்தியங்கள் முழங்க, புத்தூரை அடைந்தார்.

நம்பியாரூரரையும், மணப்பெண்ணையும் மன்றல் மனையில், மணவாசனத்திருத்தி, அந்தணர் ஆரண முழங்க மணச் சடங்கைத் தொடங்கினர்.

அது சமயம் தளர்ந்த நடையுடன், நரைத்த முடியும், நீரிட்ட நெற்றியுடன் ஒரு முதிய அந்தணர் ஆரூரரை நோக்கிக் கோலூன்றி வேகமாய் வந்தார்.

முப்புரி நூலணிந்த அந்தணரின் வடிவைக் கண்ட, மண விழாவில் ஈடுபட்ட அனைவரும், வியப்படைந்து அவரையே பார்த்து மெய் மறந்து நின்றனர். அக்கிழ வேதியர் ஆரூரரின் அருகில் சென்று, "அப்பனே! உனக்கும் எனக்கும் ஒரு வழக்குண்டு; அது நீங்கிய பிறகு தான் நீ மணம் புரிய வேண்டும்" என நம்பியாரூரரை நோக்கிக் கூறினார். இம்மொழியைக் கேட்ட நாவலூரர், "ஐயனே! இதற்குமுன் தங்களை நான் பார்த்தது கூடக்

Koviloor Digital Library

கிடையாதே; அவ்வாறு இருக்க உமக்கும் எமக்கும் வழக்கென்ன? அதைக் கூறுவீராக" என முதியோரை நோக்கிக் கூறினார்.

முதியவர், "நீ எனக்கு அடிமை; உனக்கெனத் தனி உரிமை இல்லை" என்று கூறினார். அந்தணரின் சொல்லைக் கேட்ட சபையிலுள்ளோர் அனைவரும், "இதென்ன ஆச்சரியம்! 'வேதியனுக்கு வேதியன் அடிமையாதல்' என்ற சொல்லை இன்று தாம் கேட்டோம்' என, வேதியர், "இதைப் பாருங்கள்; ஆரூரன் எனக்கு அடிமை என்று எழுதியுள்ள ஓலையை" என்று கூறி அவ்வோலையை எடுத்துக் காட்டினார்.

"அவ்வோலையை என்னிடம் கொடுங்கள்" என நாவலூரரர் கேட்க, "நம்பீ! இவ்வோலையை உன்னிடம் கொடேன். இச்சபையோர் இவ்வோலையைப் பார்த்து, 'நீ எனக்கு அடிமை' என்பதை அறிந்த பின்னரே நீ இதைப் பார்க்கலாம்" என முதியவர் கூறி விட்டார்.

நாவலூரரர் இவ்வார்த்தைகளைக் கேட்டுச் சினந்து, அவ்வந்தணர் கையிலிருந்து அவ்வோலையைப் பிடுங்க ஓடினார். அந்தணர் இதை அறிந்து தன்னுடைய கொம்மை ஊன்றி ஊன்றிக் கொண்டே வேகமாய் ஓட, அவரைப் பின் தொடர்ந்து ஆரூரர் ஓடி, அவர் கை ஓலையைப் பிடுங்கினார்; "அந்தணருக்கு அந்தணர் அடிமையாதல் எங்கேனும் உண்டோ?" என நகையாடி அவ்வோலையைக் கிழித்தெறிந்தார். அம்முதியவரோ நாவலூரரன் செய்கையைக் கண்டு, "இது முறையோ முறையோ!" எனக் கூவத் தொடங்கினர்.

Koviloor Digital Library

அச்சபையோர், "இது என்ன வேடிக்கை! பூசை வேளையில் கரடி வந்த கதையாக இருக்கிறது" என நினைத்து, முதியவரை நோக்கி, "ஐயா! நீர் யார்? உங்களுடைய ஊர் எது?" என்று வினவினார்கள். தவவேடமணிந்த அக்கிழவர், "நான் இருப்பது திருவெண்ணெய் நல்லூர். இந்நாவலூரன் எனக்கு அடிமை; இவன் என்னுடைய உத்திரவில்லாமல் மணந்து கொள்வதைத் தடுக்கவே யான் வந்தேன்; இவன் என்னுடைய ஓலையைப் பிறர் பார்க்கா வண்ணம் கிழித்தெறிந்ததினாலேயே இவன் என்னுடைய அடிமை என்பதை நீங்கள் அறியவில்லையா?" எனக் கூறிக் குதித்தார்.

அச்சபையோர், "ஐயனே! தாங்கள் விரும்புவது என்ன?" என வினவ, "எனக்கு முறை; நீதி வேண்டும். இவ்வோலையை நாவலூரன் கிழித்த போதிலும் என்னிடம் மூல ஓலை இருக்கிறது; அதைக் கொண்டு திருவெண்ணெய் நல்லூரிலுள்ள நீதிமன்றத்தில் வழக்காடுவேன்" எனக் கூறிக் கொண்டே தண்டூன்றிப் புறப்பட்டுவிட்டார்.

எல்லோரும் திருவெண்ணெய் நல்லூரை அடைந்தனர். வேதியர் நிறைந்த நீதி மன்றத்தில் வழக்கு விசாரிக்கப்பட்டது. முதியவர் அம்மூல ஓலையை நீதி செலுத்துபவர் கையில் கொடுத்தார்.

சபையிலுள்ள எல்லோரும் அறியும்படி அவ்வோலை வாசிக்கப்பட்டது. அவ்வோலையில், "திருவாரூரில் வாழும் ஆதிசைவனாகிய ஆரூரன்,

Koviloor Digital Library

திருவெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு எழுதிக் கொடுத்தது :

நானும் என்னுடைய வம்சத்தினரும்
திருவெண்ணெய் நல்லூர்ப் பித்தருக்கு,
வழிவழியே தொண்டு செய்ய எங்கள்
முழுமனதுடன் ஒப்புக் கொண்டேன்.

இங்ஙனம்
ஆரூரன்"

என எழுதி இருந்தது. நாவலூரரைச் சபையார் நோக்கி, "உமது பாட்டன் கையெழுத்தை ஒப்பு நோக்கக் கொண்டு வாருங்கள்" எனக் கூறி தருவித்துப் பார்க்க, நாவலூரரின் பாட்டன் கைச் சாத்தும் ஓலையிலுள்ளதும் ஒன்றாகவே இருந்தது. சாட்சி கையொப்பம் இட்டவர்களை அழைத்து வினவ அவர்களும், அக்கையெழுத்துக்கள் தம்முடையனவே எனக் கூறினர்.

எல்லோராலும் நாவலூரர் "முதியவருக்கு அடிமை" என்ற விஷயம் ஒப்புக் கொள்ளப்பட்டது. நாவலூரருக்கு நிச்சயம் செய்யப்பட்ட மணம் இடையிலேயே நின்றது. நம்பியாரூரர் தன்னுடைய அடிமையை ஒப்புக் கொண்டு அம்முதியவரைப் பின் தொடர, இவ்வதிசயத்தை முற்றிலும் அறிய நீதி கூறிய அந்தணரும், ஆரூரரின் சுற்றத்தாரும், மண விழாவைக் காண வந்த மற்றோரும், நம்பியாரூரரையும் அக்கிழ அந்தணரையும் பின் தொடர்ந்தனர்.

Koviloor Digital Library

அந்தணர் தண்டூன்றி நடந்து அவ்வூரிலுள்ள திருவருட்டுறை என்ற கோயிலில் நுழைந்து மறைந்தார். மறைந்த அவ்வேதியரைக் காணாது அனைவரும் திகைத்து நிற்கும் பொழுது, விண்ணில் விடை மேல் அம்மையாருடன் சிவபிரான் அனைவருக்கும் காட்சி யளித்து, "ஆரூரா! முன் நீ என்னுடைய தொண்டன்; ஏதோ வினைப் பயனால் இவ்வுலகில் பிறந்தாய். பிறக்கு முன் நீ என்னை வேண்டியவாறு இவ்வுலக இன்ப துன்பங்கள் உன்னை அணுகா வண்ணம் தடுத்தாட் கொண்டோம்" எனத் திருவாய் மலர்ந்தார்.

"ஐயனே! எம்மையாட் கொண்ட வள்ளலே! இன்றே என்னைத் தம்முடைய பாதாரவிந்தத்தில் சேர்த்துக் கொள்ளுங்கள்" எனத் திருவாரூரர் கதறி நின்றார்.

சிவபிரான், "என்னுடன் வழக்காடியதால் இன்று முதல் நீ "வன் தொண்டர்" என்ற பெயரை அடைவா யாக; நான் மகிழ்வது இன்சுவை நிறைந்த பாடல்களே யாகும்; ஆகையால் இன்று முதல் நீ எம்மைக் குறித்து பாமாலையால் பூசிப்பாயாக, நீ முதன் முதலில் "பித்தரோ?" என என்னை நோக்கிக் கேட்டதால் அதையே முதலடியாகக் கொண்டு பாடுவாயாக. உலகத்தில் சைவ மதத்தைப் பெருக்கிப் பிறகு எம்மை வந்தடைவாயாக" எனக் கூறி ஆண்டவன் மறைந்தார்.

அந்த நிமிட முதல் நாவலூரரர் சித்தத்தைச் சிவன் பால் செலுத்தி மற்ற விஷயங்களை மறந்தார் உலகத்தோரும் தாமும் உய்ய "பித்தா பிறை சூடி" என்ற முதலடியைக் கொண்ட திருப்பதிகத்தைப் பாடினார்.

Koviloor Digital Library

சடங்கவி சிவாச்சாரியார் புதல்வி, தன்னை மணக்க வந்த ஆரூரர் சிவபெருமானுக்கடிமையானதை உன்னித் தானும் ஆண்டவனை நினைத்து, அருந்தவம் புரிந்து, ஆண்டவன் அடி நீழலை யடைந்தார்.

நம்பியாரூரர் தலந்தலமாகச் சென்று சிவபெருமானைப் பாடினார். திருவதிகை என்ற ஊரில் சிவபிரான் அடிசூட்டப் பட்டார்.

கயிலையில் உமாதேவிக்குத் தோழிகளாயிருந்த அநிந்திதை, கமலினி என்ற இரு பெண்கள் ஆரூரர் கயிலையில் ஆலால சுந்தரராய் இருக்கும்பொழுது அவரை விரும்பினார்கள். அதன் காரணமாக, அவ்விருவரும் பூமியில் வந்து பிறந்தனர். கமலினி, திருவாரூரில் உள்ள உருத்திர கணிகைக்குப் பரவை என்ற பெயருடைய பெண்மணியாகப் பிறந்தார். அநிந்திதை என்பவள், ஞாயிறு என்ற பதியில் வேளாளர் குலத்துதித்த, ஞாயிறு கிழவர் என்றவருக்குப் புதல்வியாகப் பிறந்து சங்கிலி என்ற பெயரை அடைந்தார்.

சுந்தரர் முன் வினைப்பயனால் பரவையாரை விரும்பி மணந்தார். பரமனது அருளால் யாதொரு கவலையுமின்றித் தலந்தலமாகப் பரமனைப் பாடித் திருவொற்றியூரை யடைந்தார். அங்கு தியாகப் பெருமான் கோயிலில் சங்கிலியாரைக் கண்டு அவ்வம்மையை மணக்க விழைந்தார்.

சுந்தரமூர்த்தி நாயனாரின் விருப்பத்தை அறிந்த தியோகேசன் சங்கிலியாரின் கனவில் தோன்றி, "நீ

Koviloor Digital Library

இதுவரை விரும்பி நின்ற என்னுடைய அடியான், சுந்தரன் வந்துள்ளான்; அவனையே மணப்பாயாக" என, சங்கிலியார், "அப்பெரியார் என்னை விட்டுச் செல்ல மாட்டேன் என வாக்குக் கொடுத்தால், யான் அவரை மணப்பேன்" எனக் கூறினார்.

ஆண்டவன் சுந்தரமூர்த்தி நாயனாரின் கனவில் தோன்றி, "ஆலால சுந்தரனே! நீ சங்கிலியாரை மணக்க விரும்பின் அவள் விரும்பியவாறு வாக்குக் கொடுக்க வேண்டும்" என, நம்பியாரூரர், "ஆண்டவனே! தாங்கள் இக்கோயிலின் அருகிலுள்ள மகிழ மரத்தடியில் எழுந்தருளியிருக்க, நான் சங்கிலியாருக்கு அவ்வாக்கைக் கொடுக்க விரும்புகிறேன்" என்றார்.

அவ்வாறே மகிழ மரத்தடியில் எம்பெருமான் வீற்றிருக்க சங்கிலியாருக்கு, சுந்தரர், "யான் நின்னை விட்டுப் பிரியேன்" என வாக்குக் கொடுத்துச் சங்கிலி யாரை மணந்தார்.

இந்த ஐதீகத்தைக் கொண்டுதான் திருவொற்றி யூரில் மகிழ மரத்தடி உற்சவம் மிகவும் சிறப்பாக ஒவ்வொரு வருஷமும் நடக்கிறது.

சங்கிலியாருடன் வாழ்ந்து வரும் நாளில் சுந்தர மூர்த்தி நாயனாருக்குத் திருவாரூர் தியாகரையும் வன்மீக நாதரையும் தரிசிக்க வேண்டுமென்ற ஆவல் எழுந்தது.

அவ்வேட்கையை மீற முடியாதவராய் வன்மீக நாதரை நினைத்துப் புறப்பட்டு விட்டார். திருவொற்றி யூர் எல்லையைத் தாண்டியது தான் தாமதம். சங்கிலியாருக்குக் கொடுத்த வாக்குப் பொய்த்ததால் சுந்தரரின் சுந்தரமான இரு கண்ணும் மறைந்தது.

Koviloor Digital Library

திடுக்கிட்டார்; தன்னுடைய தவறை உணர்ந்தார். ஆண்டவனை நினைத்துக் கதறி திருப்பதிகத்தைப் பாடினார். ஆயினும் கண் வந்த பாடில்லை. சுந்தரருக்குத் தோழராய் நின்று கொண்டு செய்த சிவபிரான் தொண்டனின் பிழையைப் பொறாது இரு கண்ணையுங் கெடுத்து இடுக்கண் விளைத்தார்.

ஆரூரர் பிறருடைய உதவியைக் கொண்டே சிவபெருமானைப் பாடிக் கதறிக் கொண்டு திரு முல்லையை அடைந்தார். அங்கு ஊன்றிச் செல்ல சிவபெருமான் கோல் அளித்தார்.

மற்றத் தலங்களைத் தரிசித்து காஞ்சியை அடைந்து கச்சியேகம்பரை வணங்கித் தொழுது பதிகம் பாடினார். அங்கு ஏகம்பர் இடக்கண்ணை ஆரூரருக்கு அருளிக் காட்சியளித்தார்.

மற்றும் பல தலங்களைப் பணிந்து திருவாரூரை அடைந்து வன்மீகரை வலக்கண் தர வேண்டி திருப்பதிகங்கள் பாடினார். வன்மீகர் இரங்கி வலக்கண்ணை அருளினார்.

பரவையார் ஆரூரர் மறுமணம் புரிந்து வந்ததையறிந்து சினந்தாள். அவருடைய கோபத்தை ஆண்டவன் சுந்தரரின் தோழனாகச் சென்று தவிர்த்து இருவரையும் ஒன்று படுத்தினார்.

பரமனின் அருளை நினைந்து உருகிப் பரவையாரும் சுந்தர மூர்த்தி நாயனாரும் அடியார்களை ஆதரித்துச் சைவ மதத்தைப் பெருக்கி வந்தனர்.

உலகை வெறுத்துப் பாடிய ஆலாலசுந்தரரை வெள்ளை யானை மீது அழைத்து வரும்படி சிவபிரான்

Koviloor Digital Library

தேவர்களைப் பணிக்க, அவர்கள் சுந்தர மூர்த்தி நாயனாரை வெள்ளை யானை மீது ஏற்றிக் கயிலையை அடைந்தனர். பரவையாரும் சங்கிலியாரும் பழைய படியே உமாதேவியின் தோழிகளாகக் கயிலையை அடைந்து இன்புற்றிருந்தனர்.

2. திருநீலகண்ட நாயனார்

தில்லைப்பதியில் குயவர் குலத்தில் ஒருவர் பிறந்திருந்தார். அவர் சிவபக்தியில் சிறந்தவர். அப்பெரியார் மட்கலம் செய்து அதனை விற்பனை செய்து தன் வாழ் நாளைச் செவ்வனே நடத்தி வந்தார்.

சிவனடியார்களுக்கு அழகிய ஓடுகளைக் கொடுப்பது அவருடைய அருந்தொண்டாகும்.

அவர் எப்பொழுதும் ‘திருநீலகண்டம், திரு நீலகண்டம்’ என்று சொல்லி வந்தமையால், அவருக்குத் திருநீலகண்ட நாயனார் என்று பெயர் வழங்கலாயிற்று.

திருநீலகண்டரின் தருமக் குணத்திற்கேற்றவாறு நற்குணத்திற் சிறந்த மங்கை அவரின் இல்லறத் துணைவியாயினார்.

இவ்வாறு இருவரும் சிவத்தொண்டில் ஈடுபட்டு வாழும் நாளில், திருநீலகண்டர் வேற்றுப் பெண்ணின் மேல் மனத்தைச் செலுத்தினார்.

இதைக் கேள்வியுற்ற திருநீலகண்டரின் மனைவி வெகுண்டு தன் கணவனை நோக்கி, “நீர் எம்மைத்

Koviloor Digital Library

தீண்டல் தகாது. தீண்டுவீராயின் திருநீலகண்டம்" எனக் கூறினார்.

அடியவரோ, "யான் இவளையும் இவள் இனமாகிய மற்றவரையும் தீண்டேன்" என்று சூளுரை பகர்ந்தார்.

தில்லையம்பலத்திலுள்ள நடராஜப் பெருமான் தம்முடைய அடியாராகிய திருநீலகண்ட நாயனாரை யும் அவர் மனைவியையும் ஒன்று சேர்க்க வேண்டு மென விரும்பினார். மேலும் தம்முடைய பக்தனின் திருத்தொண்டின் பெருமையை உலகுக்கு உணர்த்த வேண்டி, நடராஜப் பெருமான், ஓர் சிவயோகியாகி குயவர் வீட்டை அடைந்தார்.

திருநீலகண்டர் அவரை வணங்கி உபசரித்து, "தங்களுக்கு வேண்டியது யாது?" என வினவ, "அப்பனே! இத்திருவோட்டைச் சேமித்து வைத்து யான் திரும்ப வந்து கேட்கும் பொழுது கொடுப்பா யாக" எனச் சிவயோகி கூறி ஓட்டையும் திரு நீலகண்ட ரிடம் கொடுத்தார். நாயனாரும் அவ்வோட்டைப் பக்தியுடன் வாங்கி பத்திரமான இடத்தில் வைத்தார்.

பன்னெடு நாட்கள் சென்றன. சிவயோகியார் மறுபடியும், திருநீலகண்டரைச் சோதிக்க, அவ் வோட்டை மறைந்து போகும்படிச் செய்து, திருநீல கண்டரை அடைந்தார்.

குயவர் யோகியாரை வரவேற்றார்; யோகி யாரும் தான் அவரிடம் வைத்துச் சென்ற திரு ஓட்டைக் கேட்டார். ஓட்டைக் கொணர விரைந்தார் நாயனார். ஆயின் ஓடோ மறைந்து விட்டது. காரணமறியாமல்

Koviloor Digital Library

தயங்கினார்; வாடினார்; வதங்கினார்; தேடாத இடமெல்லாம் தேடினார். படாத பாடுபட்டார். ஓடு அகப்பட்டால் தானே! "என் செய்வேன்? அடைக்கலப் பொருளை ஆதரிக்கத் திறமையற்றவன்" என எல்லோரும் ஏசாரோ? ஓட்டைக் கொடுத்துச் சென்றவர் என்னைக் குறித்து என்ன நினைப்பார்?" என்றெல்லாம் புலம்பித் தவித்தார்.

யோகியாரும் நாயனாரின் தன்மையை அறிந்தார். மேலும் பரிசோதிக்க எண்ணி, "எங்கே ஓடு! சீக்கிரம் கொடு. நான் செல்ல வேண்டும்" என்று கூவினார். "ஐயனே! என் செய்வேன். ஓடு எங்கோ காணாமல் போய் விட்டது. அதற்குப் பதிலாக நான் ஓர் புதுவோடு தருகிறேன்" என்றார் நாயனார்.

"இது என்ன அநீதி? என் ஓட்டை மறைத்துக் கொண்டு பொய் கூறுகிறாய்; நீ உன் புதல்வனின் கையைப் பிடித்துக் கொண்டு குளத்தில் மூழ்கி 'ஓடு காணாமல் போய் விட்டது உண்மையே' என்று கூறினாலன்றி யான் நம்பேன்" என யோகியார் கூக்குரலிட்டார்.

நாயனார், "பெரியோரே! எமக்குப் புதல்வன் இல்லையே, என் செய்வோம்" என்று கூற, யோகியார், "புத்திரனில்லா விட்டால் மனைவி கையைப் பிடித்துக் குளத்தில் மூழ்கி நான் சொன்னவாறு கூறு" என்றார்.

யோகியார் கூறியதை அறிந்த திரு நீலகண்டர், "நான் என்னுடைய மனைவியைத் தீண்டேன்; ஓர் கொம்பின் இருமுனைகளையும் நாங்கள் இருவரும் பிடித்துக் கொண்டு நீரில் மூழ்கி நீங்கள் கூறியவாறு

Koviloor Digital Library

சொல்லுகிறேன்" என்று சொல்லி மனைவியுடன் நீரில் மூழ்கினார். இவ்விருவரும் நீரில் முழுகி எழுந்தவுடன் முதுமை நீங்கப் பெற்றவராகி இளமையுடன் எழுந்தார். நாயனாரும் அவர் மனைவியும் மணமகனும் மண மகளைப் போன்று பிரகாசித்தனர்.

இத்தம்பதிகள் கரையேறிய சமயம் சிவயோகியார் மறைந்து, சிவபிரானாக உமையுடன் விடையிலேறி நாயனாருக்கும் அவர் மனைவிக்கும் காட்சி அளித்தார்.

ஆண்டவனின் அற்புத வடிவைக் கண்டு நாயனாரும் அவர் மனைவியும் ஆனந்த வாரிதியில் மூழ்கி மெய்மறந்து துதித்து நின்றார்கள்.

3. இயற்பகை நாயனார்

சோழ வள நாட்டில், காவிரிப் பூம்பட்டினத்தில், வணிகர் குலத்தில் பிறந்த அடியவர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் இயற்பகை. அவர் இல்லற தருமத்தை இனிதுற நடத்திப் பெரிய ஞானியராக விளங்கி வந்தார். தன் வீட்டிற்கு வரும் சிவனடியார்கள் எதை விரும்பி னும் கொடுத்து விடுவார்.

ஒரு நாள் சிவபிரான், இயற்பகை நாயனாரின் அடியார்களுக்குச் செய்யும் தொண்டின் திறத்தை உலகோர்க்கு உணர்த்த, திருநீரணிந்து வேதியர் வடிவம் தாங்கி இயற்பகை நாயனாரிடம் வந்தார். நாயனார் அடியவர் விரும்பியதைக் கொடுப்பதாகக் கூற, அவ்வேதியர், இயற்பகையாரைப் பார்த்து, "உமது

Koviloor Digital Library

மனைவியை எனக்குக் கொடுக்க வேண்டும்" என்று நாகூசாமல் கேட்டார்.

நாயனாரும் அவர் மொழிக்குச் சிறிதேனும் மனங்கோணாமல் தம் மனைவியாரை வேதியருக்கு அளித்தார். நாயனாரின் மனைவியாரும், தன் கணவர் வாக்கைக் காப்பாற்ற, மறையவரைப் பணிந்து, மனதிற்குள் தன்னையும் தன் நாதனையுங் காக்க வேண்டுமென பரமனைத் துதித்து நின்றாள்.

மறையவர், இயற்பகையாரை நோக்கி, "உன் மனைவியை நான் என்னிருப்பிடத்திற்கு அழைத்துச் செல்லும் பொழுது, எவரேனும் உனது உறவினர் எம்மை இடை மறித்து இடுக்கண் விளைத்தால் என் செய்வது?" என வினவ, நாயனார் தாமே அவர்களுக்குத் துணையாகச் சென்றார்.

இயற்பகையார் தம்முடைய மனைவியை அந்தணருக்குக் கொடுத்ததை அறிந்து, சுற்றத்தார் மங்கையைக் கொண்டு செல்லும் அவ்வந்தணரைத் தாக்க ஓடி வந்தனர். இயற்பகையார் சுற்றத்தார் எனவும் பாராது அப்பூசுரரைத் தன்னுடைய சுற்றத்தார் நெருங்கவொட்டாது அவர்களை வெட்டி வீழ்த்தினார். பிறகு அவ்வேதியரை அவர் குறித்த இடத்தில் தன் மனைவியுடன் விடுத்து, வீடு செல்லத் திரும்பினார்.

பரமன் பக்தனின் அடியார் தொண்டியற்றும் திறனை வியந்தார். பின்னும் நாயனாரைச் சோதிக்க எண்ணி, "இயற்பகை! ஓடி வா, ஓடி வா: ஆபத்து, ஆபத்து" என அலறினார். இயற்பகையார் ஓடி வர வேதியர் வடிவந்தாங்கி வந்த பெருமான் மறைந்தார்.

Koviloor Digital Library

இயற்பகையாரும் அவர் மனைவியும் அந்தணர் மறைவைக் கண்டு அதிசயித்து நிற்க, ஆண்டவன் பார்வதி தேவியுடன் விடையேறிக் காட்சியளித்தார்.

நாயனாரும் அவர் மனைவியும் பரமனைக் கண்டு மெய்ம் மறந்து துதித்து சிவலோக மடைந்தார். இயற்பகையாரால் மாண்ட உறவினரும் பேரின்ப வீட்டை எய்தினர்.

4. இளையான்குடிமாற நாயனார்

இளையான்குடி என்ற ஊரில் வேளான் மரபில் பிறந்தவர் இளையான்குடிமாற நாயனார். அவருக்கு நிலபுலன்களில் அதிகமான வருவாய் இருந்தன. இன்னோர் சிவபக்தியிலும், சிவனடியார் பக்தியிலும் சிறந்தவர். சிவனடியார்களுக்கு அன்னமிடுவதைத் தமது பெருந் தொண்டாகக் கொண்டு வாழ்ந்து வந்தார்.

இத்திருத் தொண்டை நடத்தி வந்ததால் நாயனார் செல்வம் ஒன்றுக்குப் பத்தாகப் பெருகலாயிற்று. இளையான்குடியில் அவர் குபேரனைப் போன்று வாழ்ந்து வந்தார்.

சிவபெருமான், "எந்த நிலையிலும் நாயனார் அடியார்களுக்குச் சோறிடத் தவறார்" என்ற உண்மையை உலகோர்க்கு உணர்த்த திருவுள்ளங் கொண்டார். இளையான்குடி மாற நாயனார் பொறுக்க முடியாத வறுமை நிலையை அடையும் படிச் செய்தார். அந்நிலையிலும் நாயனார் சிறிதும் தளர்ந்தாரில்லை.

Koviloor Digital Library

ஒரு புடை பாம்பு கொள்ளினும் மற்றொரு புரத்தால் சந்திரன் உலகோர் உய்யப் பிரகாசத்தைக் கொடுப்பது போன்று நாயனாரும் வறுமைத் துன்பத்தை விருந்தினரிடம் காட்டாரரகி மலர்முகத்துடனும், இன்சொல்லுடனும் அன்னதானத்தைச் செய்து வரலாயினர்.

இஃது இவ்வாறு இருக்க, ஓர் நாள் விடாமழை பெய்தது. மாறனாரின் வீட்டில், அன்று அன்னத்தில் ஒட்டிய தூசு கூடல்லாமல் கணவரும் மனைவியும் சாப்பிடாமல் இரவு வெகு நேரம் விழித்துக் கொண்டு இருந்தார்கள்.

அந்தச் சமயம் பார்த்து ஆண்டவன் அடியாரைச் சோதனை செய்ய எண்ணி அடியவர் வேடந்தாங்கி, இளையான்குடி மாற நாயனாரின் வீட்டுக் கதவைத் தட்டினார். நாயனார் ஓடோடியும் வந்து கதவைத் திறந்து பார்க்க, உடல் நடுங்க, சொட்டச் சொட்ட நனைந்து வந்த முதிய சிவனடியார் ஒருவர் அங்கு வாயிற்படி அருகில் நிற்பதைப் பார்த்தார். உள்ளம் பதைக்க அடியாரை உள்ளழைத்துச் சென்றார். உடலைத் துடைத்து, ஈரம் போக்கி வேற்றுடை தந்து உபசரித்தார்.

அடியாற்கு நாயனார் அமுதளிக்க விரும்பி, தம்முடைய மனைவியாரைப் பார்க்க, அம்மையார், தன்னுடைய நாயகரிடத்தில் அடியவர்க்குத் தெரியாமல், வீட்டில் பொருளில்லை; கடனும் இந்நேரத்தில் ஒருவரும் கொடுக்க மாட்டார்; என் செய்வது என வருந்தினார். நாயனார் என் செய்வது எனக் கடவுளை

Koviloor Digital Library

நினைத்து வருந்தி நிற்க, அவருடைய மனைவி, அவரை நோக்கி, "தாங்கள் வருந்தற்க; இன்று வயலில் விதைத்துள்ள நெல்லை அள்ளி வாருங்கள். நான் எவ்வாறேனும் அமுதிடுகிறேன்" எனப் பணிந்து கூறினார்.

நாயனார் மகிழ்ந்து தலையில் துணியைப் போட்டுக் கொண்டு, ஓர் கூடையையும் எடுத்துக் கொண்டு அந்நெல்லை வயலில் சென்று வாரி வந்தார். அந்நெல்லைச் சட்டியில் வறுத்து, அதை உரலில் இட்டுக் குத்திப் புடைத்து மாறனாரின் மனைவி அமுது சமைத்தார். தோட்டத்தில் போட்டிருந்த இளங் கீரையைப் பலவிதமாய்ச் சமைத்துப் பெரியோருக்கு அன்புடன் அமுதிட அழைத்தார் நாயனார்.

அச்சமயம் நாயனாரின் பக்திக்கு மெச்சி பரமன், உமாதேவியுடன் விடையிலேறிக் காட்சி அளித்தனர்.

நாயனாரும் அவர் தம் மனைவியாரும் ஆண்டவனின் அருள் வடிவைக் கண்டு ஆனந்தத் தாண்டவம் புரிந்தனர்.

எம்பெருமான், நாயனாரை நோக்கி, "உன்னுடைய தொண்டினுக்கு மகிழ்ந்தோம். உனது மனைவியுடன் எமது இருப்பிடத்தை அடைந்து இன்புற்றிருப்பாயாக" எனக் கூறி மறைந்தார்.

Koviloor Digital Library

5. மெய்ப்பொருள் நாயனார்

சேதி நாட்டில், திருக்கோவலூரில் வேந்தராய் இருந்தவர் மெய்ப்பொருள் நாயனாராவர். அடியார்களின் வேடத்தையே "மெய்ப் பொருள்" என்று அவர் எண்ணி வந்ததால் இப்பெயரை அடைந்தார்.

இப்பெருமான் மலையமான் வம்சத்தில் தோன்றியவர். பகைவரை வென்று நாட்டுக்கு நன்மை செய்வதில் மிக்க அன்புடையவர். அடியார்கள் விரும்பியதை அளித்து ஆதரிக்கும் வள்ளல். கோயிலில் நடக்கும் பூசை, விழா முதலியவற்றை மிகவும் ஆர்வத்துடன் நடத்தி வைப்பார்.

'முக்தநாதன்' என்ற அரசன் நாயனாரிடம் பகைமை கொண்டு அவரை அமருக்கழைத்துப் பல முறை தோல்வியடைந்து அவமான மடைந்தான். இறுதியில் முக்தநாதன், மெய்ப் பொருள் நாயனாரை வெல்ல ஓர் வஞ்சகச் சூழ்ச்சியைக் கைக் கொண்டான்.

முக்தநாதன் உடல் முழுவதும் சைவச் சின்னங்கள் திகழச் சிவனடியாரைப் போன்று வேடந் தாங்கி, மனத்தில் கறுக் கொண்டு. உடைவாளை மறைத்துள்ள ஓர் புத்தகக் கவுளி ஒன்றை ஏந்தி, நாயனார் அரண்மனையை அடைந்தான்.

நாயனார் அப்பொழுது தேவியுடன் பள்ளி அறையில் உறங்கிக் கொண்டிருந்தார். அவரைப் பார்க்க விரும்பிய முக்தநாதன், வாயிற்காப்போனாகிய தத்தனிடம் சென்று, "நான் அரசருக்கு உறுதிப்

Koviloor Digital Library

பொருளைக் கூறப் போகிறேன். அதற்கு இதுவே தக்க சமயம்" எனக் கூறினான்.

தத்தன், "அரசர் உறங்குகிறார். இப்பொழுது நீங்கள் செல்லுதல் தகாது" எனத் தடுத்துக் கொண்டு இருக்கும் பொழுதே உள் நுழைந்து விட்டான் வஞ்சகன். சென்ற அடியார்க்கு இடுக்கண் விளைத்தால் அரசர் கோபிப்பாரே எனப் பயந்து தத்தன் வாளாவிருந்து விட்டான்.

சிவனடியார் வடிவில் உள் நுழைந்த முக்த நாதனைத் தேவியார் கண்டு தன் நாதராகிய நாயனாரை எழுப்பி அடியார் வந்துள்ளதை உணர்த்தினார்.

நாயனார் பரபரப்புடன் எழுந்து சிவனடியாரைப் பணிந்து உபசரிக்க, கபடவேட தாரியான முக்த நாதன். அரசனை நோக்கி, "உங்கள் இறைவன் அருளிச் செய்த ஆகமம் ஒன்று என்னிடமிருக்கிறது. எங்கும் காணப் படாத அந்நூலின் பெருமையை உமக்கு அறிவுறுத்தவே யான் இங்கு வந்தேன்" என்றான்.

இதைக் கேட்ட அரசர் ஆனந்த வாரிதியில் திளைத்தார். "ஐயனே! இதைவிட நான் பெறக்கூடிய பேறுவேறு ஏதேனும் உண்டோ? தயவு செய்து வாசித்தருள்க" என வேண்டினார்.

அரசரின் மொழியைக் கேட்ட முக்தநாதன். "அரசே! உம்முடைய மனைவி இந்நூலை வாசிக்கும் பொழுது இங்கிருத்தல் தகாது" எனக் கூற, அரசரும் தம்முடைய மனைவியை அந்தப்புரம் செல்லும்படிக் கட்டளையிட்டார்.

Koviloor Digital Library

மனைவி சென்ற பிறகு அரசர் அந்நூலை வாசிக்கும்படி வேண்ட, அப்பாதகன் புத்தகக்கவுளியை அவிழ்த்து அதனுள் இருந்த கத்தியால் ஒரு நிமிடத்தில் அரசனைக் குத்தி விட்டான். அந்நிலையிலும் நாயனார் சினங் கொள்ளாமல் தவ வேடம் பூண்ட அப்பாதகனை அவனுடைய சைவச் சின்னத்திற்காகத் தொழுதார்.

வாயிற் காப்போனாகிய தத்தன் அரசன் குத்துண்டதை எவ்வாறோ அறிந்து விட்டான். வாளை உருவி அச்சிவவேடத்தானை வெட்டி எறிய நெருங்கி விட்டான். அரசர் தனது காவலனைத் தடுத்து, "தத்தனே! இவர் சிவனடியார்; இவரைக் கொல்லாதே. இப்பெருமானை வழியில் ஒருவரும் தடுக்கா வண்ணம் காத்துக் கொண்டு போய்விட்டு வருவாயாக" எனக் கூறி முக்தநாதன் குத்திய இடத்திலிருந்து குருதி ஆறாகப் பெருக கீழ் விழுந்தார்.

அரண்மனையில் நடந்த விஷயங்களை எல்லோரும் அறிந்து முக்தநாதனை வளைத்துக் கொண்டனர். ஆயின், தத்தன் அவர்களை அரசர் கூறியதைக் கூறித் தடுத்தான். முக்தநாதனும் யாதொரு இடையூறுமின்றி தன் நாட்டை அடைந்தான்.

மெய்ப் பொருள் நாயனார், சேமமாக முக்தநாதன் வீட்டையடைந்ததைக் கேட்டவுடன் சிவபிரானைத் தியானித்து உயிரை விட்டார். சிவபெருமானும் அவருடைய பக்திக்கு மகிழ்ந்து நாயனாருக்கு இன்ப வீட்டையளித்தார்.

Koviloor Digital Library

6. விறன்மிண்ட நாயனார்

சேர நாட்டில், செங்குன்றூரில், வேளாளக் குலத்தில் விறன் மிண்ட நாயனார் பிறந்தார்.

அவர் நாள்தோறும் சிவனடியார்களை வணங்கி அவர்களுக்கு ஆவன செய்து, பிறகே சிவபிரானை வணங்குவார். மேலும் விறன்மிண்ட நாயனார், சிவத்தலங்களுக்குச் செல்லும் பொழுதெல்லாம் முன், அடியார் திருக்கூட்டங்களுக்கு எதிரே போய் அன்னோரை வணங்கிப் பிறகு சிவபெருமானை அன்னோருடன் வணங்கித் துதிப்பார்.

இவ்வாறு அவர் பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருவாரூரை அடைந்தார். அங்கு வன்மீகநாதரை விறன்மிண்டார் தரிசனம் செய்து கொண்டிருக்கும் பொழுது, அவ்விடத்திற்குச் சுந்தர மூர்த்தி நாயனார் வந்தார். அவர் அடியார்களை வணங்காமல் ஒரு புறமாக ஒதுங்கிச் சென்று சிவபிரானை மட்டும் வணங்கிச் சென்றார்.

இதைக் கண்ட விறன்மிண்ட நாயனார், "அடியார்களை வணங்காமல் சென்ற வன்தொண் டரும் அவரைத் தடுத்தாட்கொண்ட சிவபிரானும் திருத்தொண்டர்களுக்குப் புறம்பாவார்" என்றார்.

விறன்மிண்டர் அடியாரிடத்துக் கொண்டுள்ள அன்பின் உறுதியைக் கண்டு நம்பி யாரூரர் மகிழ்ந்தார். அன்றே அவர் கருத்து முற்றுப் பெற்றது. திருத் தொண்டர் தொகையைப் பாடினார். அத்திருத்

Koviloor Digital Library

தொண்டத் தொகை, விறன் மிண்ட நாயனாருக்குப் பெருமகிழ்ச்சியைத் தந்தது. சிவபிரானும், நாயனாருக்குத் தம் கணங்களுக்குத் தலைவராயிருக்கும் பதவியை அளித்தார்.

7. அமர் நீதியார்

சோழவள நாட்டில் பழையார் என்னும் ஓர் பதியுண்டு. அமர்நீதி நாயனார் அவ்வூரில் வணிகக் குலத்தில் தோன்றியவர். அவர் பெரிய தனவந்தர்.

அச்செல்வத்தைக் கொண்டு அடியார்களுக்குத் திருவமுது அளித்தல், அவர்களுக்கு வேண்டிய ஆடை முதலியன உதவல் முதலிய அருந்தொண்டாற்றி வந்தார்.

திருநெல்லூர் என்ற ஊரில் நடக்கும் உற்சவத்தைக் கண்டு இன்புற அநேக அடியார்கள் செல்வதுண்டு. அவ்வடியார்களுக்கு அன்னமிடும் பொருட்டு நாயனார் ஓர் மடங்கட்டினார். மேலும் அமர்நீதி நாயனார் சுற்றத்தாருடன் அத்திரு மடத்தில் தங்கி, சிவனடியார்களுக்குத் தொண்டாற்றி வந்தார்.

சிவபிரான் நாயனாரைப் பரிசோதிக்கத் திருவுள்ளங்கொண்டு, ஓர் பிரம்மசாரி வடிவந்தாங்கி, இருகோவணமும், திருநீற்றுப்பையையும் ஓர் தர்ப்பக் கட்டையும் கட்டப்பெற்ற ஒரு கொம்புடன் வந்தார்; அமர்நீதி நாயனார் மடத்தை அடைந்தார். அவ்வந்தணப் பிரம்மசாரியைக் கண்டதும் அமர்நீதி நாயனார்,

Koviloor Digital Library

இன்முகத்துடன் வரவேற்று உபசரித்தார். "ஐயனே! இம்மடத்தில் அந்தணரே அமுது படைக்கின்றர். தாங்களும் இம்மடத்திலேயே உண்ணலாம்" என அமர்நீதியார் கூற, அப்பிரம்மசாரியார், "யான் காவிரியில் நீராடி வருவேன்; ஒரு வேளை மழைவரினும் வரும்; என்னிடம் உள்ள இவ்வுலர்ந்த கோவணத்தைப் பாதுகாத்து வைத்து, நான் வந்ததும் தருவீராக" என்றார். அமர்நீதியாரும் சம்மதித்து கோவணத்தை அம்மடத்தில் ஓரிடத்தில் சேமித்து வைத்தார்.

அம்மாணியாரும் நதிக்கு நீராடச் சென்றார் கடவுளின் சோதனையின் காரணமாக மழையும் "சோ"வெனக் கொட்டியது; கோவணமும் மறைந்தது.

பிரமசாரி வடிவம் தாங்கிய சிவபிரான் சொட்டச் சொட்ட நனைந்து கொண்டு நாயனாரின் மடத்தை அடைந்தார்; நாயனாருக்கு விரைவில் கோவணத்தைக் கொணருமாறு கட்டளையும் இட்டார்.

நாயனார் கோவணங் கொணர விரைந்தார். பாவம்! சிவபிரானின் சோதனையால் கோவணம் மறைந்ததை அவர் எப்படி அறிவார்? தேடாத இடமெல்லாம் தேடினார்; படாத பாடு பட்டார்; ஓடினார்; கை, கால், உள்ளம் மூன்றும் ஒருங்கே நடுங்கின. விதியின்றி வெற்றுக் கையுடனும் குனிந்த தலையுடனும் அப்பிரமசாரியை அடைந்தார்; காணாமற் போய் விட்டதெனக் கையை விரித்தார்; "வேறு புதுக் கோவணம் கொண்டு வந்து தருகிறேன்" என விம்மினார்.

எம்பெருமான்தான் சோதிக்க வந்தவராயிற்றே; அவர் ஒப்புவாரா? வெகுண்டார்; குதித்தார் :

Koviloor Digital Library

"கோவணத்தைத் திருடிய கள்வனே?" எனக் கூவினார். "நீ எத்துணை உயர்ந்த பட்டினால் ஆகிய கோவணத்தைக் கொடுத்த போதிலும் யான் ஒப்பேன்" என்றெல்லாம் ஓலமிட்டார்.

நாயனார் நடுங்கிக் கொண்டே, "ஐயனே! தங்களுக்கு இக்கோவணத்திற்குப் பதிலாக எத்துணை திரவியம் வேண்டினும் தருகிறேன். தங்கள் விருப்பத்தைத் திருவாய் மலர்ந்தருள்க" என வேண்டினார்.

பிரமசாரி, "உன் பொன்னும் மணியும் திரவியமும் இங்கு யாருக்கு வேண்டும்; என் கோவணத்திற்கு ஈடாக மற்றொரு கோவணத்தைத் துலாக்கோலில் வைத்து நிறுத்துக் கொடு" என்றார்.

தராசு வந்தது. ஒரு தட்டில் பிரமசாரியின் நனைந்த ஒரு கோவணம் வைக்கப்பட்டது; மற்றொரு தட்டில் பொன்னையும் பொருளையும் வைத்தார்கள்; எவ்வளவு பொன் நிரப்பினும் கோவணத்தட்டு தாழ்ந்தே நின்றது. நாயனாரிடம் இனிமேல் தட்டில் ஏற்றப் பொன் னில்லை, பரமனைத் தியானித்து நாயனாரும், அவர் தம் மனைவியும், அவர்களுடைய அருந்தவப் புதல்வனும் துலாத்தட்டில் ஏறினார்; தட்டுகளும் சமமாயின.

நாயனாரின் தொண்டாற்றலின் பெருமையைக் கண்டு, மண்ணவரும் விண்ணவரும் மலர்மாரி பொழிந்து, "என்னே அமர்நீதி நாயனாரின் அடியார் தொண்டின் திறமை!" எனக் கூறி வாழ்த்தி வியப் படைந்தனர்.

பிரமசாரி சிவபிரானாக உமாதேவியுடன் மழ விடைமேல் தோன்றினார்; நாயனார் அவருடைய மனைவி, புத்திரன் மூவருக்கும் எல்லோருக்கும்

Koviloor Digital Library

மேலான, என்றும் அழியாத நிலையான பதத்தை அருளினார்.

அத்துலாக்கோலே விமானமாகி அப்பக்தர்களைச் சாயுச்சிய பதவிக்கு எடுத்துச் சென்றது.

8. எறிபத்த நாயனார்

சோழ மன்னர்களுக்குரிய தலைநகரங்களில் கருவூரும் ஒன்றாகும். அங்கே "ஆனிலை" என்ற ஓர் அழகிய கோயில் உண்டு. அவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை ஓர் சிவ பக்தர் வழிபட்டு வந்தார். அச்சிவபிரானை வணங்கித் துதித்துவரும் சிவனடியார்களுக்கு எவரேனும் துன்பமிழைப்பின் அவர்களை, அச்சிவபக்தர் கோடாலியால் அடித்துக் கொன்று வந்ததால் அச்சிவபக்தருக்கு "எறிபத்த நாயனார்" என்ற பெயர் வந்தது.

சிவகாமியாண்டார் என்பவர் ஓர் சிவனடியார். அவர் தினந்தோறும் ஆனிலைப் பெருமானுக்குப் பூத்தொண்டு செய்வார். அச்சிவனடியார் நவமிக்கு முன் ஒரு நாள் பூக்கொய்து கொண்டு அதைக் கொடலையில் இட்டு அதைத் தன்னுடைய கொம்பு ஒன்றில் தொங்க விட்டுக் கொண்டு கோயிலை நோக்கிச் செல்வாராயினார்.

அவ்வமயம், சோழனின் பட்டத்து யானை காவிரியில் மூழ்கி பாகர் நடத்த, நடந்து கொண்டு சிவகாமியாண்டரை நெருங்கிற்று. அவர் கைக்

Koviloor Digital Library

கோலிலுள்ள பூக்கொடலையைப் பறித்து இழுத்துக் கீழ் வீழ்த்தி அப்பூக்களை நாசமாக்கிற்று. அடியார்க்கு வெகுளி விரைந்தோடி வந்தது. தன்னுடைய கோலால் அந்த யானையை அடிக்க ஓடினார்; அக்கரியோ கடுகப் பறந்தது. அடியார் முதுமையால் அதைப் பின் தொடர மாட்டாராகிக் கீழ் வீழ்ந்தார். "இன்று பெருமானுக்குப் பூத்தொண்டு செய்ய முடியாமல் போய் விட்டதே" என விம்மி, விம்மி ஓல மிட்டார்.

அச்சமயத்தில் எறிபத்தர் அந்நெறியே வந்தார். சிவகாமியாண்டாரின் அவதியைக் கண்டு அனலென உருகினார்; காரணத்தை வினவினார்; மழுப்படையை எடுத்துக் கொண்டு மாகரி முன் பறந்தார். மழுவை மதக்களிற்றின் மீது வீசினார். யானையும் கதறிக் கொண்டே கருமேகம் மண்ணைத் தீண்டுவது போன்று வீழ்ந்து இறந்தது. யானைப் பாகனும் யானையைக் காத்த மற்றோரும் எறிபத்த நாயனார் மழுவால் மாண்டனர்.

அந்நாட்டை ஆண்டு வந்தவர் புகழ்ச்சோழர். அவர் புகழ்ச்சோழ நாயனார் என அழைக்கப்பட்டு வந்தார். அவர் தன்னுடைய பட்டத்து யானை கொல்லப்பட்டதை அறிந்து வெகுண்டு, "கொன்றவர் யார்? அவனைக் காட்டுக" எனக் கூறி தண்டுடன் புறப்பட்டார்; எறிபத்த நாயனாரைக் கண்டார்; அவரே யானையைக் கொன்றவர் என்பதை அறிந்தார். 'என்ன தீவினை செய்தேன்? சிவனடியாரை எதிர்க்கவோ நினைத்தேன்? பட்டத்து யானை ஏதேனும் அடியார்க்குத் தீங்கிழைத்திருக்க வேண்டும்; இன்றேல் இப்பெரியார் கொன்றிருக்க மாட்டார்' எனக் கருதி அடியாரை நெருங்கி வணங்கினார்.

Koviloor Digital Library

எறிபத்த நாயனாரின் மூலம் யானை கொல்லப் பட்ட காரணத்தை அறிந்தார். அரசர், தன் கையிலுள்ள உடைவாளை உருவி, நாயனார் கையில் கொடுத்து, "அடியார்க்குத் துன்பமிழைத்த இந்த யானைக்கு உரிமையான என்னையும் இவ்வாளால் வீழ்த்துங்கள்" என்று புகழ்ச் சோழ நாயனார் கூறினார்.

எறிபத்தர், புகழ்ச்சோழரின் சிவபக்தியைக் கண்டு மனமுருகி இப்பெரியானுக்கு இடுக்கண் விளைத் தோமே என நினைத்து நொந்து அவ்வாளால் தன்னை அரிந்து கொள்ள விரும்பினார். இதைப் பார்த்த அரசன் அவர் கையைப் பிடித்துக் கொண்டார்.

அந்நிலையில் வானில் ஓர் ஒலி எழுந்தது. "அடியார் களே! உங்களுடைய சிவத்தொண்டின் பெருமையை ஞாலத்திலுள்ளோர்க்கு நன்கு உணர்த்தவே சிவபெரு மான் அருளால் இவையாவும் நடந்தன."

சிறிது நேரத்திற்குள்ளேயே யானையும் யானைப் பாகன் முதலியோரும் தூங்கி விழித்தவர் போல் எழுந்தனர். சிவகாமியாண்டார் பூக்கூடையும் பழையபடி பூ தானாகவே நிறைந்தன.

சிவபிரானின் கருணையின் திறத்தை எண்ணி புகழ்ச்சோழரும் எறிபத்தரும் ஆனந்தத் தாண்டவ மாடினர். யானை மீதேறி சோழர் அரண்மனையை அடைந்தார்; சிவகாமியாண்டாரும் கோயிலை அடைந் தார்; எறிபத்தர் சிவபத மெய்தி சிவகணங்களுள் ஒருவரானார்.

Koviloor Digital Library

9. ஏனாதி நாத நாயனார்

சோழ நாட்டில் உள்ள எயினனூரில் பிறந்தவர் ஏனாதி நாத நாயனார். ஈழக்குலத்தில் தோன்றியவர். அவர் சிவபக்தியில் சிறந்தவர். வாள் வித்தை பயிற்று விப்பது அவர்தம் தொழிலாகும். அதில் வரும் ஊதியத்தைக் கொண்டு சிவனடியார்களுக்கு உதவி செய்து வந்தார்.

ஏனாதிநாதர் காலத்தில் மற்றுமொரு வாள்வீரன் இருந்தான். அவன் பெயர் அதிசூரன். அவனும் மக்களுக்கு வாள்வித்தை பயிற்றுவித்து வந்தான். நாயனார் சிவனருள் பெற்றவராதலால் அதிசூரனை விட அதிக வரும்படியைப் பெற்று வந்தார். அதைக் கண்ட அதிசூரன் பொறாமை அடைந்தான்.

அழுக்காற்றுப் பேயால் தூண்டப்பட்ட அதிசூரன் நாயனாரைப் போருக்கழைத்து, அப்போரில் தோல்வி அடைந்து புறமுதுகிட்டு ஓடினான்.

வீட்டையடைந்த அதிசூரன் நாயனாரை வஞ் சனையாகவெல்லக் கருதி அவரைத் தனியிடத் திற்குப் போரிட அழைத்தான். நாயனாருக்குத் தன் வீரத்தில் சிறிதும் ஐயமின்மையால் கத்தி கேடயங் கொண்டு அதிசூரன் குறிப்பிட்ட இடத்திற்குப் போரிட வந்தார்.

இவர் வந்த சமயம் அதிசூரன் நெற்றியில் திருநீறு இட்டு தன்னுடைய கேடயத்தால் முகத்தை மறைத்துக் கொண்டிருந்தான். எப்பொழுது நாயனார் வாளைத் தூக்கிப் போருக்குத் தயாரானாரோ அப்பொழுதே

Koviloor Digital Library

அப்பாவி, தன் முகத்திற்கு நேராகப் பிடித்திருந்த கேடயத்தை நீக்கி விட்டான். திருநீற்றுடன் கூடிய அதிசூரனைக் கண்டதும் நாயனார், "சிவச்சின்ன முடையாரைக் கொல்லுதல் தகாது" எனக் கத்தியைக் கீழே எறிந்தார். இதுதான் தக்க சமயமென நினைத்து அழுக்காறு கொண்ட அதிசூரன் நாயனாரை அடித்து வீழ்த்தினான்.

சிவபெருமான் தன் தொண்டனின் முன் தோன்றி என்றும் அழியாத பெருவாழ்வை அவருக்கு அளித்து மறைந்தருளினார்.

10. கண்ணப்ப நாயனார்

பொத்தப்பி நாடென்ற ஓர் மலை நாட்டில் உடுப்பூரை ஆண்டு வந்தவன் நாகன் என்ற வேடனா வான். அவனுடைய மனைவி தத்தை என்பவள்.

அவ்வில்லறத்தாருக்கு, கடவுள் அருளால் ஓர் அருமையான புத்திரன் தோன்றினான். முருகனது அருளால் பிறந்த அக்குழந்தையைத் தூக்கியவுடன், அது திண்ணென இருந்ததால் அதற்குத் திண்ணன் என்ற பெயரிட்டனர்.

திண்ணனார் வளர்பிறையென தினே தினே வளர்ந்து, வேடர்களுக்குரிய பல கலைகளையும் கற்றார்.

நாகன் முதுமைப் பருவத்தை அடைந்தான். காட்டில் விலங்கினங்கள் பெருகி மக்களுக்குத்

Koviloor Digital Library

துன்பமிழைத்தன. ஆகையால் திண்ணனார், வேடர் களுடனும், வேட்டைக்குரிய ஆயுதங்களுடனும் காட்டிற்குச் சென்று வேட்டை ஆடினார்.

வேட்டை நாய் மோப்பம் பிடித்துக் கொண்டும், நாக்கைத் தொங்கவிட்டுக் கொண்டும் நாலாபுறமும் ஓடின. வேடர்கள் ஆங்காங்கு வலைகளை வீசி விலங்கினங்களை வளைத்துக் கட்டினர்.

அப்பொழுது கொழுத்த பன்றியொன்று திண்ணனார் கண்ணில் தென்பட்டது. அப்பன்றியைக் கொல்லத் திண்ணனார் ஈட்டியைக் கையில் எடுத்தார். பன்றியும் ஓட்டமெடுத்தது; திண்ணனாரும் அதைத் தொடர்ந்தார்.

திண்ணனார் அப்பன்றியைத் துரத்திச் சென்ற பொழுது அவருடன் நாணன், காடன் என்ற இரு வேடருமே தொடர்ந்து சென்றனர். பன்றி இவர்கள் கைக்கு அகப்படாமல் ஓர் மலை அடியில் உள்ள சோலையில் ஓடி மறைந்து, ஓர் புதருக்குள் ஒளிந்து கொண்டது. திண்ணனார் அப்பன்றி புதருக்குள் மறைந் ததை எவ்வாறோ அறிந்து தன்னுடைய கத்தியை உருவி அப்பன்றியைக் குத்தினார். பன்றியும் வீரிட்டு இறந்தது.

திண்ணனார், நாணன், காடன் என்ற மூவரும் தம்முடைய இடத்தைவிட்டு வெகு தூரம் அப்பன்றி யைத் துரத்தி வந்ததால் மிகவும் களைத்து விட்டார்கள். அப்பன்றியைப் பதப்படுத்தி உண்ணவும், தாகத்தைத் தீர்த்துக் கொள்ளவும் தண்ணீர் உள்ள இடத்தைத் தேடினர். முடிவில் காளத்தி மலைக்கு அருகிலுள்ள பொன்முகலி ஆற்றை அடைந்தனர். அருகில் காளத்தி

Koviloor Digital Library

யப்பர் வீற்றிருக்கும் குன்று உள்ளதைத் திண்ணனார் கண்டார். நாணனை நோக்கித் திண்ணனார், “இம்மலைக் குன்று என்னைப் பரவசப்படுத்துகிறது. இக்குன்றை ஏறிப் பார்க்க விரும்புகிறேன்” என்றார்.

திண்ணனாரின் விருப்பப்படி நாணன், திண்ண னாரை மலைக்கு அழைத்துச் சென்றான். திண்ணனார் காளத்தியப்பரைக் கண்டார். சிவபெருமானின் “கருணை” என்னும் காந்தக்கல் திண்ணனாராகிய இரும்பை உருக்கத் தொடங்கிற்று. திண்ணனார் சிவபிரானைக் கண்டு மெய்மறந்து நாணனை நோக்கி, “இப்பெருமானின் பெயரென்ன?” என்று வினவ, அவன் “குடுமித்தேவர்” என்று கூறினான்.

திண்ணனாரின் முற்பிறவியில் செய்த நல்வினைப் பயனால் எம்பெருமானின் அருட்கண் நோக்கம் திண்ண னாரை அடைந்தது. திண்ணனார் ஆண்டவனைக் கண்டு மெய்ம்மறந்தார். பெருமானைக் கட்டித் தழுவினார்; ஆனந்தக் கண்ணீரால் திருமஞ்சனம் செய்வித்தார்; அன்புருவமாகி ஆண்டவனை நினைந்து உருகினார்.

“எனதப்பனே! எனதின்புருவே!! துணையின்றித் தனியாக இருக்கிறீர்களே! சிங்கம், புலி முதலிய துஷ்ட மிருகங்கள் என் ஆண்டவனைத் துன்புறுத்தினால் என் செய்வேன்? இனி நான் எனதய்யனை விட்டுப் பிரியேன்” என்றெல்லாம் கூறினார்.

சிவபிரானின் முடியில் பூக்கள் சூடப் பட்டிருப் பதைக் கண்டார் திண்ணனார். “நாணா! எம் பெரு மானுக்கு இப்பூக்களை யார் சூட்டினார்?” எனச் சிவபெருமானை அணைந்து கொண்டே வினவினார்.

Koviloor Digital Library

நாணன், "திண்ணரே! ஓர் வேதியர் தினந்தோறும் இக்குடுமித் தேவர் மீது பூக்களைப் பொய்து பொன்முகலி நீரைக் கொட்டி உணவு ஊட்டி வருகிறார்" என்றார்.

நாணனது சொல்லைக் கேட்ட திண்ணனார், "சிவபெருமானுக்கு இவையே விருப்பம் போலும் நானும் அவ்வாறே பூசிப்பேன்" என்று நினைத்துக் கொண்டு மலையை விட்டு இறங்கிப் பூவும், ஊனும், நிரும் கொணர விரும்பினார். ஆயின் ஆண்டவனைப் பிரியவோ மனமில்லாது தவித்தார். இவ்வாறு இருமனப் பட்ட உள்ளத்துடன் பதறிப் பிறகு தேறி ஒருவாறு ஆண்டவனுக்கு உணவூட்ட விரும்பி, கீழ் இறங்கினார்.

பொன்முகலி ஆற்றங்கரையில் காடன் தீக்கடைக் கோலைக் கடைந்து நெருப்பூட்டி நின்றான். திண்ணனார் அவ்விடத்தை அடைந்து தான் கொன்ற பன்றியைத் தானே, தோல், மயிர் முதலியனவற்றை நீக்கி நெருப்பில் வாட்டினார்; வாட்டிய இறைச்சிகளை, பல்லில் வைத்து, "என் ஆண்டவனுக்கு இது மிருதுவாயிருக்குமா? இது மெதுவாயிருக்குமா?" என அதுக்கி அதுக்கிப் பார்த்தார். தன் பல்லுக்கு மிருதுவானவைகளை எடுத்து ஓர் கல்லையில் சேமித்துக் கொண்டார். பூக்களைப் பறித்துத் தன் முடியில் சூட்டிக் கொண்டார். தனது வாய் நிறைய பொன்முகலி ஆற்றின் கண்ணுள்ள நீரை நிரப்பிக் கொண்டார். ஒரு கையில் வில்லுடன் மற்றொரு கையில் வதக்கப்பட்ட இறைச்சிக் கல்லையுடனும் மலையின் மீது ஏறி விட்டார்.

Koviloor Digital Library

திண்ணனாரின் செயலைக் கண்ட நாணனும் காடனும், திண்ணனாருக்கு, குடுமித்தேவரின் பைத்தியம் பிடித்து விட்டதென்றே எண்ணினர். "தான் பசியோடிருந்தும் அவ்விறைச்சியை உண்ணவில்லை; பசியோடிருக்கும் நமக்கும் கொடுத்தாரில்லை" என்றான் காடன். நாணன் காடனை அங்கேயே நிறுத்தி விட்டுத் திண்ணனாரைப் பின் தொடர்ந்து சென்றான்.

திண்ணனார் தனது வாயால் கொண்டு வந்த நீரை, சிவபெருமான் தலையில் அபிடேகம் செய்ய, தனது செருப்புக் காலால் முன் முனிவரால் பூசித்திருக்கப் பட்ட மலர்களை நீக்கினார்; தனது வாய் நீரால் அன்பு அமிழ்தமென ஆண்டவன் தலையில் உமிழ்ந்து, தன் தலையிலுள்ள மலர்களைச் சூட்டி, தன்பல்லால் அதுக்கி அதுக்கிப் பதம் பார்த்த ஊனை, சிவபெருமான் முன் வைத்தார். "ஆண்டவனே! இவ்விறைச்சி மிகச்சுவை நிறைந்தன. இவ்வூனை உமது பசி நீங்க உண்பீராக" என மிக்க அன்புடன் ஊட்டினார் ஆண்டவனும் திண்ணனாரின் அன்புக்கு உவந்தார்.

நாணன் திண்ணனாரை வீட்டிற்கழைத்தான். ஆயின் திண்ணனாருக்கு நாணனின் பேச்சு காதில் விழுந்தால்தானே! திண்ணனார் அக்குடுமித்தேவரை விட்டுப் பிரியார் என்பதை அறிந்த நாணன், திண்ணனாரை விட்டுப் பிரிந்து காடனுடன் திண்ணனாரின் தந்தையுள்ள இடத்தை அடைந்தான்.

நாகனும் தத்தையும் திண்ணனாரின் நிலைமையை அறிந்து திண்ணனார் உள்ள இடத்தை அடைந்து அவரைத் தன்னுடன் வரும்படி வேண்டினார்கள்;

Koviloor Digital Library

திண்ணனாரின் உள்ளத்தைச் சிவபிரானிடம் செலுத்தி விட்டாரே, அவ்வாறு இருக்க அவருடைய தாய் தந்தை மொழிகள் அவர் காதில் எவ்வாறு ஏறும்? தோல்வி அடைந்து திண்ணனாரின் தாயும் தந்தையும் தம்மிருப்பிடத்திற்கு வருத்தத்துடன் திரும்பினர்.

திண்ணனார் இரவு முழுவதும் சிவபிரானுக்குக் காவலாக விழித்திருந்து விடிந்ததும் சிவபிரானுக்கு உணவு சேகரிக்க மலையினின்றிழிந்து காட்டை அடைந்தார்.

திண்ணனார் சென்ற பின் காளத்தியப்பரைப் பூசிக்கும் சிவகோசரியார் என்ற முனிவர் ஆகமவிதிப் படி அருச்சிக்கக் காளத்தியப்பரை அடைந்தார். ஆண்டவனடியில் இறைச்சியும் எலும்புத் துண்டுகளும் சிதறிக் கிடப்பதைக் கண்டு துணுக்குற்றார்; கலங்கி னார்; "எந்தையே! தங்கள் சன்னதியை இவ்வாறு அவக்கோலம் செய்தவர் யாரோ? தாங்கள் எவ்வாறு இத்தகைய அசுத்தங்களைப் பொறுத்துக் கொண்டீர்?" எனக் கதறினார். கடவுளின் கோயிலைப் புனித நீற்றால் சுத்தம் செய்தார். பாவந்தீர புண்ணியாவாசனம் முதலியன செய்தார். பிறகு பூசித்துக் தனது இருப்பிடம் சென்றார்.

திண்ணனார் முதல் நாள் போன்றே காளத்தியப் பரைப் பூசிக்க வேண்டியவைகளை எடுத்துக் கொண்டு வந்தார். சென்ற தினம் போன்றே செருப்புக் காலால் ஆண்டவன் முடி மேலிருந்த நிர்மாலியத்தை நீக்கி, அவரை, தன்னுடைய வாய் நீரால் மஞ்சனமாட்டி இறைச்சியை ஊட்டினார். தன்னை மறந்து பரமனின் பாதத்தில் சிந்தனையைச் செலுத்தி மெய்ம்மறந்து

Koviloor Digital Library

இரவு முழுவதும் பெருமானைத் துஷ்ட மிருகங்கள் ஒன்றும் துன்புறுத்தாதவாறு காத்தார்.

சிவகோசரியார் மறுதினமும் ஆண்டவன் கோயில் அசுத்தமுற்றிருக்கும் நிலையைப் பார்த்து வருந்தினார். பரமன் சிவகோசரியார் கனவில் தோன்றி, "அன்பனே! வருந்தற்க, உனக்கு என்னிடத்தில் எத் துணைப் பக்தியுண்டோ, அத்துணைப் பக்தி நீ பார்த்த பக்தனுக்கும் உண்டு. இவ்வுண்மையை இன்று என் சன்னதியில் மறைந்திருந்து காண்பாயாக" என்றார்.

விழித்தெழுந்த சிவகோசரியார் வியப்புற்று பூசிக்க ஆண்டவனை அணுகினார்; பரமனைப் பூசித்து அக்கோயிலின் அருகில் மறைந்திருந்தார்.

வழக்கம் போல் திண்ணனார் காளத்தி நாதனைப் பூசிக்க வந்தார். காளத்தியப்பர், திண்ணனாரின் பக்தியின் திண்மையைப் பரிசோதிக்க எண்ணி, தமது வலக் கண்ணினின்று உதிரத்தைப் பெருகச் செய்தார். அக்காட்சியைத் தூரத்தில் வந்து கொண்டிருந்த திண்ணனார் கண்டார். "என் ஆண்டவனே! உமக்குத் தீங்கிழைத்தவர் யார்? என் கண்மணியான குடுமித் தேவரை, எப்பாவியோ கண்ணைக் குத்திக் கெடுத் தானே. இதைக் கண்டும் என் உயிர் உடலில் தரித்திருக் கிறதே" எனக் கதறிக் கொண்டே காளத்தியப்பரைத் திண்ணனார் அணுகினார்.

கடவுளை நீராட்டுவதற்காகக் கொண்டு வந்த வாயிலுள்ள நீர் இவர் கதறுகையில் கீழ்ச்சிந்தி மறைந்தது; முடி அவிழ்ந்து பூக்கம் கீழ் உதிர்ந்தன; வில்லும் அம்பும் நழுவின; தேக்கிலைத் தொன்னையில்

Koviloor Digital Library

ஏந்தி வந்த பதப்படுத்திய மாமிசங்கள் நாலாபுறமும் சிதறிற்று.

கதறிக் கதறிப் பைத்தியம் பிடித்தவர் போன்று ஓடினார்; ஆண்டவன் கண்ணிலிருந்து ஒழுகும் குருதியைத் தன் கையால் துடைத்துத் துடைத்து நீக்கப் பார்த்தார்; என்ன செய்தும் நின்ற பாடில்லை. அங்குமிங்கும் ஓடி காயப் பச்சிலைகளைப் பறித்து காளத்தியப்பரின் கண்ணில் கசக்கிக் கசக்கிப் பிழிந்தார்; ஒன்றும் பயனில்லை. இரத்தம் காளத்தியப் பரின் சன்னதியையே சேராக்கி விட்டது. இன்னும் சிறிது தாமதித்தால் ஆறாகவும் ஓடும் போல் தோன் றிற்று. திண்ணனார் செய்வது அறியாது மயங்கினார். அவருடைய மனதில் ஓர் எண்ணம் உதயமாயிற்று. வேடர்களுக்குத் துஷ்ட விலங்குகளால் ஏதேனும் துன்பம் ஏற்பட்டால் அத்துன்பத்தைப் போக்கச் செய்யப்படும் மருத்துவமுறை ஒவ்வொன்றாக அவருக்கு நினைவிற்கு வந்தன. ஊனுக்கு ஊனிட்டால் புண்பட்ட இடம் புனிதம் ஆவதை அறிந்தார். சிறிதேனும் சிந்திக்காது தன்னுடைய வலது கண்ணை, தன்னுடைய அம்பால் தோண்டி எடுத்து ஆண்டவன் வலது கண்ணில் அப்பினார்.

என்ன ஆச்சரியம்! குருதி பெருகுவது நின்று விட்டது. இதைப் பார்த்து, ஆடினார், பாடினார்; ஆனந்த மேலீட்டால் குதித்தார், திண்ணனார்.

மேலும் கடவுள் திண்ணனாரைப் பரிசோதிக்க எண்ணி தமது இடது கண்ணிலிருந்தும் குருதி

Koviloor Digital Library

ஒழுகும்படிச் செய்தார். திண்ணனார் இதைப் பார்த்ததும் வருந்தினார். ஆயினும் முன் போல் பச்சிலையைத் தேடி அலையவில்லை. "நான்தான் மருந்தைக் கண்டு விட்டேனே. இனி எனக்குச் சிறிதும் பயமில்லை" என்று சொல்லிக் கொண்டு தன்னுடைய செருப்புக் காலை, கடவுளின் இடது கண்ணில் அடையாளத்திற்காக வைத்துக் கொண்டு பகழி எடுத்து, தன்னுடைய இடது கண்ணைப் பிடுங்கத் தொடங்கினார்.

என்னே திண்ணனாரின் அன்பு! தனது ஒரு கண்ணை இழந்தும் சிறிதும் தயங்காதவராய்த் தன்னுடைய மற்றொரு கண்ணையும் அகழத் தொடங்கினார்.

சிவகோசரியார் மறைவிலிருந்தே திண்ணனாரின் அன்பின் உறுதியை நினைத்து வியப்புக் கடலில் மூழ்கினார்.

அவ்வமயம் கருணைக் கடலாகிய சிவபெருமான் தம்முடைய கையால், திண்ணனாரின் அம்புடன் கூடிய கையைப் பிடித்துக் கொண்டு, "நில்லு கண்ணப்ப; நில்லு கண்ணப்ப" என்றார். கண்ணைக் கடவுள் கண்ணில் அப்பியதால் "கண்ணப்பன்" என்ற பெயரைக் கொடுத்தார். கடவுளைக் கண்ட ஆறாவது தினத்தி லேயே கண்ணப்பர் காளத்தியப்பருடன் ஒன்று பட்டார்; காளத்தி நாதரின் பக்கலிலேயே கண்ணப்பரும் அமர்ந்தார். தேவர்கள் பூமாரி பொழிந்தனர்.

Koviloor Digital Library

பேறினி இதன்மேல் உண்டோ? பிரான்
திருக் கண்ணில் வந்த
ஊறுகண் டஞ்சித் தங்கண் இடந்தப்ப
உதவுங் கையை
ஏறுயர்த் தவர்தங் கையால் பிடித்துக்
கொண் "டென் வலத்தில்
மாறிலாய், நிற்க" என்று மன்னு
பேரருள் புரிந்தார்.

11. குங்குலியக் கலய நாயனார்

சோழ நாட்டில் "திருக்கடவூர்" என்ற ஊரில் ஓர் நாயனார் இருந்தார். அவர் வேதியர். "கலயனார்" என்பது அவருடைய பெயர். சிவத்தொண்டர்; கோயிலில் குங்குலியம் இட்டுத் தொண்டு புரிவது அவருடைய வழக்கம்.

இவ்வாறு அவர் தொண்டு புரிந்து வரும் நாளில் இறைவன் அவரைப் பரிசோதிக்க எண்ணி வறுமையை அளித்தார். நாயனாரின் நிலம் புலன் செல்வமனைத் தும் ஒழிந்தன. அவரை வறுமைப் பிணி வாட்டமுறச் செய்தது. ஆயினும் சிறிதேனும் சிந்தை கலங்காராய் குங்குலியத் தொண்டாற்றி வந்தார்.

நல்குரவின் கீழ் நாயனாரின் இல்லறத் தருமம் ஊசலாடத் தொடங்கிற்று. அவருடைய மனைவி தம்முடைய திருமாங்கலியத்தை நாயனாரிடம் அளித்து,

Koviloor Digital Library

"ஐயனே! நம்முடைய வீட்டில் குழந்தைகளும், சுற்றத்தாரும் இரண்டு நாளாகப் பட்டினியால் வாடி மடிகின்றனர். இம்மாங்கலியப் பொன்னை விற்று நெல்லும் தானியமும் வாங்கி வாருங்கள்" என்றார்.

நாயனார் அப்பொன்னைப் பெற்றுச் சென்று கொண்டிருக்கும் பொழுது ஒரு வியாபாரி குங்குலியம் விற்றுக் கொண்டு வீதியின் கண் தோற்றமளித்தான். நாயனாரின் உள்ளம் ஆண்டவனிடத்திலேயே இருந்த தால் சிறிதேனும் வீட்டின் நினைவின்றி மனைவியின் மங்கலப் பொன்னைக் கொண்டு அவ்வியாபாரியிட மிருந்து குங்குலியப் பொதியை வாங்கிக் கொண்டார். கோயிலை அடைந்தார்; குங்குலியப் பாண்டத்தில் இட்டு தூபம் போட்டுக் கொண்டு கடவுளை நினைந்து மெய்மறந்து பாடிக் கொண்டிருந்தார்.

அவருடைய மனைவி மக்கள் உறவினர் முதலிய யாவரும் பசியால் வாடி உறங்கி விட்டார்கள். ஆண்டவன் கருணையால் நாயனாரின் வீடு முழுவதும் பொன்னால் நிறைந்தது. விழித்தெழுந்த மனைவி மக்கள், பொன்னையும் பொருளையும் கண்டு வியப்புற்று, பற்பல உண்டி சமைக்க அடுக்குளில் புகுந்தார்.

கோயிலில் நாயனாரும் பசியால் வருந்தித் தன்னை அறியாது உறங்கி விட்டார். அவருடைய கனவில் கடவுள் தோன்றி, "வீட்டிற்குச் செல். உன்னுடைய மனைவி சமைத்துள்ள உணவை உறவினருடனும் மக்களுடனும் உண்பாயாக" எனக் கட்டளையிட்டார்.

கடவுள் ஆணையைக் கண்டு அகமகிழ்ந்து வீட்டையடைந்தார். ஆண்டவன் கருணையைக் கண்டு

Koviloor Digital Library

மகிழ்ந்தார். அன்று முதல் தம்முடைய குங்குலியத் தொண்டில் ஈடுபட்டு சந்தோஷத்துடன் வாழ்ந்து வந்தார்.

இங்கு இவ்வாறிருக்க திருப்பனந்தாளில் சிவ லிங்கத் திருவிழாவுக்குச் சாய்வு நேர்ந்தது. சிவபிரானை நேராகச் செய்து வழிபட அவ்வூர் அரசன் விரும்பி னான். தன்னுடைய சேனைகளைக் கொண்டு அச்சிவ பெருமானை நேர் நிலைக்குக் கொண்டு வர முயன் றான். ஆயின் சிவபிரான் நிமிரவேயில்லை. அரசன் வருந்தி நின்றது குங்குலியக் கலய நாயனாரின் காதுவரை எட்டியது.

நாயனார் திருப்பனந்தாளையடைந்து தானும் கடவுள் திருப்பணியில் ஈடுபடுவதாக அரசனிடம் கூறினார். சிவபெருமான் மேல் ஓர் கயிற்றைக் கட்டி அதன் மற்றொரு பக்கத்தைத் தன்னுடைய கழுத்தில் கட்டிக் கொண்டு இழுத்தார். நாயனாரின் அன்புக் கயிற்றால் ஆண்டவன் நிமிர்ந்தார். அரசன் களிப்புற்று நாயனாரைக் கொண்டாடினார்.

நாயனார் தன்னுடைய திருப்பணியை விடாது செய்து ஆண்டவன் அடி நீழலை அடைந்தார்.

12. மானக் கஞ்சாற நாயனார்

"கஞ்சாறூர்" என்ற பதியில் தோன்றியவர் மானக் கஞ்சாற நாயனார்.இவர் வேளாண் குலத்தில் பிறந்தார்.

Koviloor Digital Library

சிவனடியார்களை, "சிவன்" எனவே பாவிக்கும் தன்மை உடையவர். அடியார்கள் வேண்டியதை அனைத்தும் குறிப் பறிந்து கொடுக்கும் வள்ளல் நாட்டின் சேனாதிபதி.

இத்தகையப் பெரியாருக்கு நெடுநாள் வரை மகப்பேறில்லாமலிருந்தது. நாயனார் வருந்தி நீலகண்டனை வழுத்தினார். கருங்கண்டனின் அருளால் ஓர் பெண் மகவு உதித்து, அம்மகவும் தக்க பருவத்தை அடைந்தது.

மானக் கஞ்சாற நாயனார் பெண்ணை ஏயர் கோன் கலிக்காம நாயனாருக்கும் மணம் செய்விப்பதாக நிச்சயம் செய்யப்பட்டது. கஞ்சாறூரில் உள்ள நாய னாரின் வீடு அலங்கரிக்கப்பட்டு உறவினரும் குழுமினர்.

ஏயர்கோன் கலிக்காமர் மணக்கோலத்துடன் உறவினர்களும், நண்பர்களும், முதியோரும், மகளிரும் புடைசூழ கஞ்சாறூருக்கு வந்து கொண்டிருந்தார். கலிக்காமர் கஞ்சாறூரை அடைவதற்கு முந்தியே சிவபெருமான், மானக்கஞ்சாற நாயனாரைப் பரிசோதிக்க வெண்ணி சிவனடியார் கோலந்தாங்கி நாயனார் வீட்டில் நுழைந்தார்.

அம்மாபெரும் விருதரைக் கண்ட நாயனார் பலவாறு அகங்குழைய உபசரித்து, "ஆண்டவன் விரும்பியது யாது?" என அடியாரை வினவினார். சிவபெருமான், "உன்னுடைய பெண்ணின் கூந்தல் மிகவும் அழகாயிருக்கிறது. அதை நான் மிகவும் விரும்புகிறேன். களைந்து கொடுத்தால் நான் களிப்புடன் என் இருப்பிடம் செல்வேன்" என்றார்.

Koviloor Digital Library

இம்மொழியைக் கேட்ட நாயனார், "மணத் திற்காக நிற்கும் பெண்ணாயிற்றே, எவ்வாறு அமங்கல மாகக் கூந்தலைக் களைவது?" எனச் சிறிதேனும் சிந்திக்காது தனது அருமைப் பெண்ணின் மேகமெனத் திகழும் கூந்தலைத் தம்முடையக் கத்தியால் அறிந்து சிவனடியாரிடம் கொடுத்து விட்டார்.

அக்கூந்தலைப் பெறுவது போல் கை நீட்டி ஆண்டவன் திடீரென மறைந்து உமையாளுடன் தன்னுடைய சுய உருவத்துடன் காட்சியளித்தார். "அன்பனே! உன்னுடைய திண்மையான அன்பைப் பரிசோதிக்கவே யாம் வந்தோம். நீ என்றும் வாழ் வாயாக!" எனக் கூறி மறைந்தார்.

மகளின் கூந்தலும் மாயம்போல் கார்மேகமென வளர்ந்து நீண்டது. ஏயர்கோன் கலிக்காமர் சிவபிரான் நாயனாருக்குக் காட்சியளித்ததைக் கேட்டு மகிழ்ந்து அவர் பெண்ணை மணந்து தமதிருப்பிடம் சென்றார். நாயனாரும் ஆண்டவனிடமே தனது சிந்தையைச் செலுத்தி வீட்டின் இன்பத்தைத் துய்த்தார்.

13. அரிவாட்டாய நாயனார்

"கணமங்கலம்" என்ற ஒரு ஊர் சோழ நாட்டில் இருக்கிறது. அவ்வூரில் "தாயனார்" என்ற பெயருடைய ஒருவர் இருந்தார். அவர் மிக்க செல்வந்தர். அவர், நாடோறும் செந்நெல் அரிசி, செங்கீரை, மாவடு என்ற இம்மூன்றையும் சிவபிரானுக்கு நைவேத்தியம் செய்து பூசித்து வந்தார்.

Koviloor Digital Library

அப்பெரியாரின் பக்தியின் முதிர்ச்சியைப் பரிசோதிக்க சிவபிரான் எண்ணங் கொண்டார். அவர் செல்வமெல்லாம் கரைந்து வறுமையில் வருந்தும்படிச் செய்தார். நாயனார் அப்பொழுதும் சிறிதும் தயங்காமல் கடவுளைப்பூசித்து வந்தார்.

செல்வராயிருந்த நாயனார் கூலிக்கு நெல்லறுக்கப் புகுந்தார். கூலியாகப் பெருஞ் செந்நெல்லை ஆண்டவனுக்கு அமுதாக்குவார். கார் நெல்லை அறுத்தும் பெறுங்கார் நெல்லைத் தமக்கு உண்ணஉணவாக எடுத்துக் கொள்வார்.

தாயனார் இவ்வாறு வாழ்ந்து வரும் நாளில், ஆண்டவன் மேலும் நாயனாரைச் சோதிக்க எண்ணி வயல் முழுவதும் செந்நெல்லாகவே விளையும்படிச் செய்தார். தான் பெறுங்கூலியெல்லாம் ஆண்டவனுக்கே அளித்து தான் பட்டினி கிடந்தார்.

நாயனாரின் மனைவியார் தனது கணவன் பட்டினி இருப்பதைப் பொறாது தம்முடைய வீட்டின் தோட்டத்திலுள்ள இலைக்கறிகளைக் கொய்து அதைச் சமைத்துத் தன் கணவனுக்கு இட்டு வந்தார். அவ்விலைக்கறியும் அற்றுப் போயின. தண்ணிரே அவருக்கு உணவாயிற்று.

ஒரு நாள் நாயனார் தாம் பெற்ற செந்நெல் அமுதையும், செங்கீரையையும், மாவடுவையும் பெற்றுக் கொண்டு ஆண்டவனைப் பூசிக்கச் சென்று கொண்டிருந்தார். அவருடைய மனைவி பஞ்சகவ்யத்தை எடுத்துக் கொண்டு தன்னுடைய கணவருடன் பின் சென்றார். இவ்வாறு சென்று

Koviloor Digital Library

கொண்டிருக்கும் பொழுது நாயனார் பட்டினியினால் வாடியிருந்ததால் கால் தவறித் தள்ளாடிக் கீழே வீழ்ந்தார். அவர் மனைவியாராலும் தடுக்க முடிய வில்லை. கூடையில் எடுத்துச் சென்றவைகள் கீழ் விழுந்து சிதறிப் பூமியில் இருந்த வெடிப்புக்குள் புகுந்தன.

அன்று கடவுளைப் பூசிக்க முடியாமல் போய் விட்டதே எனத் தாயனார் வருந்தி, தன்னுடைய அரிவாளை எடுத்துத் தன் முன் கழுத்தை அரிந்து கொள்ளத் தீர்மானித்தார். அரிவாளைக் கழுத்துக்குக் கொண்டு வந்து விட்டார். அப்பொழுது மாவடு முதலியன சிந்திய வெடிப்பினின்று ஓர் கை எழுந்து நாயனாரின் அரிவாள் பிடித்த கையைத் தடுத்தது; அவ்வெடிப்பினின்று மாவடுவை வெடுக் வெடுக் கெனக் கடித்துத் தின்னும் ஓசையும் எழுந்தது. எங்கும் நிறைந்த எம்பிரான் அவ்வெடிப்பிலும் நின்று தன் னுடைய பக்தன் கொடுத்தவைகளை உண்டு கொண்டே தாயனாரின் அரிவாள்' கையையும் பிடித்துத் தடுத்தார்.

ஆண்டவனின் கருணையைக் கண்டு மெய்ம் மறந்து நிற்கும் அத்தம்பதிகளை சிவபிரான் பார்த்து, “உமது பக்திக்கு மகிழ்ந்தோம்” எனக் கூறி அவர்களுக்குப் பெறுதற்கரிய பேற்றைக் கொடுத்தார்.

அரிவாளால் கழுத்தை அரிந்து கொள்ள முயன்றதனால் தாயனாருக்கு “அரிவாட்டாய நாயனார்” என்ற பெயர் உண்டாயிற்று.

Koviloor Digital Library

14. ஆனாய நாயனார்

மழ நாட்டில் திருமங்கலம் என்ற ஊரில் தோன்றியவர் ஆனாய நாயனார். இவர் ஆயர் குலத்தைச் சேர்ந்தவர். இவர் சிவபெருமானிடம் மிக்க அன்புடையவர்.

இப் பெரியவர், இடையர்களுக்கெல்லாம் தலைவராக இருந்து பசுக் கூட்டங்களைக் காத்து வந்தார். இவர் குழல் வாசிப்பதில் மிக்க விருப்ப முடையவர்.

ஒரு நாள் இப்பெரியவர் ஆனிரைகளைக் கொண்டு காட்டுக்குள் சென்றார். அக்காலம் கார் காலம். அக்கானகத்தில் பூத்து நின்ற ஓர் கொன்றை மரத்தைப் பார்த்தார். அதைப் பார்த்ததும் சிவபிரானைப் போன்றே அம்மரம் அவருடைய அகக் கண்ணிற்குத் தோற்றமளித்தது.

தமது வேய்ங் குழலில் பஞ்சாட்சரத்தைப் பண்ணில் அமைத்து மிக அழகாகப் பாடினார். அவ்வனத்தில் மேய்ந்து கொண்டிருந்த ஆனிரைகள் அவ்வேய்ங் குழலின் ஓசையைக் கேட்டு ஓடோடியும் வந்து நாயனாரைச் சுற்றிக் கொண்டு தம்மை மறந்து நின்றன. ஆடும் மயில்கள், பறவைகள் முதலியவைகளும் தத்தம் தொழிலை மறந்து அவரைச் சூழ்ந்து நின்றன. துஷ்ட விலங்குகளும் தம்மை மறந்து நின்றன. தேவர்களும் மெய்ம்மறந்து நாயனாரின் குழலோசையில் ஈடுபட்டு நின்றனர்.

துஷ்ட விலங்குகள் கான இசையில் ஈடுபட்டு அங்கு குழுமி இருப்பதை அறியாது மான் முதலிய

Koviloor Digital Library

விலங்குகளும் தன்னை மறந்து அங்கு கூடின. கானகத்தில் ஓடும் நதிகளும் தடைபட்டு நின்றன எனின் அவருடைய குழலோசையின் பெருமையை எவ்வாறு கூறுவது?

எங்கும், எவ்வுலகத்திலும் இசையின்பம் பரவிச் சிவமயமாயின. சிவபெருமான் காதிலும் இவ்விசை எட்டிற்று. அப்பெருமானும் ஆனாய நாயனார் இசையில் ஈடுபட்டு அவரை அடைந்தார். "அன்பனே! ஐந்து எழுத்துக்களையும் (பஞ்சாட்சரம்) நீ சுருதியில் அமைத்துக் குழலில் வாசித்த இனிமை எம்மைக் களிக்கச் செய்தது. இவ்வாறே என்னிடத்தை அடைவாய்" எனத் திருவாய் மலர்ந்தருளினார். நாயனார் ஆண்டவனை அடைந்து மகிழ்ந்தார்.

15. மூர்த்தி நாயனார்

மதுரை மாநகரில் வணிகர் குலத்தில் பிறந்தவர் மூர்த்தி நாயனார் என்பார். அவர் அடியாரிடம் அன்பு கொண்டு சிவபக்தியில் சிறந்து விளங்கினார்.

அம்மூர்த்தி நாயனார் சொக்கலிங்கப் பெருமானுக்கு, சந்தனக் காப்பிடுவதைத் தன் திருத் தொண்டாகக் கொண்டவர்.

இஃது இவ்வாறிருக்கையில் வடுகக் கர்நாடக மன்னன், பாண்டியனை வென்று அவனுடைய அரியணையைக் கைப்பற்றினான். அவன் சமண சமயப் பற்றுடையவன். அதன் காரணமாக அவன் சிவனடி

Koviloor Digital Library

யார்களைத் துன்புறுத்தி வந்தான். இந்நிலையிலும் மூர்த்தி நாயனார் தம்முடைய திருத்தொண்டில் சிறிதும் மனங்கலங்காமல் செய்து வந்தார்.

அவ்வடுக மன்னன் மூர்த்தி நாயனாரையும் துன் புறுத்த எண்ணம் கொண்டான். எத்துணை இடையூ றிழைத்தும் நாயனார், தன் திருத்தொண்டினின்றும் சிறிதும் நீங்கினாரில்லை. சந்தனக் கட்டைகள் நாயனா ருக்குக் கிட்டாதவாறு செய்தான். நாயனார் வருந்தி பகலெல்லாம் அலையாத இடமெல்லாம் அலைந்தும் சந்தனக் கட்டை அகப்படவில்லை. நாயனார் வருந்தி கோயிலுட் புகுந்தார். சொக்கலிங்கப் பெருமானுக்கு அன்று செய்யும் சந்தனக் காப்புத் திருத்தொண்டிற்கு ஏற்பட்ட இடையூறை எண்ணி வருந்தினார்.

இறுதியில் தன் கையை சந்தனக் கட்டையாகக் கொண்டு சந்தனக் கல்லில் தேய்க்க ஆரம்பித்தார். இரத்தம் பெருகி முழங்கையின் உள் எலும்பும் தெரிய லாயிற்று. ஆண்டவன் தன்னுடைய பக்தனின் அன்பின் உறுதிக்கு மகிழ்ந்தார். "அன்பனே! உன்னுடைய முதிர்ந்த அன்பிற்கு மகிழ்ந்தேன்; இனி உன்னுடைய கையைத் தேய்த்துக் கொள்வதை நிறுத்து வாயாக; இன்றுடன் கொடுங்கோல் மன்னன் ஒழிந்து படுவான்; நீ அவ்வரசை ஏற்று எமக்குத் தொண்டு புரிந்து வருவாயாக" என வானிலிருந்து சொற்கள் எழுந்தன.

ஆண்டவன் அருளினால், தேய்ந்த நாயனாரின் கை முன்னிலையை அடைந்து பொலிவுற்றது. அவ்வமயம் அவ்வூர் வடுக மன்னன் இறந்தான். அவனுக்குத் தகன காரியங்கள் செய்யப்பட்டன. அம்மன்னனுக்கு அரசை

Koviloor Digital Library

ஏற்றுக் கொள்ளத் தக்க உரிமையாளர் ஒருவரும் இல்லாததால் மந்திரிகள் கூடி, "யாரை அரசராக்கு வது?" என்ற சர்ச்சையில் இறங்கினர். இறுதியில் பட்டத்து யானையின் கண்ணைக் கட்டி விடுதென்றும், அது யாரைத் தன் முதுகில் ஏற்றி வருகிறதோ அவரை அரசராக்குவது என்றும் தீர்மானித்தனர்.

யானையின் கண் கட்டப்பட்டு விடப்பட்டது. அது வீதியெல்லாம் சுற்றிச் சோமசுந்தரக் கடவுளின் ஆலயத்தின் அருகிலுள்ள மூர்த்தி நாயனாரை ஏற்றி வந்தது. அவரைக் கண்டதும் அமைச்சர் அனைவரும் அரசை ஏற்கும்படிப் பணிந்து, நாயனாரை வேண்டிக் கொண்டனர்.

நாயனார் மந்திரிகளை நோக்கி, "சமணம் அழிய வேண்டும்; சைவ சமயம் தழைக்க வேண்டும். யான் சிவச்சின்னங்களைத் தரித்தே அரசாளுவேன். இதற்குச் சம்மதமாயின் யான் அரசை ஏற்றுக் கொள்வேன்" எனக் கூறினார்.

மந்திரிமாரும் அவருடைய கொள்கையைச் சிரமேற் கொண்டார். நாயனாரும் சொக்கரைப் பணிந்து அரசை மேற்கொண்டு, சிவபக்தியில் உறுதி கொண்டு, திருநீறு, கண்டிகை, சடைமுடி முதலியன அணிந்து பல நாள் அரசு புரிந்தார். இறுதியில் பரமனின் பாதத்தை அடைந்தார்.

Koviloor Digital Library

16. முருக நாயனார்

இவர் சோழ நாட்டில் திருப்புகலியூரில் பிறந்தவர். அந்தணர் மரபினர். இவர் சிவபக்தியிலும் அடியார் பக்தியிலும் மிக்கவர்.

இவர் தினந்தோறும் கொடிகளில் பூக்கும் படியான நித்திய மல்லிகை, கொடி மல்லிகை, சம்பங்கி, சாதிப்பூ முதலிய பூக்களையும்; மரத்தில் மலரும் பூக்களாகிய மகிழம்பூ, மனோரஞ்சிதம், கொன்றை, பாரிஜாதம் முதலியவைகளையும்; செடியில் பூக்கும் ரோஜா, சாமந்தி, மல்லி முதலிய பல பூக்களையும் கொண்டு சிவபிரானைப் பூசித்து வந்தார்.

பல வண்ணப் பூக்களைக் கொண்டு பலவித மாலைகள் கட்டுவார். அம்மாலைகளைச் சிவ பிரானுக்குச் சூட்டி மகிழ்வார். அல்லும் பகலும் அவருக்கு அஞ்செழுத்தாகிய பஞ்சாட்சரமே, பிறவிப் பிணியை நீக்கும் மந்திரமாயிற்று. அகங்குழைந்துருகி ஆண்டவன் சிந்தையன்றி வேறு ஒன்றையும் எண்ணாராயினார்.

இவ்வாறு இவர் வாழ்ந்து வரும் நாளில் திருஞான சம்பந்தருக்கு நண்பரானார். ஞான சம்பந்தர், மணக்கோலத்துடன் தோணியப்பரை அடைந்த பொழுது, இவரும் அவருடன் முக்தி இன்பத்தை எய்தினார்.

Koviloor Digital Library

17. உருத்திர பசுபதி நாயனார்

நிலங்களில் சிறந்தது, "சோழ நாடு" என்று எல்லோரும் கூறுவர். எந்நாட்டிற்கும் இல்லாத சிறப்பு சோழ நாட்டிற்கு ஏற்பட்டதற்குக் காரணம் அந்நாட்டில் பாயும் "பொன்னி" என்ற பெயருடைய காவிரி நதியின் பெருமையே ஆகும்.

அத்தகைய நன்னாட்டில் உள்ள திருத்தலை என்ற ஊரின்கண் பிறந்தவர் நம்முடைய உருத்திர பசுபதி நாயனார்.

இவர் அந்தணர் குலத்தில் பிறந்தவர். சிவனிடத்தில் நீங்கா அன்பு கொண்டவர். அவ்வூரின் கண் நீர் நிரம்பிய ஓர் தாமரைத் தடாகம் இருந்தது. அதில் நாயனார் கழுத்தளவு ஆழத்தில் நின்று கொண்டு தினந்தோறும் ஸ்ரீ ருத்திர மந்திரத்தை ஓதி வந்தார். இவர் இவ்வாறான சிவத்தொண்டை ஆற்றி வந்து பரமன் பாதத்தை அடைந்தார்.

ருத்திர மந்திரத்தைத் தினந்தோறும் ஓதி வந்த காரணத்தால் அவர் "ருத்திர பசுபதி நாயனார்" என்ற பெயரை அடைந்தார்.

18. திருநாளைப் போவார் நாயனார்

சோழ நாட்டின் கண்ணுள்ள ஆதனூர் என்ற ஊரில் பஞ்சமர் மரபில் உதித்தவர் நந்தனாராவார்.

Koviloor Digital Library

நந்தனாருக்கு நிலபுலன்கள் இருந்தன. அவைகளின் விளைவு அவர்தம் வாழ்விற்குப் பயன்பட்டு வந்தது. ஆலயங்களுக்கு, பேரிகைகளுக்குரிய தோல், வார் முதலியனவும், வீணை, யாழ் முதலிய நரம்புக் கருவிகளுக்கு வேண்டிய 'நரம்புகளும் சிவபிரானுக்குச் செய்ய வேண்டிய புசைக்குரிய கோரோசனையும் அவர் கொடுத்து வந்தார். அவர் பஞ்சமர் வகுப்பினராயினும், அவர்களால் தொழப்படும் காளி, காத்தவராயன் முதலிய கடவுளைத் தொழாமல் சிவபிரான் கழலையே தன்னுடைய இருதயத்தில் வைத்துச் சிந்தித்து வந்தார். பஞ்சமர்கள் கடவுளைத் தொழும் முறையை வெறுத்து சாந்தசொரூபியான சிவபிராளைத் தொழுவதிலேயே நந்தனாரின் மனம் சென்றது. என்றும் கோயில் வாயிலில் நின்று சிவபெருமானை வணங்குவதில் அவருக்கு விருப்பம் அதிகம்.

நந்தனார் இவ்வாறு தன் வாழ் நாட்களைச் செலுத்திக் கொண்டிருக்கும் பொழுது திருப்புன்கூர் சிவலோகநாதனைக் கண்டு பணிய வேண்டும் என்ற ஆவல் அவருக்கு அதிகமாய் உதித்தது. அதன் காரணமாக அவர் திருப்புன்கூர் சென்றார். திருப்புன் கூர் வாயிலில் நின்று சிவலிங்கப் பெருமானை நேரே கண்டு தொழ விரும்பினார். அன்பர் விரும்புமாறு அருள்புரிய, சிவபெருமான் திருவுள்ளங் கொண்டு தம்மிடமுள்ள நந்தியம் பெருமானை விலகி நிற்கக் கட்டளை இட்டார். நந்தனார் ஆண்டவனைப் பணிந்து ஆனந்தவாரிதியில் மூழ்கினார். அவ்வூரில் ஓர் பள்ளம் அக்கோயிலின் அருகில் இருப்பதைக் கண்டு

Koviloor Digital Library

அதை ஓர் பெரிய குளமாக வெட்டி வைத்துத் தமது இருப்பிடம் சென்றார்.

பல சிவத்தலங்களுக்குச் சென்று கோயில் வாயிற்படியில் நின்று ஆண்டவனைப் பணிந்து வந்தார். இவர் பஞ்சமர் வகுப்பினராதலால் கோயிலினுள் செல்வதை ஒருவரும் ஒப்பவில்லை.

இப்பெரியாருக்குச் சிதம்பரநாதரான நடராஜப் பெருமானைத் தரிசிக்க வேண்டுமென்று மிக்க ஆவல் உண்டாயிற்று. நடராஜனின் நடனத்தைப் பார்க்க விரும்பினார். இவரைக் கோயிலில் யார் விடுவார்? ஆயினும் இவருடைய பற்று அளவு கடந்து விட்டது. "இன்று கட்டாயம் போக வேண்டும்" என்று நினைப்பார். "நாம் பஞ்சமர் மர்பில் பிறந்தவராயிற்றே? எவ்வாறு கோயிலுட் புகுவது? நாளை போவோம்" என்று நினைப்பார். "நாளை போவேன், நாளை போவேன்" என்று பல நாட்களைக் கழித்தார். இதன் காரணமாகவே இவருக்குத் "திருநாளைப் போவார்" என்ற பெயர் உண்டாயிற்று. ஆண்டவனைக் காணும் ஆவல் இவரைப் பைத்தியமாக்கி விட்டது. கூத்தன் கூத்தைக் காண இவர் அல்லும் பகலும் உருகி பத்தரானார். இறுதியில் எவ்வாறேனும் போயே தீர்வது என்ற உறுதியான எண்ணம் கொண்டார். தில்லையை அடைந்தார்.

தில்லையில் அந்தணர்கள் வேதமோதிக் கொண்டு இருந்தனர்; யாக சாலையில் யாகத்திற்காக வேதங்கள் ஓதப்பட்டு யாகங்கள் நடந்து கொண்டு இருந்தன. சில மன்றங்களில் மாணவர்கள் ஆசானிடம் வேதமோதும்

Koviloor Digital Library

அந்தணர்கள் குழுமியிருக்கும் எல்லையை அணுகுவதற்கே அஞ்சினார். தில்லையின் எல்லையைச் சுற்றிச் சுற்றி வந்தார். எவ்வாறு ஆண்டவன் திருக்கூத்தை, ஆனந்தத் தாண்டவத்தைக் கண்டு மகிழ்வேன் என ஏங்கினார்; தவித்தார்; உருகினார்; நொந்தார்; இளைத்தார்; களைத்தார்; உறங்கினார்.

அன்புருவம் கொண்டு, தன் தொண்டர்களை இன்புருவாக்கும் நிருத்தன் நந்தனாரின் கனவில் தோன்றினார். "அன்பா! நீ இப்பிறவியை நெருப்பில் மூழ்கி நீக்கிவிட்டு, அந்தணருடன் நம்மை வந்தடைவாய்" என்று புன்சிரிப்புடன் கூறினார். ஆண்டவன் அருளைக் கண்டு அடிமை ஆட்டங் கொண்டார்; நித்திரை தெளிந்தார்; ஓடினார்; ஆடினார்; பாடினார்.

இவர் இவ்வாறு இருக்கையில் நடராஜப் பெருமான் தில்லைவாழ் அந்தணர்களின் கனவிலும் தோன்றினார்; நந்தனாரின் பெருமையையும், பக்தியையும், அவருடைய விருப்பத்தையும் எடுத்துணர்த்தினார். அவருக்கு உடலை நீக்க எரிமூட்டும்படிக் கட்டளையிட்டார்.

தில்லை வாழ் அந்தணர்கள் எழுந்தார்கள். ஒருவரை ஒருவர் சந்தித்து ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டனர். ஒவ்வொருவர் கனவிலும் ஆண்டவன் அருளியதைக் கண்டு பேராச்சரிய முற்றனர்; எல்லோரும் ஒன்று கூடி நந்தனாரைக் காண விழைந்து புறப்பட்டனர்.

நந்தனார், தம்மை அந்தணர்கள் அணுகி வரும் காரணத்தை அறியாராய் மயங்கினார். "புலையனும்

Koviloor Digital Library

புல்லறிவுமுடைய என்னை இவர்கள் எதற்காகத் தேடி வரவேண்டும்?" என நினைத்துக் கொண்டிருக்கும் பொழுதே, தில்லை மறையவர் அனைவரும் நந்தனாரைச் சூழ்ந்து கொண்டனர். அம்மறையவர் அனைவரும், நந்தனாரை நோக்கி, "ஐயனே! தங்களை அழைத்துச் சென்று ஏரியில் மூழ்குவிக்குமாறு ஆண்டவன் பணி. ஆகையால் வருவீராக" என, நந்தனாரும் அகமகிழ்ந்து ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கினார்.

பெரிய குழி வெட்டி, கட்டைகளை அடுக்கி நெருப்பு மூட்டினர். அதில் நந்தனார் சித்தத்தைச் சிவன்பால் செலுத்தி மூழ்கினார்.

அந்த நந்தனாரின் பொய்யுடல் மாய்ந்தது; புனித உடல் பெற்று, முப்புரி நூலும் திருசடையும் கொண்டு முனிவர் உருவில் வெளிப்பட்டார். அது கண்டு தேவர்களெல்லோரும் மலர் மாரி சொரிந்தனர். தில்லை அந்தணர்கள் அம்முனிவராகிய நந்தனாரைப் பணிந்து கோயிலிற்குள் அழைத்துச் சென்றனர். பொன்னம்பலப் பெருமானைக் கண்டார். ஆனந்தங் கொண்டு மெய் மறந்தார். ஆண்டவன் நந்தனாரை ஆட்கொண்டார்.

நந்தனாரைக் காணாது சன்னதியில் நின்ற தில்லை வாழ் அந்தணர் திகைத்தனர்.அப்பொழுது அவர்கள் உள்ளத்தில், "அன்பனுக்கேது அடிமையும் தீண்டாமையும்? ஆண்டவன் தான் ஆட் கொண்டு விட்டார்" என்று தோன்றிற்று.

Koviloor Digital Library

19. திருக்குறிப்புத் தொண்டர் நாயனார்

அறம் வளர்த்த செல்வி வீற்றிருக்கும் காஞ்சி என்னும் திருப்பதியில், சலவையாளர் குலத்தில் பிறந்த ஒரு சிவத் தொண்டர் இருந்தார். அவர் அடியார்களின் மனக் கருத்தை அறிந்து அவர்களுக்குத் தொண்டு புரிந்து வந்ததால் அவருக்குத் "திருக்குறிப்புத் தொண்டர்" என்ற பெயர் உண்டாயிற்று.

அவ்வண்ணார் சிவத்தொண்டர் அடியார்களின் துணிகளை வெளுத்துத் தருவார். அவருடைய பக்தியைச் சோதிக்க எண்ணிச் சிவபெருமான், ஓர் அழுக்கேறிய வஸ்திரத்துடனும், வாடிய உடலுடனும் திருக்குறிப்புத் தொண்டனார் வீட்டை அடைந்தார். அப்பெரியாரின் உடல் மெலிவையும் அழுக்கேறிய கந்தைத் துணியையும் கண்ட நாயனார் பதைத்தார்.

வறிஞர் வடிவந்தாங்கி வந்த அச்சிவபிரானை அணுகி, "ஆண்டவனே! தம்முடைய இவ்வழுக்கேறிய துணியைக் கொடுங்கள்; அதை வெளுத்துத் தருகிறேன்" என்று நாயனார் கூறினார்.

இதைக் கேட்ட வந்த அடியார், "நாயனாரே! இவ்வஸ்திரத்தைத் தவிர வேறு வஸ்திரம் என்னிடமில்லை. என் உடல் குளிரை இது தான் தாங்கி நிற்கிறது. இது இல்லாவிடின் குளிரால் யான் இறந்து படுவேன்; ஆகையால் இவ்வுடையை இன்று பொழுது போவதற்குள் வெளுத்து உலர்த்தித் தர முடியுமானால் எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறினார்.

Koviloor Digital Library

நாயனார், "ஐயனே! சிறிதும் கவலையுறாதீர். நான் இன்று பொழுது போவதற்குள் வெளுத்துத் தருகிறேன்" என்று கூறி அவருடைய உடையை வாங்கிக் கொண்டு வெளுத்து வரச் சென்றார்.

அக்காலத்துச் சிவபிரான் பரிசோதனை செய்ய மேகங்களை ஏவினார். ஏழு மேகங்களும் ஒருங்கு திரண்டு மழையை இடை விடாமல் சொரிந்தன. சிவனடியார் என் செய்வார்? பாவம்! திகைத்தார்; தவித்தார்; "வீட்டினிடத்துள்ள அடியார்க்கு என் கூறுவேன்? வாக்குப் பொய்த்தவனாவேனே; அந்தோ! இத்துணியைப் பொழுது வோதற்குள் உலர்த்தித் தராவிட்டால் மெலிந்த உடலையுடைய அச்சிவனடியார்க்கு ஊறு செய்தவனாவேனே" என்றெல்லாம் புலம்பி ஏங்கினார்.

மழைதான் அடியாரைச் சோதிக்க வந்ததாயிற்றே. அது விடுமா? பொழுது போகும் வரை சோனை மாரியாகப் பொழிந்து கொண்டே இருந்தது. தொண்டர் காலம் கடந்ததை அறிந்தார். "இனி நான் இவ்வுடலுடனும் பொய் வாக்குடனும் சிவனடியார் முன் செல்லேன், செல்லேன்" எனக் கூறிக் கொண்டே தம்முடைய தலையைத் தோய்க்கும் பாறாங்கல்லில் மோதிக் கொண்டு இறக்கத் துணிந்தார். அவர் தலையை மோதுமளவில் அக்கல்லிலிருந்து ஓர் கை எழும்பி அடியார் தலையைத் தாங்கிக் கொண்டது. மாமழை ஒழிந்தது. தேவர்கள் மலர்மாரி பொழிந்தனர்.

சிவபிரான் அறம் வளர்த்த செல்வியுடன் விடைமேல் காட்சியளித்தார். திருக்குறிப்புத் தொண்ட

Koviloor Digital Library

நாயனார் தம்மை மறந்து ஆண்டவனைப் பணிந்து நின்றார். சிவபெருமான் நாயனாரைப் பார்த்து, "உம்முடைய பக்தியின் திண்மையைச் சோதிக்க எண்ணியே யாம் வறிஞர் வேடத்தில் வந்தோம். நீ நம்முடைய சாயுஜ்ய பதவியை அடைவாயாக" எனக் கூறி மறைந்தார்.

20. சண்டேசுர நாயனார்

திருச்சேய்ஞலூர் என்ற திருப்பதி சோழ நாட்டில் உள்ளது. அப்பதியின்கண் அந்தணர் மரபில் காசியபர் கோத்திரத்தில் பிறந்தவர் நம்முடைய நாயனார். இவருடைய பெயர் விசார சருமர் என்பது. இவருடைய தந்தையின் பெயர் எச்சதத்தன். தாயின் பெயர், பவித்திரை.

விசாரசருமருக்கு முற்பிறவியின் நல்வினைப் பயனாக அவருடைய ஐந்தாவது வயதிலேயே வேதாக மங்களை நன்கு அறிந்தார். கிரமமாக அவருடைய ஏழாவது வயதில் பெற்றோர் அவருக்கு உபநயனம் செய்வித்தனர். உலக தர்மத்திற்கு ஒவ்வ ஆசிரியர், விசாரசருமருக்கு வேதம் முதலிய கலைகளைக் கற்பிக்கத் தொடங்கினார். அவ்வாறு அவர்கள் கற்பிக்கும் பொழுது முன்னதாகவே விசாரசருமர் வேதாகமங்களை உணர்ந்துள்ளதை அறிந்து ஆச்சரிய முற்றார். மேலும், "வேதாகமங்கள் கடவுளை வணங்கு வதற்கும் அவரிடம் அன்பு செலுத்து வதற்குமே" என

Koviloor Digital Library

அறிந்து அவ்வாறே விசாரசருமர் கடவுளிடத்து அன்பு செலுத்தி ஒழுகி வந்தார்.

ஒரு நாள் விசார சருமர் அவருடைய நண்பனான ஒரு மாணாக்கருடன் தெருவில் சென்று கொண்டு இருந்தார். இவர் செல்லும் நெறியில் பசுக்களும் கன்றுகளும் மேய்ந்து கொண்டு இருந்தன. அக்கன்று களில் ஒன்று இடையனை முட்டப் போயிற்று. அம்மேய்ப்பவன் அதைப் பொறானாய் அதை மேய்க்கும் கோலால் அடித்தான். இதைப் பார்த்த விசார சருமர் பதை பதைத்து வருந்தினார். சிவ பெருமானுக்குப் பாலாபிஷேகம் செய்வதற்குப் பசுவே உபயோகப்படுகிறதல்லவா? அதனுடைய சாணம் திருநீராக ஆகிறது. பஞ்சகவ்யமளித்து அசுத்தத்தை நீக்கிப் புனிதமாக்குகிறது. சிவபிரானுக்கு வேண்டிய பஞ்சகவ்யத்தை அதுவே கொடுக்கிறது. இப்பசுக்களின் இனத்தைச் சேர்ந்த இடபமே சிவபெருமானின் ஊர்தியாகவும் காணப்படுகிறது. ஆகையால் பசுக்களை மேய்க்கும் தொழிலை மேற் கொள்ளுவோம். ஆனிரை களையும் அதன் கன்றுகளையும் அடித்துத் துன் புறுத்துபவர்களிடமிருந்து காப்போம் என விசார சருமர் எண்ணினார். அன்று முதல் பசுக்களை மேய்க்கும் தொழிலையும் மேற் கொண்டார்.

அவ்வூர் அந்தணர்களின் பசுக்களைத் தினந் தோறும் அவ்வூர் மணியாற்றங்கரையிலும், வேறிடங் களிலும் மேய்த்து வந்தார்; பசுமையான புற்கள் எங்கெங்கு காணப்படுமோ அங்கெல்லாம் சென்று பசுக்களுக்குப் புல்லை அரிந்து ஊட்டுவார்; நன்னீர்த்

Koviloor Digital Library

துறைகளை அணுகி அப்பசுக்களுக்கு நீர் அருந்தச் செய்வார். அவருடைய பாதுகாப்பில் வந்த பிறகு பசுக்கள் மழமழவென செழித்து வளர்ந்தன.

நாளடைவில் பசுக்கள் தங்கள் கன்றுகளையும் மறந்தனவாய் விசார சருமரிடத்திலேயே பிரியங் கொண்டு ஆனந்தமாய்க் காலங்கழித்து வந்தன. விசார சருமரைக் கண்டதும் தம்மடியிலுள்ள பாலைச் சொரிந்து விடும். பசுக்கள் அன்பால் சொரியும் பால், "சிவபிரானுக்கே உகந்ததல்லவா? அவருக்கே திருமஞ்சனம் செய்ய வேண்டும்" என்று நினைத்தார்.

மணி ஆற்றங்கரையில் ஓர் ஆத்தி மரத்தடியில் மணலினால் ஓர் சிவலிங்கம் அமைத்து, அம்மண லினாலேயே கோயிலும் மதிலும் கூட அமைத்தார்; ஆத்தி முதலிய பூக்களைக் கொண்டு அருச்சித்தார்; பசுக்களின் பாலைக் கொண்டு அபிஷேகம் முதலியன செய்தார். பசுக்கள் சிவபெருமானிடம் தம்முடைய பால் அனைத்தும் சொரிந்த போதும் தம்முடைய எஜமான் வீடுகளிலும் சிறிதும் குறையாமல் பால் கொடுத்துக் கொண்டு வந்தன. இது சிவபிரானின் அனுக்கிரகம் அல்லவா?

விசார சருமரின் செய்கையை ஒருவன் அவ்வூர் அந்தணர்களுக்குத் தெரிவித்து விட்டான். இதைக் கேட்ட அந்தணர்கள் விசார சருமரின் தந்தை எச்சதத்தரை அழைத்து விசார சருமரின் செய்கையைத் தெரிவித்தனர். எச்சதத்தர் தாம் அதைக் கவனிப்பதாகக் கூறி மறுநாள் விசாரசருமர் மாடுகளை மேய்க்க

A. No. 26741
LIBRARY, KOVILOOR
Koviloor Digital Library

ஓட்டிக் கொண்டு செல்லும் பொழுது தானும் மறைந்து, மறைந்து அவருடன் சென்றார்.

விசார சருமர் வழக்கம் போல் சிவபெருமானுக்கு, பசுக்கள் அன்புடன் கொடுத்த பாலைக் குடங் குடமாகச் சொரிந்து அபிஷேகம் செய்தார். இதைப் பார்த்த அவருடைய தந்தை வெகுண்டு ஓர் நீண்ட மூங்கில் கொம்பால் விசார சருமரை நன்கு முதுகில் புடைத்தார்.

சிவ பூசையில் ஈடுபட்ட அப்பெரியார் சிறிதேனும் அவ்வடியை அறியாதவராய் எம்பெருமானைப் பூசித்துக் கொண்டே இருந்தார். இறுதியில் மிக்க கோபம் கொண்ட எச்சதத்தர் அபிஷேகத்திற்காக வைத்திருந்த பாற் குடங்களைத் தன்னுடைய தடியால் நொறுக்கினார்.

அபிஷேகம் செய்து கொண்டிருந்த பாற் குடங்கள் நொறுங்கினதும் விசார சருமர், "அச்சிவ அபராதம் செய்தவர் யார்" என்பதை நோக்க, "தனது தந்தையே" என்பதை அறிந்தார். "சிவபெருமானுக்கு அபராதம் செய்த யாவரும் தண்டனைக்கு உரியவரே" என்பது அவருடைய கொள்கை. எடுத்தார் பக்கத்தில் உள்ள ஆனிரையை ஓட்டும் கோலை; வீசினார் தனது தந்தையின் காலை நோக்கி, அக்கோல் ஆண்டவன் கை மழுவென எச்சதத்தர் காலை வெட்டியது. மறுபடியும் விசார சருமர் பூசையில் ஆழ்ந்தார்.

பெருமான் அவருடைய தீவிர பக்தியைக் கண்டு ஆனந்தமுற்று விடையின் மீது விசார சருமருக்குக் காட்சி அளித்தார். ஆண்டவனைக் கண்ட விசா

Koviloor Digital Library

சருமர் ஆனந்தத் தாண்டவம் ஆடினார். சிவபெருமான் விசார சருமரை நோக்கி, "என்னிடத்தில் இருக்கும் அன்பால் உன் தந்தை எனப் பாராது அவரையும் தண்டித்தாய். இனி மேல் உனக்கு நானே தந்தை" எனக் கூறி அவரை அணைத்துக் கொண்டார். விசார சருமரது மேனி சிவமயமாயிற்று. அப்பொழுது சிவபிரான், "இனி நீ தொண்டர்களுக்குத் தலைவன் நான் துய்க்கும் பொருட்கள் உனக்குமாகக் கடவது; உனக்குச் சண்டேஸ்வர பதத்தைத் தந்தோம்" எனக் கூறி மறைந்தார்.

எச்சதத்தன் சிவபக்தனால் வெட்டுண்டமையால் அவர் குற்றம் நீங்கி, சுற்றத்தாருடன் சிவபதவியை அடைந்தனர்.

குழந்தைகளே! நீங்கள் சிவன் கோயிலுக்குச் சென்று திரும்பும் பொழுது சண்டேஸ்வரருக்குத் தெரிவித்து வரவேண்டும் என்று கூறுகிறார்களே ஏன்? அவருக்குத் தெரிவித்தால்தான், "நாம் சிவ தரிசனம் செய்த பலனை அடைவோம்" என்பது பெரியோரின் கொள்கை.

21. திருநாவுக்கரசு நாயனார்

திருமுனைப்பாடி என்ற நாட்டில் திருவாமூர் என்ற பெயருள்ள ஓர் ஊர் உண்டு. அவ்வூரில் வேளாள ஜாதியில் குறுக்கையர் குடியில் பிறந்தவர் நாவுக்கரசர். இவருடைய தாயின் பெயர் மாதினியார் ; தந்தையின்

Koviloor Digital Library

பெயர் புகழனார். நாவுக்கரசரின் பிள்ளைத் திருநாமம் மருண் நீக்கியார். இவருக்கு ஓர் மூத்த சகோதரி உண்டு. அவர் பெயர் திலகவதியார்.

திலகவதியாருக்கு வயது பன்னிரண்டு ஆனதும் கலிப்பகை என்ற பெயருடைய ஒருவருக்கு மணம் முடிக்க நினைத்திருந்தார். அக்கலிப்பகையார் ஓர் சேனாதிபதி. கலியாணம் ஆவதற்கு முந்தியே வடக்கே போர் செய்ய வேண்டியதற்காகக் கலிப்பகையார் அனுப்பப் பட்டார் அவர் போருக்குச் சென்ற சில நாட்களில் திலகவதியாரின் தாயும் தந்தையும் விண்ணுலகு எய்தினர். “கலிப்பகையாரும் சண்டையில் இறந்தார்” என்ற செய்தி எட்டியது.

அன்று முதல் திலகவதியார் துறவு நிலையை அடைந்து சிவபெருமானையே தொழுது வந்தார். தனது சகோதரனாகிய மருணீக்கியாருக்கும் அற நெறியை உபதேசித்தார். மருணீக்கியாரும் துறவு பூண்டு சமய ஆராய்ச்சி செய்யத் தொடங்கினார்.

சமய ஆராய்ச்சியில் ஈடுபட்ட மருணீக்கியார் சமண சமயத்தில் பற்று கொண்டு பாடலீபுத்திரம் சென்றார்.

அவருடைய புலமையைக் கண்டு சமணர்கள் அவருக்குத் தருமசேனர் என்ற பெயரளித்து, அவரைத் தமது குருவாகக் கொண்டார்கள். மருணீக்கியாரும் புத்த சமயத்தோரை வாதில் வென்று சமண மதத்தை உயர்த்தினார்.

சிவநெறியில் நின்ற திலகவதியார் தன்னுடைய சகோதரன் செய்கையை நினைத்து ஆறாத்துயரில்

Koviloor Digital Library

மூழ்கினார். திருவதிகை வீரட்டானேஸ்வரரை நோக்கி, மருணீக்கியாரைச் சைவநெறியில் திருப்ப வேண்டு மென வேண்டிக் கொண்டார். எம்பெருமானும் திலகவதியாரின் கனவில் தோன்றி, "நீ கவலையுறாதே. நான் மருணீக்கியாரைச் சைவ நெறியில் ஈடுபடும்படிச் செய்வேன்" என்று கூறினார்.

சிவபிரான் அருளால் மருணீக்கியாருக்கு வயிற்றில் நோயுண்டாயிற்று. சமணர்கள் தம்மால் முடிந்தவரை மந்திர தந்திரங்களால் அந்நோயைப் போக்க முயன்றனர். ஆயின் நோய் அதிகமாயிற்றே யன்றி கொஞ்சமேனும் குறைந்தபாடில்லை. மருணீக்கியார் தமது சகோதரியை நினைத்து அவருக்கு ஆளனுப் பினார். திலகவதியார்,மருணீக்கியாரின் நோயைக் கேள்வியுற்று வருந்தினார். ஆயினும் "சமணர் வசித்து வந்த இடத்திற்குத் தனக்கு வர விருப்பமில்லை" என்று கூறி அனுப்பி விட்டார்.

மருணீக்கியாரும் வேறு வழியின்றி தனது சகோதரியை அடைந்தார். சகோதரி திலகவதியார் பணிந்த மருணீக்கியாரை எழுப்பி அவரை, "அன்று முதல் சைவ நெறியைக் கடைபிடித்து ஒழுக வேண்டும்" என்று கூறி, திருநீற்றுப் பையைத் திறந்து சூலை நோயுள்ள இடத்தில், சிவபெருமானைத் துதித்து அவ்விபூதியைப் பூசினார். நோய் இருந்தவிடம் தெரியாமல் பறந்து விட்டது. மருணீக்கியாரும் "உண்மை சமயம் சைவ சமயமே" என்பதை அறிந்தார். திருவதிகை வீரட்டானேஸ்வரர் கோயிலை அடைந்து சிவபெருமானை வலம் வந்து பணிந்தார்.

Koviloor Digital Library

சிவபெருமான் அருளால் அவருக்குப் பாடும் வல்லமையுண்டாயிற்று. அந்நிமிடத்திலிருந்தே அவருடைய வாயிலிருந்து அழகிய இன்னிசை அமைந்த தேவாரப் பதிகங்கள் எழுந்தன. கடவுளும் அவருடைய பண்களைக் கேட்டு மகிழ்ந்து "நாவுக்கரசன்" என்ற பெயரை அளித்தார். அன்று முதல் அவருக்கு அப்பெயரே வழங்கலாயிற்று.

சமணர்கள் மருணீக்கியார் சைவ சமயத்தைப் பின்பற்றியதை அறிந்து வெகுண்டு தம்முடைய அரசனிடம் கூறினர். அரசன் பல்லவன், திருநாவுக்கரசரை வருத்த, மந்திரிகளைத் திருவதிகை அனுப்பினான் மந்திரிகள் திருவதிகை சென்று தம்முடைய அரசன் அழைப்பதாகக் கூறினார்கள்.

மருணீக்கியார் பல்லவனின் எண்ணத்தை அறிந்தும் சிறிதும் பயமின்றி மந்திரிகளின் சொற்களுக்கிணங்கிப் பாடலீபுரம் அடைந்தார்.

மருணீக்கியாரை, சமண சமயத்தை விட்டுச் சைவநெறியைக் கைப்பற்றியதற்காகச் சுண்ணாம்புக் காளவாயிலில் போட்டார்கள். நாவுக்கரசர் சிறிதேனும் மனக்கலக்கமின்றிச் சிவபெருமானைப் பாடி நின்றார் அக்காளவாய் அவருக்கு இனிய மலர்கள் நின்றார். தடாகம் போன்று குளிர்ந்திருந்தது. இவ்வாறு ஏழு நாட்கள் அந்நீர் அறையிலேயே கிடந்தார். ஆயினும் சிறிதேனும் அவர் துன்புறவில்லை.

இதைக் கண்ட சமணர்கள் வியப்புற்று நாவுக்கரசருக்கு விஷத்தைக் கொடுத்தார்கள்; கொலை

Koviloor Digital Library

யானையைக் கொண்டு அதன் காலின் கீழ் நாவுக்கர சரை இடர வைத்தனர்.

கற்பாறையுடன் சேர்த்துக் கட்டிக் கடலில் எறிந்தனர். ஆயின் சிவபெருமானின் நாமத்தை எப்பொழுதும் பாடிக் கொண்டிருந்த அந்நாவுக்கரசரை இவையொன்றும் வருத்தவில்லை.

கடலில், அக்கல்லையே தோணியாகக் கொண்டு கரையேறிய நாவுக்கரசர் திருவதிகையை அடைந்தார்.

பல்லவன் இதைக் கேள்வியுற்று நாவுக்கரசரின் மகிமையை அறிந்து அவனும் சமண சமயத்தைத் துறந்து சைவ மதத்தைத் தழுவினான். சமணப் பள்ளியை எல்லாம் இடித்துத் தள்ளினான். திருவதி கையில் குணபரவீச்சரம் என்ற ஓர் சிவன் கோயிலைக் கட்டினான்.

நாவுக்கரசர் அநேக தலங்கள் சென்று சிவ பெருமான் பேரில் அழகிய தேவாரப் பண்களைப் பாடினார். திருப்பெண்ணாடகம் என்ற ஊரிலுள்ள கோயிலிலுள்ள சிவபெருமானால் சைவக்குறி இருதோளிலும் பொறிக்கப் பெற்றார்.

அவர் காளத்தியப்பரைத் தரிசிக்கத் திருக்காளத்தி சென்றார். காளத்தி நாதரைத் துதித்துப் பாடியதும் அவருக்கு வடகயிலையைத் தரிசிக்க வேண்டுமென்ற விருப்பமுண்டாயிற்று.

கயிலை நாதரைக் கயிலையின் கோலத்தோடு தரிசிக்க விரும்பி நடந்தார். சிறிது நாட்கள் சாக மூல பழங்களை உண்டார். அவைகளையும் ஒழித்து

Koviloor Digital Library

நிர்மலமாய்ச் சிவபெருமானை மனத்தில் தியானித்து இராப்பகல் விடாமல் வனம் வனாந்திரங்களிலும், பாலைவனத்திலும் நடந்தார். அவருடைய கால்கள் கணைக்கால் வரை தேய்ந்து விட்டன. பிறகு கையால் தாவித் தாவி நடந்தார். கைகளும் தேய்ந்தன. மார்பினால் ஊர்ந்து சென்றார். உடலிலுள்ள தசை நரம்புகள் அனைத்தும் தேய்ந்து எலும்பு ஒன்றே மிஞ்சின.

நாவுக்கரசரின் மூலமாக இன்னும் அநேகப் பாடல்கள் பூமியிலுள்ள பாமர மக்களுக்குப் பயன் பட வேண்டுமென்று கயிலை நாதர் கருதினார். அதன் காரணமாக அப்பெருமான் கயிலை தரிசனத்தை நாவுக்கரசருக்கு அருளவில்லை. விடாப் பிடியாக நாவுக்கரசர் கயிலையை நோக்கி வருவதைக் கண்ட சிவபெருமான், தான் ஓர் தவமுனி வடிவங்கொண்டு அப்பர் எதிரில் நின்றார்.

நாவுக்கரசர் மேல் செல்லமாட்டாமல் பெருமானைத் தியானித்துக் கிடந்தார். அம்முதிய தவ முனிவர் நாவுக்கரசரின் முன்தோன்றி, "நீ உருப் பெல்லாம் அழிந்து போகும்படி எங்கு செல்லுகிறாய்?" என்று வினவினார் "ஐயனே! நான் கயிலை நாதனைக் கண்டாலன்றி இவ்வழியும் உடலைக் கொண்டு திரும்பிச் செல்லேன்." என்று நாவுக்கரசர் கூறினார். அவருடைய மன உறுதியைக் கண்ட முனிவர் மறைந்து, "நாவுக்கரசனே! எழுந்திரு. கயிலை தரிசனத்தை உனக்குத் திருவையாற்றில் காட்டுவோம். இங்குள்ள தடாகத்தில் மூழ்கினால் திருவையாற்றில் கரையேறு வாய்" என்று திருவாய் மலர்ந்து அருளினார்.

Koviloor Digital Library

நாவுக்கரசரின் உடல் முன் இருந்ததை விட மேலும் பலமுள்ளதாகவும் அழகுள்ளதாகவும் ஆயிற்று. பெருமானைத் துதித்து அவருடைய கட்டளையை நினைத்து, தடாகத்தில் மூழ்கினார். திருவையாற்றில் கரையேறி கோயிலை அணுகினார். அங்கு கயிலை நாதரைக் கயிலையின் கோலத்தில் கண்டார்; ஆனந்தத் தாண்டவமாடி அநேக திருப்பதிகங்களை இயற்றினார். மேலும் பல தலங்கள் சென்று பாக்களைப் பாடினார்.

இறுதியில் புகலூர் என்ற ஊரில் நாவுக்கரசர் சிவனடி நீழலை அடைந்தார்.

இவரால் பாடப்பட்ட தேவாரப் பதிகங்களே ஆறாந் திருமுறையாகும்.

22. குலச்சிறை நாயனார்

பாண்டிய நாட்டில் மணமேற்குடி என்ற ஒரு ஊர் உண்டு. அவ்வூரில் குலச்சிறையார் பிறந்தார். இப்பெரியார், நின்ற சீர் நெடுமாறன் என்ற பாண்டிய மன்னனுக்கு முதல் மந்திரியாக இருந்தார்.

குலச்சிறையார் சிவபக்தியுடையவர், சிவத் தொண்டர்களே அவருடைய நெருங்கிய உறவினர்கள். அவர்களுக்குத் தொண்டாற்றுவதே தன்னுடைய கடமை என்று நினைப்பவர். சிவனடியார்களைக் காணின் சிவபெருமானே வந்து விட்டதாக நினைத்து

Koviloor Digital Library

அன்னோரை உபசரித்து அவர்களுக்கு வேண்டியன கொடுத்து மகிழ்வார்.

பாண்டியனின் மனைவி மங்கையர்க்கரசியாரும் சிவத் தொண்டில் ஈடுபட்டவர். அவ்வம்மையாருக்குக் குலச்சிறையாரும் தொண்டாற்றுவதற்கு வேண்டிய உதவிகள் புரிவார்.

இவ்வாறு இருந்துவரும் நாளில் பாண்டியன் சமண சமயத்தில் பற்று வைக்க அதைக் கண்ட மங்கையர்க்கரசியார் வருந்தினார். திருஞானசம்பந்தரை அழைக்க, குலச்சிறையாரை ஏவினார். குலச்சிறையார் திருஞான சம்பந்தரைத் தருவித்து, சமண சமயம் அழியவும் சைவ சமயம் ஓங்கவும் வேண்டிய முயற்சிகளைச் செய்தார்.

திருஞானசம்பந்தர் சமணர்களை வாதில் வென்று அவர்களைக் கழுவிலேற்றும்படிச் செய்தார். குலச்சிறையாரின் முயற்சியால் சைவ சமயம் பாண்டிய நாட்டில் பெருகலாயிற்று.

வெகு நாட்கள் சிவபக்தியில் ஈடுபட்டு, பெருமானின் பாதங்களை அடைந்தார்.

23. பெருமிழலைக் குறும்ப நாயனார்

மிழலை நாட்டிலுள்ள மிழலை என்ற ஊரில் பிறந்தவர் குறும்பர். அவர் மிழலை என்ற ஊரில் பிறந்ததால், பெருமிழலை குறும்ப நாயனார் என்ற பெயரை அடைந்தார்.

Koviloor Digital Library

இவர் சிவனடியார்களைத் தமது இரு கண்களைப் போன்று பாவித்துத் தொண்டாற்றி வந்தார். "அடியார்களுக்கு அன்னமளித்து அவர்களுக்கு வேண்டியன செய்வதே அவருடைய கடமை" எனக் கருதி வந்தார்.

இவருக்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகளிடம் கணக்கிட முடியாத அன்புண்டு. குறும்ப நாயனார் எப்பொழுதும் சுந்தரமூர்த்தி நாயனாரைத் தியானித்து வந்த காரணத்தால் அவருக்கு அஷ்டமா சித்திகளும் கூடலாயின. நாயனார் பஞ்சாட்சரத்தை எப்பொழுதும் ஓதி யோகத்தில் அமர்ந்து விடுவார்.

ஒரு நாள் சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கயிலாயம் செல்லப் போவதை இவருடைய யோக வலிமையால் அறிந்தார். இப்பெருமானும் சுந்தரமூர்த்தி நாயனாரை விட்டுப் பிரிய மனமின்றி தமது யோகத்தின் பலத்தால் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு முன் வடகயிலையை அடைந்தார்.

24. காரைக்கால் அம்மையார்

காரைக்காலில் வசித்து வந்த தனதத்தன் என்ற ஓர் வணிகனின் மகளாவர்ள் காரைக்கால் அம்மையார். இவர் பிள்ளைத் திருநாமம் புனிதவதியார்.

இவ்வம்மை சிறு வயதிலேயே சிவத் தொண்டில் மிக்க பற்றுடையவர். விளையாட்டிலேயே சிவ பெருமான் சம்பந்தப்பட்ட விளையாட்டுக்களைத்

Koviloor Digital Library

தான் விளையாடுவார். இவ்வாறு அவர் நாளடைவில் வளர்பிறைச் சந்திரனைப் போன்று வளர்ந்து திருமணப் பருவமடைந்தார்.

நாகப்பட்டினத்திலுள்ள நிதிபதி என்ற வணிகத் தலைவனின் புத்திரன் பரமதத்தனுக்குப் புனிதவதி யாரை மணம் செய்து கொடுத்தனர். புனித வதியாரைப் பிரிய விருப்பமில்லாமல், அவருடைய தந்தை தனதத்தன் தன்னுடைய மருமகனைத் தன்னூரிலேயே இருந்து வியாபாரம் செய்யுமாறு வேண்டிக் கொண் டான். தன் வீட்டிற் கருகிலேயே தன்னுடைய பெண்ணுக்கும் ஓர் வீடு கட்டிக் கொடுத்தான். புனிதவதி யாரும் பரமதத்தனும் ஒருயிரென காரைக்காலிலேயே இல்லறம் நடத்தி வந்தார்கள்.

புனிதவதியார் தம்முடைய வீட்டில் நாள் தோறும் சிவனடியார்களுக்கு அமுதூட்டி வந்தனர். அவர் களுக்கு வேண்டிய பொருட்களையும் அளித்து வந்தனர்.

ஒரு நாள் பரமதத்தனுக்கு அவரைக் காண வந்தவரில் ஒருவர் இரண்டு மாங்கனிகள் கொடுத் தார்கள். அதை வேலையாள் மூலம் வீட்டில் புனிதவதி யாரிடம் சேர்க்கும் படி அனுப்பினார். அச்சமயம் ஓர் சிவனடியார் அமுதுண்ண வந்தார்.

புனிதவதியார் அச்சிவனடியாரை முறைப்படி உபசரித்து அமுதுண்ண அழைத்தார். அவருக்கு அமுது படைக்கும் பொழுது கறியமுது ஆக வில்லை. ஆகையால் தன்னுடைய கணவனால் அனுப்பப்பட்ட இரண்டு மாங்கனிகளில் ஒன்றை அடியாரின் கலத்தில்

Koviloor Digital Library

இட்டு அமுது படைத்தார். அடியார் உண்டு புனித வதியாரை ஆசீர்வதித்து தமது இருப்பிடம் சேர்ந்தார்.

பரமதத்தன் பகல் உணவு சாப்பிட வீட்டிற்கு வந்தான். புனிதவதியாரும், கணவனுக்கு வேண்டியன செய்து அமுது படைத்தார். அவர் அனுப்பிய மாங்கனியில் சிவனடியாருக்குப் படைத்தது போக மீந்த கனி ஒன்றைக் கணவனுக்குப் படைத்தாள். அக்கனியின் இனிப்பைக் கண்ட பரமதத்தன் தான் அனுப்பிய மற்றொரு கனியையும் தனக்கிடுமாறு கேட்டான். புனிதவதியார் சிவனடியாருக்கு அக்கனி யைக் கொடுத்து விட்டதால் ஒன்றும் சொல்ல மாட்டாதவராய், உட் சென்று சிவபெருமானை நோக்கித் தியானித்தார். பரமனது அருளால் ஓர் மாங்கனி அவருடைய கையில் வர அதைக் கணவனுடைய இலையில் படைத்தார். அதை உண்ட பரமதத்தன் அதனுடைய தெய்வீகமான அளவற்ற சுவையைக் கண்டு, "இப்பழம் நான் அனுப்பியதல்ல. இப்பழம் உனக்கு எங்கிருந்து கிடைத்தது?" என அம்மையாரை வினவினார்.

புனிதவதியார் பொய் சொல்ல முடியாமல், கடவுளால் தனக்கு அருளப்பட்டது இக்கனியென்றும், பரமதத்தனால் அனுப்பப்பட்ட கனியில் சிவனடி யாருக்கு ஒன்று போட்டு விட்டதாகவும் கூறினார்.

பரமதத்தன் அதை நம்பாதவனாய், திரும்பவும் அம்மாதிரி கனி ஒன்று தருவித்துத் தரும்படிக் கூறினான். புனிதவதியார் அவ்விடத்தை விட்டு நீங்கி உட்சென்று, "எம்பெருமானே! மற்றுமொரு கனி

Koviloor Digital Library

அருளல் வேண்டும். இல்லாவிடில் நான் பொய்யுரைத்தேன் என எல்லோரும் என்னைப் பழிப்பார்கள்" என்று மனம் உருகத் துதித்தாள்.

பரமன் இரங்கி அம்மையார் கையில் மாங்கனி வர அருள் புரிந்தார். அம்மையார் அக்கனியைக் கணவனது கலத்தில் இட்டாள். பரமதத்தன் அதைப் பார்த்து வியப்புற்றிருக்கும் பொழுதே அக்கனி மறைந்தது. புனிதவதியாரின் தெய்வீகத் தன்மையை அறிந்த பரமதத்தன் அவளுடன் வாழ அச்சமுற்று, வாணிபம் செய்யும் காரணத்தை முன்னிட்டு அவரை விட்டுப் பிரிந்தான். பாண்டிய நாட்டை அடைந்து அங்கோர் பெண்ணை மணந்து அங்கேயே தங்கி விட்டான். அங்கு அவனுக்கு ஓர் பெண் குழந்தை பிறந்தது. அதற்குப் புனிதவதியாரின் பெயரை வைத்தான்.

பரமதத்தன் பாண்டிய நாட்டிலுள்ளதைக் காரைக் காலிலுள்ள புனிதவதியாரின் சுற்றத்தார் அறிந்து, அவரைக் கணவனிடம் சேர்க்க விரும்பினர். புனிதவதியாரும் அவருடைய சுற்றத்தாரும் பாண்டிய நாட்டை அடைந்தனர்.

தன் மனைவியைத் தெய்வமாகப் பாவித்த பரமதத்தன் புனிதவதியாரின் வருகையைக் கேட்டதும் தன்னுடைய இளைய மனைவியுடனும் பெண்ணுடனும் சுற்றத்தாருடனும் ஓடோடியும் வந்து புனிதவதியாரை வணங்கித் தொழுதான். புனிதவதியாரை, தன்னுடைய குல் தெய்வமாகப் பாவிப்பதாகவும் மனைவியாக ஏற்றுக் கொள்வது தகாதென்றும் கூறினான்.

Koviloor Digital Library

கணவனின் எண்ணத்தைக் கண்ட புனிதவதியார் ஐயனை நோக்கி "ஆண்டவனே! கணவனுக்காகச் சுமந்திருந்த இவ்வழகிய உடலை நீக்கி உன் தாள்களை வணங்கும் பேய் வடிவை அருள்வீராக" எனக் கேட்டுக் கொண்டாள். ஈசனும் அவர் வேண்டிய உருவை அருளினார். விண்ணவர் மலர்மாரி பொழிந்தனர்.

பேய் வடிவங் கொண்ட காரைக்கால் அம்மையார், திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை முதலியன செய்தார்.

எலும்புடலுடன் அம்மையார் கயிலைக்குச் செல்ல விருப்பம் கொண்டார். காலால் நடப்பது தவறு என நினைத்து, தலையாலேயே கயிலைக்குச் சென்றார். உமாதேவி "இவ்வாறு தலையால் நடந்து வருபவர் யார்?" என சிவபிரானை வினவ, பெருமான், "இவ்வம்மை, எனது அடியார்களில் ஒருவர்" எனக் கூறி அம்மையாரை நோக்கி, "நீ வேண்டுவதென்ன?" என வினவினார்.

அம்மையார் "ஐயனே! யான் வேண்டுவது உம்முடைய பாதத்தை என்றும் மறவாமல் உன்னைத் தரிசித்திருக்க வேண்டுமென்பதே என் அவா" என்றார்.

"அம்மையே! திருவாலங்காட்டில் நம்முடைய நடனத்தைப் பார்த்து மகிழ்ந்து அங்கு நம்மைப் பாடிக் கொண்டிருப்பாயாக" எனச் சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளினார்.

அம்மையும் தலையால் திருவாலங்காட்டை அடைந்து ஐயனைப் பாடிக் கொண்டிருந்தார்.

Koviloor Digital Library

சிவபிரான், "அம்மையே!" என்று அழைத்த காரணத்தால் புனிதவதியாருக்குக் "காரைக்கால் அம்மையார்" எனப் பெயர் வந்தது.

25. அப்பூதியடிகள் நாயனார்

திங்களூர் என்ற ஓர் ஊரில் அப்பூதியடிகள், அந்தணர் குலத்தில் உதித்தார். அவ்விடத்தில் நற்குணமே நிறைந்திருந்தன. இல்லறத்திலிருந்து கொண்டே சிவனடியார்களைப் பூஜித்து வந்தார். திருநாவுக்கரசரின் மகிமையை அறிந்து அவரிடத்தில் அளவற்ற அன்பு கொண்டார். அவரிடத்து அன்பு கொண்டதின் அடையாளமாக, தன்னுடைய தாவர ஜங்கம சொத்துக்கள் அனைத்திற்கும் அவருடைய பெயரை இட்டார். தன்னால் அடியார்களுக்கென கட்டப்பட்டிருக்கும் மடம், தண்ணீர்ப் பந்தல், தம்முடைய குழந்தைகள் எல்லோருக்கும் அப்பரின் பெயரை இட்டார்.

நாவுக்கரசு சுவாமிகள் திருப்பழனத்தைப் பணிந்து பல திருப்பதிகளைத் தரிசனம் செய்து கொண்டு திங்களூரை அடைந்தார். அங்குள்ள தண்ணீர்ப் பந்தலை நோக்கும் பொழுது, அத்தண்ணீர்ப் பந்தலுக்குத் தன்னுடைய பெயர் இடப்பட்டிருப்பதைக் கண்டார். அங்குள்ளவரை "இத் தண்ணீர்ப் பந்தல் யாருடையது" என்று வினவ, அவர்கள் "இத்தண்ணீர்ப் பந்தல் அப்பூதியடிகளுடையது" என்றனர்.

Koviloor Digital Library

இதைக் கேட்ட நாவுக்கரசர் அப்பூதியடிகளைப் பார்க்க விருப்பம் கொண்டு அவர் இல்லத்தை அடைந்தார். சிவச் சின்னமணிந்த நாவுக்கரசரை அப்பூதியடிகள் கண்டதும் ஓடோடியும் வந்து வணங்கினார். நாவுக்கரசரும் எதிர் வணக்கம் செய்தார்.

நாவுக்கரசர் அப்பூதி அடிகளைப் பார்த்து, "அப்பூதியாரே! உமது தண்ணீர்ப்பந்தலில் நாவுக்கரசரின் பெயரை எழுதக் காரணமென்ன? உம்முடைய பெயரை எழுதுவதல்லவோ முறை? மேலும் நீர் செய்யும் தருமங்களைக் கேட்டு மகிழ்ந்தேன்" என்றார்.

அவ்வுரை கேட்ட அப்பூதி, "என்ன? சமண மதத்தை ஒழித்துச் சைவமதத்தைப் பரவச் செய்த நாவுக்கரசரோ வேற்று மனிதர்? அவர் மகிமையை நீர் எவ்வாறு அறிவீர்? அப் பெருமானின் பெருமையை அறியாத நீர் யார்?" எனச் சினந்தார்.

நாவுக்கரசர் அப்பூதி அடிகளின் அடியார்களிடம் கொண்ட பக்தியின் வலிவை அறிந்து, "நானே அந்நாவுக்கரசன்" எனப் பகன்றார்.

அவ்வளவில் அப்பூதி அடிகள் மெய்ம்மறந்து ஆனந்தத்தால் விம்மிதங் கொண்டு நாவுக்கரசரை வணங்கினார், "அப்பரே! எமது இல்லத்தில் இன்று உணவருந்த வேண்டும்" என வேண்டிக் கொண்டார். நாவுக்கரசரும் உடன்பட்டார்.

அப்பூதி அடிகளின் மனைவி அறுசுவையுடன் அன்னமும் கறியமுதும் சமைத்தாள். அப்பூதியார் தனது மூத்த குமாரனான நாவுக்கரசன் என்ற

Koviloor Digital Library

புத்திரனைக் கூப்பிட்டு, தோட்டத்தில் வாழையிலை அறுத்துக் கொண்டு வரும்படி அனுப்பினார்.

மூத்தமகன் நாவுக்கரசர் வாழையிலை அறுக்கச் சென்ற இடத்தில் ஓர் கொடிய நாகம் அவனைத் தீண்டிற்று.

அதனுடைய விஷம் ஏறுவதற்கு முன் இலையை அரிந்து அதைத் தன்னுடைய தாயிடம் சேர்த்து விட்டு உயிர் துறந்தான்.

தாயும் தந்தையும், புத்திரன் "கடு விஷத்தால் மாண்டான்" என்பதை அறிந்து "அப்பருக்கு இடும் அமுதுக்கு எங்கேனும் பங்கம் ஏற்பட்டு விடுமோ?" என்று பயந்தார்கள். இருவருக்கும் ஒரு மனப்பட்டு தம்முடைய அருமந்த புத்திரனைப் பாயிலே வைத்துச் சுருட்டி மறைவாக ஓரிடத்து வைத்து விட்டார்கள். பிறகு நாவுக்கரசரை விருந்துண்ண அழைத்தனர்.

நாவுக்கரசரும் இருவருக்கும் திருநீறு அளித்துப் பீடத்தில் அமர்ந்து, அப்பூதிகளின் மூத்த குமாரனான திருநாவுக்கரசரையும் விபூதி அளிக்க அழைத்தார். அப்பூதி அடிகள் ஒன்றும் சொல்ல மாட்டாதவராய்ச் சிறிது நேரம் திகைத்து விட்டு வேறு வழியின்றி உள்ளதை உள்ளவாறு கூறி விட்டார்.

அப்பூதியடிகளின் பக்தியின் பெருமையைக் கண்ட நாவுக்கரசர் வியப்புற்று, "என்ன காரியம் செய்தீர்? எங்கே உமது புத்திரன்?" என்று கேட்க, அப்பூதியடிகள் புத்திரனை மறைத்த இடத்தைக் காட்டினார்.

Koviloor Digital Library

அப்பர் பெருமான் நாவுக்கரசனின் சவத்தைக் கண்டு வருந்தினார். கடவுளை முழு மனத்துடன் பணிந்து "ஒன்று கொலாம்" என்ற திருப்பதிகத்தைப் பாடினார். நாவுக்கரசனும் விஷம் நீங்கப் பெற்று தூக்கத்தை விட்டு எழுந்தது போன்று எழுந்தான். அப்பூதியடிகளும் அவருடைய மனைவியாரும் ஆச்சரியத்தால் விரித்த கண் இமையாது மிக்க ஆனந்தத் துடன் நின்றார்கள். பிறகு மூவரும் நாவுக்கரசரை வணங்கித் துதித்து ஆடிப் பாடினர்.

அப்பூதியடிகளும் நாவுக்கரசனாகிய அவருடைய பிள்ளையும் மற்றுமுள்ள பிள்ளைகளும் திருநாவுக் கரசருடன் அமுது செய்தார்கள்.

திருநாவுக்கரசர் சிறிதுநாட்கள் திங்களூரில் வசித்து விட்டு மற்ற தலங்களுக்குச் சென்றார். அப்பூதியடிகள் திருநாவுக்கரசரையே நினைத்து, தம்முடைய சொத்து அனைத்தும் நாவுக்கரச ருடையதே உன நினைத்து சில நாட்கள் வசித்துப் பரமன் திருவடியை அடைந்தார்.

26. திருநீல நக்க நாயனார்

சோழ நாட்டில் சாத்தமங்கை என்ற ஓர் ஊர் உண்டு. அவ்வூரில் அந்தணர் குலத்தில் தோன்றியவர் திருநீலநக்க நாயனார் என்பவர். அவர் "சிவனடி யார்களுக்குத் தொண்டு செய்வதே நன்மையைத் தரும்" என்பதை உணர்ந்து அவ்வாறே நடந்து வந்தார்.

Koviloor Digital Library

அவ்வூரில் அயவந்தி என்ற கோயிலில் உள்ள சிவபெருமானைத் தரிசிக்க தன்னுடைய மனைவி யாருடன் சென்றார். இவ்விருவரும் அப்பெருமானை ஆர்வத்துடன் தரிசித்துக் கொண்டிருக்கும் பொழுது, ஓர் சிலந்தி சிவலிங்கத்தின் மீது விழுந்தது. அதைக் கண்ட திருநீலநக்கரின் மனைவி அன்புடன் தன் னுடைய வாயால் ஊதி அச்சிலம்பியை வீழ்த்தினார். நாயனார் "சிவலிங்கத்தின் மீது வாயால் ஊதி மனைவி எச்சிற்படுத்தி விட்டாள்" என நினைத்து அவளைக் கோபித்துக் கொண்டார். "சிலம்பியை வேறு எவ்விதமாவது நீக்கியிருக்கக் கூடாதா? கடவுள் மேல் அசுத்தப்படுத்திய நீ என் மனைவியாக இருப்பதற் குரியவள் அல்ல; இன்றே உன்னைத் துறந்தேன்" என்று கூறி விட்டு வீட்டை அடைந்தார்.

அவருடைய மனைவியாரும் வீடு செல்லப் பயந்து ஆண்டவனை வணங்கி, கோயிலிலேயே தங்கி விட்டார்.

நாயனார் கனவில் கடவுள் அன்று இரவு தோன்றி "பக்தனே! உன் மனைவி என் மேல் விழுந்த சிலம்பியை உள்ளன்புடன் நீக்கின இடத்தைப் பார்; அவ்விடத்தில் கொப்புளமில்லை. அவள் ஊதாத இடத்தைப் பார். அங்கு கொப்புளம் உண்டாயிருக்கிறது. ஆகையால் அவ்வுத்தமியை நீக்காது நீ அழைத்துக் கொள்வாயாக" என்று கூறினார்.

கடவுளின் கருணையை வியந்து நாயனார் மறுநாளே மனைவியை அழைத்துக் கொண்டு வந்தார்.

Koviloor Digital Library

திருநீல நக்கர் ஞானசம்பந்தரிடத்தில் மிகவும் அன்பு பூண்டவர். ஞான சம்பந்தர் திருநீல கண்ட யாழ் பாணருடன், அயவந்தி அப்பரைத் தரிசிக்க சாத்த மங்கைக்கு வந்தார். திருநீல நக்கரும் அவரை வணங்கி அவருக்கு வேண்டியன செய்தார். திருஞான சம்பந்தர் நாயனாரை நோக்கி, திருநீலகண்ட யாழ்பாணருக்கு அன்று தங்க இடமளிக்க வேண்டுமென்று வேண்டினார். திருநீல நக்கரும் நடு வீட்டில் யாக குண்டத்தின் பக்கத்தில் படுத்துக் கொள்ளச் செய்தார். அவ்வேதிகையில் இருந்த அக்கினிக் கொழுந்து இன்னும் பிரகாசமாய் எரிய ஆரம்பித்து விட்டது.

குழந்தைகளே! இங்கு நீங்கள் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்றுள்ளது. திருநீல நக்கரோ அந்தணர்; யாழ் பாணரோ அந்தணர் வீட்டில் சேர்க்கக் கூடாதவர்; அவ்வாறிருந்தும் திருநீல நக்கர் முழுமனத் துடனும், அன்புப் பெருக்குடனும், பாணரை நடு வீட்டில் - அதிலும் வேதிகையின் அருகில் படுக்க வைத்தது மிகவும் போற்றத் தக்கதே. உண்மையான அறிவுடையவர்கள் சாதி வேற்றுமைகளைப் பாரார். எல்லா ஆத்மாக்களிடமும் கடவுள் வியாபித்து இருப்பதாகவே நினைப்பார்கள். இதுதான் நம்முடைய பாரத நாட்டின் முன்னோர்கள் தத்துவம்.

திருநீல நக்கர் திருஞான சம்பந்தர் சீர்காழியில் தோணியப்பருடன் ஐக்கியமாகும் பொழுது தானும் அவரைப் பிரிய மாட்டாது உடன் ஐக்கியமானார்.

Koviloor Digital Library

27. நமி நந்தியடிகள்

நமி நந்தியடிகள், சோழ நாட்டில் ஏமப் பேறூரில் பிறந்தார். அவர் சாதியில் அந்தணர். இரவும் பகலும் ஆண்டவனைத் துதித்து வந்தார்.

ஒரு நாள் அவர் புற்றைத் தனக்கு இடமாகக் கொண்ட வாகீசரைப் பணிந்து விட்டு அதன் அருகிலுள்ள "அறநெறி" என்ற கோயிலுக்குச் சென்றார். அவருக்கு, தீபத்தொண்டு செய்ய வேண்டு மென்று விருப்பமிருந்தது. அக்கோயிலுக் கருகில் சில சமண மதத்தினர் வசித்து வந்தார்கள்.

இதையறியாது நாயனார், "கோயிலுக்கு விளக் கேற்ற கொஞ்சம் நெய் கொடுங்கள்" என அச்சமணர்களைக் கேட்டார். அவர்கள், உங்கள் கடவுள் கையில்தான் நெருப்பிருக்கிறதே; அவருக்கு எதற்கு விளக்கு?" என இகழ்ந்தது மல்லாமல், "தண்ணீரை விட்டுவிளக்கேற்று" என ஏளனமாகக் கூறினார்கள்.

அடிகள் சிறிதேனும் மனங்கலங்காமல் குளத்திலிருந்த தண்ணீரை விளக்குகளில் விட்டு ஏற்றினார். அவைகள் சுடர் விட்டு எரிந்தன. இந்த அதிசயத்தைக் கண்ட சமணர்கள் ஏமாந்து நின் றார்கள்.

இவ்வாறே நமிநந்தி அடிகள் தினந்தோறும் நீர்வார்த்து விளக்கேற்றி தீபத் திருத்தொண்டைச்

Koviloor Digital Library

செய்து வரலாயினர். அவர் ஏற்றிய நீர் விளக்கு ஆண்டவன் கோயிலில் விடியும் வரை பிரகாசித்துக் கொண்டிருக்கும்.

நமிநந்தி அடிகள் வீதி விடங்கப் பெருமானின் திருவிழாவை நடத்த விரும்பினார். அவர் விரும்பிய வாறே கடவுளருளால் பங்குனி உத்திரத்தன்று திருவிழா நன்கு நடைபெற்றது.

அவ்விழாவில் பெருமான் திருமணலி என்ற ஊரில் ஓர் நாள் எழுந்தருளினார். எல்லாக் குலத்தவரும் சிவபிரானைத் தொழுது பின் சென்றனர். நமிநந்தி அடிகளும் சென்றார்.

விழா முடிந்ததும் அடிகள் வீட்டை அடைந்தார். அவர் மனைவி, "சிவபூசை செய்து உண்ணவாரும்" என அழைத்தார். அடிகள், "எல்லாச் சாதியாருடனும் விழாவில் ஈடுபட வேண்டி வந்தது; ஆகையால் பிராயச்சித்தம் செய்து கொண்ட பிறகே நான் பூசை செய்ய வேண்டும். தண்ணீர் கொண்டு வா" என்றார். இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே அவரை அறியாமல் எப்படியோ உறக்கம் வந்து விட்டது.

ஆண்டவன் அவருடைய கனவில் தோன்றி, "பக்தனே! என் திருவிழாவில் ஈடுபட்ட அனைவரும் என்னுடைய சிவகணங்களே; கவலைப்படாதே, பூசையைச் செய்" எனக் கூறினார்.

நாயனார் விழித்து அதிசயித்தார். சிவ வழிபாடு செய்து திருவாரூரை அடைந்தார். அங்குள்ளவர்

Koviloor Digital Library

அனைவரும் சிவகணங்களாகத் தோற்றமளித்தனர். இதைக் கண்டு ஆனந்தமுற்று, தன் மனைவியுடன் அவ்வூரிலேயே குடிபுகுந்தார். சிவத்தொண்டு செய்து வந்து முடிவில் தியாகராஜப் பெருமானின் பாதங்களை அடைந்தார்.

28. திருஞான சம்பந்த மூர்த்திகள்

சோழ நாட்டில் மிக்க வளப்பம் பொருந்திய சீர்காழி என்ற ஊரில் பிறந்தவர் ஞான சம்பந்தர். அவ்வூரில் சிவபத விருதயர் என்ற வேதியருக்கு, பகவதியார் என்ற மனைவியிடத்து ஞானசம்பந்தர் பிறந்தார். சிவபாத விருதயர் மிக்க சிவபக்தி உடையவர்.

ஒரு நாள் சிவபாத விருதயர் நீராடச் சென்றார். அவருடன் கூட மூன்று வயதுக் குழந்தையான ஞான சம்பந்தரும் அழுது கொண்டே சென்றார். தகப்பனார் கோபித்துக் கொண்டும் கேட்க வில்லை. குழந்தை யுடன் சென்ற சிவபாத விருதயர் கரையில் குழந்தையை உட்கார வைத்து விட்டு, பிரும்ம தீர்த்தத்தில் மூழ்கினார். தந்தையின் தலையைக் காணாது தனயன் பயந்து கோவெனக் கதறி அழுதான்.

அத்தருணத்தில் சிவபெருமான் உமாதேவி யாருடன் அழகிய இரிஷபத்தின் மேல் ஞான சம்பந்தருக்குக் காட்சியளித்தார். குழந்தை சிவபிரா னையும் உமாதேவியையும் கண்டு மயங்கி நிற்கும் பொழுது, உமாதேவியார் தனது பாலைப் பொற்

Koviloor Digital Library

கிண்ணத்தில் கறந்து கொண்டு வந்து குழந்தைக்கு ஊட்டினார். அது ஞானப் பாலாதலால் "ஞான சம்பந்தர்" என்ற குழந்தைக்கு ஞானோதயமாயிற்று. அமுதூட்டி மறைந்தான் ஆண்டவன்.

திருஞானசம்பந்தர் ஆண்டவன் மறைந்த இடத்தையே நோக்கிக் கொண்டிருக்கும் பொழுது சிவபாத விருதயர் தன் கடனை முடித்து வெளி யேறினார். கனிவாயில் ஞானப்பால் வழிய நிற்கும் தனது குழந்தையைக் கண்டார்; உண்மையை அறியாது குழந்தை யாரிடமோ பாலை வாங்கி உண்டதாக நினைத்துக் கொண்டு கோலைக் கையிலெடுத்து, "யாரிடம் பால் குடித்தாய்?" எனக் குழந்தையை மிரட்டினார்.

ஞானப்பாலுண்ட பிள்ளையார் சிறிதேனும் தயங்காது கோயிலில் எழுந்தருளியுள்ள தோணியப் பரையும் உமாதேவியையும் காட்டி "இவ்வம்மையே எனக்குப் பாலூட்டினார்" எனக் கூறினார். குழந்தை யின் சொற்களைக் கேட்டு சிவபாத விருதயர் வியப்புற்றிருக்கும் பொழுதே ஞான சம்பந்தர் "தோடுடைய செவியின் விடையேறி" என்ற அடியைக் கொண்ட தேவராப் பதிகத்தைத் தொடங்கி விட்டார்.

ஞான சம்பந்தரின் பெருமையை உணர்ந்த அனைவரும் வியப்புக் கடலில் மூழ்கினர். ஞான சம்பந்தர் அன்று முதல் ஆண்டவன் அடி நீழலைக் குறித்துப் பாட ஆரம்பித்து விட்டார். இவர் பாடும் பொழுது ஆண்டவன் அருளால் பஞ்சாட்சரம்

Koviloor Digital Library

பொறிக்கப்பட்ட ஓர் தாளம் ஞான சம்பந்தர் கையில் வந்து சேர்ந்தது.

ஞான சம்பந்தர் தலந்தலமாகச் சென்று பாடி வரத் தொடங்கினார். "அறத்துறை" என்ற ஊரிலுள்ள சிவபிரான் எல்லோர் கனவிலும் தோன்றி சம்பந்தருக்கு முத்துப் பல்லக்கும், சின்னம், குடை முதலியவற்றை அளிக்குமாறு கட்டளையிட்டார்.

திருமருகல் என்ற கோயிலில் ஒரு வணிகன் ஓர் பெண்ணுடன் வந்திருந்தான். அங்கு அவ் வணிகனை ஓர் பாம்பு கடித்து விட்டது. அப்பெண் அவ் வணிகனைத் தொடாமலேயே கதறினாள். ஞான சம்பந்தர் அப்பொழுது அவ்வூர் ஈசுவரனைத் தரிசிக்க வந்திருந்தார். பெண்ணின் அழுகைக் குரலைக் கேட்டு விஷயத்தைக் கேட்டு அறிந்தார். பிறகு அவ்விடம் சென்று ஆண்டவன் மீது பாடி அவ்வணிகனைத் தூங்கி எழுபவன் போல எழுப்பினார்.

அவர்கள் நிலையை அறிந்து அவ்விருவருக்கும் மணம் புரிவித்தார்.

வேதாரண்யம் சென்று அப்பருடன் சேர்ந்து கடவுளுடைய அருளால் படிக்காசு பெற்று, ஏழைகளைக் காப்பாற்றிப் பஞ்ச நிவர்த்தி செய்தார்.

அவ்வாறு இருக்கையில் பாண்டிய நாட்டின் மந்திரியாகிய குலச்சிறையார் என்பவரும் பாண்டிய தேசத்து அரசி மங்கையர்க்கரசியாரும் ஞான சம்பந்தரைத் தம்முடைய பாண்டிய நாட்டிற்கு அழைத்தனர்.

Koviloor Digital Library

பாண்டிய நாட்டு மன்னன் சைவ மதத்தை விட்டு ஜைன மதத்தைத் தழுவி நின்றான். குடிகளும் அவ்வாறேயாயினர். ஆயின் குலச்சிறையார் என்ற மந்திரியும் மங்கையர்க்கரசியாருமே சைவப்பற்றுடைய வராய், தமது அரசனின் அறியாமைக்கு இரங்கி வருந்தினர். மறுபடியும் சைவ மதத்தை ஓங்கும்படிச் செய்யவே ஞான சம்பந்தரை அழைத்தனர்.

சம்பந்தரும் பாண்டி நாடு சென்றார். "சைவ மதத்தை நிலைநாட்டவே வந்துள்ளார்" என்பதை அறிந்த சமணர்கள் சம்பந்தர் இறங்கியிருந்த மடத்திற்குத் தீயிட்டனர். அடியார்கள் அத்தீயை அணைத்து விட்டு, சம்பந்தரிடம் சென்று நிகழ்ந்ததை உரைத்தனர். ஞான சம்பந்தர் அத்தீ பையவே பாண்டியனைப் பீடிக்கட்டும் என்றார். தீயும் பாண்டி யனது உடலில் ஜுரம் என்ற நோயை உண்டாக்கி விட்டது.

சமணர்கள் தம்மால் கூடியவரை மணி மந்திர மருந்துகளால் பாண்டியன் வெப்பு நோயைத் தணிக்க முயன்றனர். மயிற்பீலியால் தடவி மந்திரம் ஓதினர். நோய் அதிகமாயிற்றேயன்றி சிறிதும் குறைவுபட வில்லை.

மந்திரியின் வேண்டுகோளின்படி அரசன் சம்பந்தரைப் பார்க்க விரும்பினான். ஞான சம்பந்தரும் குலச்சிறையாரின் அழைப்புக்கு இணங்கிப் பாண்டியனின் இருப்பிடத்தை அடைந்தார்.

பாண்டியனுக்கு ஏற்பட்ட வெப்பு நோயை அவரவர்கள் தெய்வ வலிமை கொண்டு நீக்க வேண்டு

Koviloor Digital Library

மெனத் தீர்மானித்தனர். சமணர் ஒரு புறம், சம்பந்தர் ஒரு புறமாக நின்று கொண்டனர். சமணரால் வெப்பு நோய் அதிகமாயிற்றேயன்றி நீங்க வில்லை.

சம்பந்தர் "மந்திரமாவது நீறு" என்ற பதிகத்தைக் கூறி, பாண்டியன் உடலில் திருநீற்றைப் பூசிய வுடனேயே அவருடைய ஜுரம் தணிந்தது.

பாண்டியன் நல்ல நிலையை அடைந்த பிறகு. "எம்மதம், எச்சமயம் சிறந்தது?" என ஆராயத் தொடங்கினான். அதற்காகச் சில ஏற்பாடுகளைச் செய்தான்.

முதல் ஏற்பாடு சமணரால் எழுதப்பட்ட நூல்களும், சம்பந்தரால் எழுதப்பட்ட நூல்களும் தீக்கிரையாக வேண்டும். அத்தீயில் வேகாமல் இருக்கும் நூலே, அந்தச் சமயமே சிறந்தது எனக் கொள்ள வேண்டும் என்பது. அவ்வாதில் சமணர்கள் தோற்றனர். சம்பந்தருடைய பதிகமே கருகாமல் இட்டபடி திகழ்ந்தது.

சமணர்கள் விரும்பியவாறு புனல், அதாவது தண்ணீரில் இருசாரார‌து ஓலைகளையும் விட வேண்டும். மூழ்கியது தோற்றது; மூழ்காதது வெற்றி கொண்டது என்பதே.

வைகையில் சமணர்கள் ஓலைகள் போடப் பட்டன. சம்பந்தரும் வாழ்க அந்தணர் என்ற பதிகத்தை எழுதி தண்ணீரில் விட்டார்.

சமணர்கள் ஓலைகள் மூழ்கி விட்டன. சம்பந்தரது ஓலை, நீரைக் கிழித்துக் கொண்டு எதிர் நோக்கி

Koviloor Digital Library

அரசனிடம் வந்தது. அவ்வேட்டில் "வேந்தனும் ஓங்குக" என்று இருந்ததால் இயற்கையாக அரசன் முதுகில் இருந்த கூன் ஒழிந்து விட்டது. அரசன் ஆனந்தக் கடலில் மூழ்கி அன்று முதல் சைவ சமயத்தைத் தழுவினான்.

சிறிது நாள் பாண்டிய நாட்டில் இருந்து விட்டு, ஞானசம்பந்தர் தலந்தலமாக யாத்திரை செய்து கொண்டே திருவொற்றியூர் வந்தடைந்தார். அவ்வூரின் கண் உள்ள சிவநேசச் செட்டியாரைக் கண்டார். அவருடைய பெண் இறந்து எலும்புக் கூட்டங்களை ஓர் குடத்தில் இட்டு வைத்துள்ளதை அறிந்தார்.

மயிலாப்பூரில் கபாலீசுவரர் முன் என்புக் குடத்தைக் கொண்டு வரும்படிக் கட்டளையிட்டார் சம்பந்தர். சம்பந்தர் 'மட்டிட்ட' என்ற பதிகத்தைப் பாடியவுடன் அக்குடத்திலிருந்து பூம்பாவை என்ற பெண்மணி பன்னிரெண்டு வயது குமாரியாக எழுந்து சம்பந்தரை வணங்கினாள்.

இவ்வாறெல்லாம் ஞான சம்பந்தர் பல நற்கரு மங்களைச் செய்து சிவநேசச் செல்வராய் வாழ்ந்து வருகையில் அவருடைய பதினாறாவது வயதில் நம்பாண்டார் நம்பியின் மகளை மணந்தார்.

மணக்கோலத்துடன் ஆண்டவனைக் காண சீர்காழிக் கோயிலுக்குள் உற்றார், உறவினர், மனைவி அடியார்களுடன் புகுந்தார்.

அப்பொழுது தோணியப்பர் "ஞான சம்பந்தா! நீ மணக்கோலத்துடனும் உன் மண வினைக்கு வந்த

Koviloor Digital Library

வருடனும் எமது சோதியில் ஐக்கியமாகக் கடவாய்" என அசரீரியாகக் கூறி கோயில் முழுவதும் ஓர் சோதியை எழுப்பினார். அதனுள் எல்லோரும் ஐக்கியமாயினர்.

29. ஏயர்க்கோன் கலிக்காம நாயனார்

கலிக்காமர் திருப்பெருமங்கலம் என்ற ஊரிற் பிறந்தவர். ஏயர் குடியில் தோன்றியதால் ஏயர்க்கோன் கலிக்காமர் என்ற பெயருடையவர் ஆனார்.

சோழ அரசனின் சேனாதிபதி இவர், திருப்புன்கூர் என்ற ஊரின்கண் கலிக்காமர் திருப்பணி செய்து வந்தார், சிவபக்தியுடையவர்.

சுந்தரமூர்த்தி நாயனார் தியாகேசப் பெருமானைப் பரவையாரிடம் தூது அனுப்பிய விஷயங்களைக் கேட்டதும் மிகவும் வருந்தினார். கடவுளை ஏவல் கொண்ட சுந்தர மூர்த்தி நாயனாரை வெறுத்தார்.

கலிக்காமர் தன்னிடம் வெறுப்புக் கொண்டதை சுந்தரமூர்த்தி நாயனார் அறிந்து ஆண்டவனிடத்தில் முறையிட்டுக் கொண்டார். தியாகேசன் அவ்விருவரையும் ஒருமைப்படுத்த எண்ணங் கொண்டு கலிக்காமருக்குச் சூலைநோயை உண்டாக்கினார். கலிக்காமர் ஒன்றாலும் நோய் தீராது மிகவும் வருந்தினார்.

Koviloor Digital Library

கடவுளுடைய கட்டளையால் சுந்தரமூர்த்தி நாயனார் கலிக்காமர் நோயைத் தீர்க்கச் சென்றார். நாயனார் வருவதையறிந்த கலிக்காமர், ஆண்டவனைப் பெண்பாலிடம் தூதனுப்பிய நாயனாரைப் பார்க்க விரும்பாமல் தன் வயிற்றைக் கிழித்துக் கொண்டு இறந்தார். இதை அறிந்த கலிக்காமர் மனைவியும் இறக்கத் துணிந்தார்.

வன்தொண்டர் வருவதைச் சிலர் பார்த்து விட்டு, கலிக்காமர் மனைவியைத் தடுத்தனர். வன்தொண்டரும் வந்தார். கலிக்காமர் இறந்து கிடப்பதை அறிந்து சுந்தரமூர்த்தி நாயனார் தானும் உயிர் துறப்பேன் என வாளை எடுத்துக் கொண்டார். இத்தருணத்தில் கடவுளருளால் கலிக்காமர் நோய் நீங்கப் பெற்று உயிர் பெற்று எழுந்தார். எழுந்தவுடன் வன்தொண்டர் செயலைக் கண்டு திடுக்கிட்டு அவருடைய கையைப் பிடித்துக் கொண்டார். இருவரும் இணை பிரியாத நண்பராயினர்.

கலிக்காமரும், சுந்தரமூர்த்தி நாயனாரும் சிறிது நாள் திருவாரூர்ப் பெருமானை வழிபட்டு வந்தனர். இறுதியில் கலிக்காமர் ஆண்டவர் அடி நீழலை அடைந்தார்.

30. திருமூல நாயனார்

திருக்கயிலாயத்திலே நந்திதேவருக்கு விருப்பமான, அவர் அருள் பெற்ற சிவயோகி ஒருவருக்கு

Koviloor Digital Library

அகத்தியருடன் சிறிது நாள் தங்க வேண்டும் என்று விருப்பம் இருந்தது. அவர் அதனால் பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருவாவடு துறையின் காவிரிக் கரைக்கு வந்தார். அங்கு, சில பசுக் கூட்டங்கள் புலம்பிக் கொண்டிருப்பதைக் கண்டார்.

அப்பசுக்களை மேய்ப்பவன் சாத்தனூரில் உள்ள ஓர் இடையன். அவனுடைய பெயர் மூலன். அவன் அன்று இறந்து கிடந்தான். பசுக்கள் அவனைச் சுற்றிச் சுற்றி அழுது கொண்டு இருந்தன.

அந்தச் சிவயோகி அப்பசுக்களின் துயரை நீக்கத் தீர்மானித்தார். அம்முனிவர் அட்டமா சித்தியில் வல்லவர், அவருக்குக் கூடு விட்டு கூடு பாயும் திறம் உண்டு. ஆகையால் அவர் தன்னுடைய உடலை ஓர் இடத்தில் சேமித்து வைத்து விட்டுத் தான் அவ்விடையன் உடலில் புகுந்தார். திருமூலராய் எழுந்தார். பசுக்கள் ஆனந்தம் அடைந்தன.

மூலனுக்கு மனைவியுண்டு. அவள் திருமூலரைத் தன்னுடைய கணவன் என நினைத்து வீட்டிற்கு அழைத்தாள். அதற்கு அவர் 'இனி என்னைத் தீண்டலாகாது' எனக் கூறி விட்டு அவ்வூரில் உள்ள ஓர் பொதுமடத்தில் நுழைந்தார்.

இதைக் கண்ட மூலன் மனைவி வருந்தி, அவ்வூர் அறிவாளிகளிடம் தன்னுடைய கணவனுடைய செய்கையைத் தெரிவித்தாள். அவர்கள் திருமூலரைப் பார்த்து விட்டு, "இவர் சிவயோகத்தில், அவருடைய கருணைக் கடலில் ஆழ்ந்து விட்டார். இனி அவர் உலக விஷயத்தில் ஈடுபடார்" என மூலர் மனைவியிடம்

Koviloor Digital Library

கூறினர். அவள் வருந்தி தனது இருப்பிடம் அடைந்தாள்.

திருமூலர் தனது சடலத்தை வைத்த இடத்திற்குச் சென்று தேடினார். ஆயின் அவ்வுடலைக் காண முடியவில்லை. சிவபிரான் அவ்வுடலை மறைத்து வைத்து விட்டார். ஏனெனில் திருமூலர் செந்தமிழில் ஓர் நல்ல நூலை இயற்றி உலகத்திலுள்ளவருக்கு நன்மை செய்ய வேண்டுமென்றே அவ்வாறு செய்தார்.

இதை உணர்ந்த திருமூலர் திருவாவடுதுறை அடைந்து ஓர் ஆலமரத்தடியில் அமர்ந்தார். ஒரு வருஷத்திற்கு ஒரு மந்திரமாக மூவாயிரம் வருஷத்திற்கு மூவாயிரம் மந்திரங்கள் எழுதினார்.

அத்திருத்தொண்டை ஆற்றிய பிறகு கயிலை அடைந்தார்.

31. தண்டியடிகள்

தண்டியடிகள் திருவாரூரில் பிறந்தவர். பிறக்கும் பொழுதே கண்ணில்லாமல் பிறந்தார். எப்பொழுதும் அஞ்செழுத்து ஓதி ஆண்டவனைப் பணிந்து வந்தார்.

இவர், அவ்வூர் குளத்தைப் பெரிதாக்க ஆவல் கொண்டார். அவர் குளத்தின் நடுவில் ஓர் தறி நட்டு, கரையில் மற்றொரு தறி நட்டு இரண்டையும் கயிற்றால் பிணைத்தார். குளத்தின் நடுவில் மண்ணை வெட்டி

Koviloor Digital Library

அவற்றைக் கயிற்றைப் பிடித்துக் கொண்டே கரையில் கொண்டு போய்க் கொட்டுவார்.

இவருடைய பெரு முயற்சிகளைக் கண்டு சமணர்கள் தண்டியடிகளைப் பரிகசித்து அவர் தோண்டும் மண்வெட்டி முதலியவைகளைப் பறித்து எறிந்தனர். தண்டியடிகள் மிக்க கோபத்தை அடைந்தார். சமணர்கள் மேலும் தண்டியடிகளை நோக்கி, "நாங்கள் சொல்வதைக்கேள். மண்ணை வெட்டினால் அதனிடத்தில் இருக்கும் புழுபூச்சிகள் இறக்கும். நாங்கள் சொல்வதில் உனக்கு நம்பிக்கை இல்லையானால் நீ நம்பும் தெய்வம் உனக்குக் கண்ணைத் தரட்டுமே பார்க்கலாம்" என்று சொல்லிச் சிரித்தனர்.

இவ்வாறு சமணர்கள் சிவபெருமானை இழிவாகப் பேசியதைப் பொறாமல் அடிகள் வருந்தினார். அன்று இரவு அவருடைய கனவில் பெருமான் வந்து, "அன்பனே! கவலையுறாதே. உனக்குக் கண் வரும்படியும் சமணர்கள் குருடாகும் படியும் செய்வேன்" எனக்கூறி அன்று இரவே அவ்வூர் அரசன் கனவிலும் தோன்றினார். அவ்வரசன் கனவில் தோன்றி, "எனது பக்தன் தண்டியடிகள் எனக்காக ஓர் குளம் வெட்ட விரும்பியுள்ளான்; அவனைச் சமணர்கள் தடுக்கிறார்கள்; நீ அவனுக்குச் சென்று உதவுவாயாக" எனக் கூறினார்.

அரசரும் தண்டியடிகளைக் கண்டார். சமணர்களை அழைத்து விசாரித்தார். அவர்கள் "தண்டி-

Koviloor Digital Library

யடிகள் தனது தவப்பயனால் கண்ணைப் பெறட்டும்; நாங்கள் இவ்வூரை விட்டுச் செல்கிறோம்" என்றனர்.

இவ்வுரையைக் கேட்ட தண்டியடிகள், "நான் எம்பெருமானிடம் கொண்ட பக்தி உண்மையாயின் என் கண்கள் தெரியக் கடவதாக" எனக் கூறிக் கொண்டே குளத்தில் மூழ்கினார். மூழ்கி எழுந்ததும் அடிகள் கண்களைப் பெற்றார்; சமணர்கள் கண்களை இழந்தனர்.

இவ்வதிசயத்தைக் கண்ட அரசன் அடிகளை வணங்கி, சமணர்களை ஊரை விட்டுத் துரத்தினான். அவர்கள் பள்ளிகளை இடித்துத் தள்ளினான். அடிகள் விரும்பியவாறு கோயிலைக் கட்டினான். தண்டியடிகளும் ஆண்டவனுக்குத் தொண்டாற்றி அவருடைய பாதார விந்தத்தை அடைந்தார்.

32. மூர்க்க நாயனார்

திருவேற்காடு என்ற ஊரில் பிறந்தவர் மூர்க்க நாயனார். இவர் வேளாளர். இவர் சிவனடியார்கள் உண்ட பிறகு தான் சாப்பிடுவார். அவர்கள் விரும்பும் பொருளையும் கொடுப்பார்.

இவர் இவ்வாறு தானம் செய்வதை அறிந்து நாளுக்கு நாள் அடியார்கள் கூட்டம் பெருகிற்று. நாயனாரும் முகங்கோணாது அனைவருக்கும் கொடுத்து, சொத்துக்களை இழந்து வறுமை நிலையை அடைந்தார்.

Koviloor Digital Library

நாளுக்கு நாள் அடியவர்களுக்குக் கேட்டதை அளிக்க முடியாமல் வருந்தினார்.

இவர் சூதாட்டத்தில் சிறந்தவர். ஆகையால் சூதாடியாவது பொருளீட்டிச் சம்பாதித்து அடியவர்களைக் காப்பாற்ற நினைத்தார். அவ்வாறே செய்து வந்தார்.

சூதாட்டத்தில் மாறுபடுபவரைத் தமது வாளால் குத்துவார்; அதனால் அவருக்கு மூர்க்கர் என்ற பெயர் உண்டாயிற்று.

இவ்வாறே தொண்டாற்றி வந்து ஆண்டவன் நீழலை அடைந்தார்.

33. சோமாசி மாற நாயனார்

சோமாசி மாற நாயனார் சோழ நாட்டில் திருவம்பூரில் பிறந்தவர். சாதியில் அந்தணர்; சிவபக்தி பூண்டவர்.

அடியார்களுக்கு அமுது ஊட்டுவதிலும், யாகம் செய்வதிலும்; ஐந்தெழுத்து ஓதுவதிலுமே அவர் நாட்களைக் கடத்தி வந்தார்.

இந்நாயனார் திருவாரூரிலுள்ள சுந்தரமூர்த்தி சுவாமிகளை வணங்கி அவருடைய அன்பைப் பெற்றார். இறுதியில் ஆண்டவனை அடைந்தார்.

Koviloor Digital Library

34. சாக்கிய நாயனார்

திருமங்கை என்ற ஊரில் வேளாளர் குலத்தில் சாக்கிய நாயனார் பிறந்தார். இவர் பிறப்பு பந்தனை யினின்று விடுபட அநேக வழிகளில் சிந்தித்தார்.

காஞ்சீபுரம் முதலிய இடங்களுக்குச் சென்று பௌத்த சமயத்தைப் பின் பற்றியும் ஆராய்ந்தார். 'சைவ நெறியே சிறந்த வழி' என்பதை அறிந்தார்.

அவர் பௌத்த உடையுடனேயே பரமனை வழிபட நினைத்தார். ஓர் லிங்கத்தைக் கண்டதும் அருகில் இருந்த ஓர் கல்லைப் பூவைப் போன்று நினைத்து எறிந்து பூசித்தார். இவ்வாறு பூசித்தலையே தனது வழக்கமாகக் கொண்டார். ஒரு நாள் கடவுளை வழிபட மறந்து சாப்பிட உட்கார்ந்து விட்டார். பிறகு நினைவு வந்து பெருமானைக் கல்லால் பூசித்தார்.

இறுதியில் சிவபெருமானின் பாதத்தை அடைந்தார்.

35. சிறப்புலி நாயனார்

திருவாக்கூரில் பிறந்தவர் சிறப்புலி நாயனார். சாதியில் அந்தணர்.

அடியவர்களுக்கு அமுதூட்டுவார். பொருள் உதவியும் செய்வார். எப்பொழுதும் பஞ்சாட்சரத்

Koviloor Digital Library

தையே ஓதிக் கொண்டிருப்பார். யாகம் முதலியன அடிக்கடி செய்வார்.

இவ்வாறாக அவருடைய நாட்களைக் கடத்தி ஆண்டவனை அடைந்தார்.

36. சிறுத்தொண்ட நாயனார்

சிறுத் தொண்டர் திருச்செங்காட்டங்குடியில் பிறந்தார். இவருடைய பிள்ளைத் திருநாமம் பரஞ்சோதி என்பது. இவர் ஆயுர்வேதத்திலும், வடமொழிக் கலையிலும் வல்லவர். ஆயுதப் பயிற்சியிலும் சிறந்தவர்.

இவர் சோழ மன்னவரது மந்திரியாய் இருந்து அவருக்குப் பல விதத்திலும் உதவி புரிந்து வந்தார். சிவனிடத்தில் மாறாத பக்தியுடையவர்.

ஒரு சமயம் சிறுத்தொண்டர் பகைவர்களுடன் போராட வேண்டி வந்தது. அப்போரில் வெற்றி கொண்ட பொருளை அரசனுக்குக் கொடுத்தார். அரசன் மகிழ்ந்தான். மற்றவர்களால் சிறுத் தொண்டர் சிவபக்தர் என்பதை அறிந்து அவரை உபசரித்து வேண்டியன கொடுத்து அவருடைய வேலையிலிருந்து விடுதலை செய்து விட்டான்.

பரஞ்சோதியாரும் கணபதீஸ்வரப் பெருமானை மனைவியுடன் வழிபட்டு வந்தார். சிவனடியாருக்கு அமுதிட்ட பிறகே அவர் உண்ணுவார். அடியவரிடத்

Koviloor Digital Library

தில் அவர் மிகவும் தாழ்மையாய் இருந்து வந்த காரணத்தால் சிறுத் தொண்டர் என்ற பெயர் அவருக்கு வந்தது. ஞான சம்பந்தரும் இவரின் பெருமையை உணர்ந்து தமது பாடலில் பாடியுள்ளார்.

ஆண்டவன் அடியவர் அன்பைச் சோதிக்க எண்ணினார். சிவபெருமானின் திருவிளையாடலால் ஒரு நாள் சிறுத் தொண்டருக்கு அமுதிட ஒரு சிவனடியாரும் அகப்படவில்லை. அவர் அடியார் களைத் தேடித்தேடி அலைந்தார்.

இஃது இவ்வாறு இருக்க ஆண்டவன் மிகவும் பசித்த ஓர் ஆண்டி வடிவம் பூண்டு சிவனடியாரைப் போன்று தொண்டரது வீட்டை அடைந்தார். தொண்டரின் மனைவி திருவெண் காட்டு நங்கையார் அவரைச் சிறிது நேரம் இருக்கும் படியும் அதற்குள் தனது கணவர் வந்து விடுவார் என்றும் கூறினாள்.

அதற்கு வைரவர், "நாம் வடதேசத்தினர். புருஷனில்லா மனையில் இருக்க மாட்டோம். இவ்வூர் ஆத்தி மரத்தடியில் இருப்போம். உமது கணவரை அங்கு அனுப்புங்கள்" எனக் கூறிக் கொண்டே மரத்தடிக்குச் சென்று யோகத்தில் அமர்ந்தார்.

சிவனடியார் ஒருவரையும் காணாது வாடிய முகத்துடன் வந்த சிறுத்தொண்டரை அவர் மனைவியார் கண்டாள். நடந்த விஷயங்களைக் கூறி மரத்தினடியிலுள்ளவரை அழைத்து வரும் படிக் கூறினாள்.

Koviloor Digital Library

சிறுத் தொண்டரும் ஓடோடியும் சென்று அம்முனிவரை உண்ண அழைத்தார்.

அவர், "அப்பனே! நான் ஆறு மாதத்திற்கு ஒரு முறை நரப்பசு சாப்பிடுவேன். அதுவும் ஒரு குடிக்கொரு குழந்தையாய் ஐந்து வயதுள்ளதாய் உறுப்புக்கள் ஒன்றும் குறைவில்லாததாய் இருக்க வேண்டும். அக்குழந்தை யைத் தாய் பிடிக்க, தந்தை அரிந்து சமைக்க வேண்டுவேன். அவ்வுணவைத் தான் நான் உண்பேன்" என்றார்.

சிறுத்தொண்டரும் மகிழ்ந்து தம்முடைய ஒரே குழந்தையான சீராளனை அரிந்து சமைத்து வைரவருக்கு இடுவதாகத் தீர்மானித்தார். அவ்வாறே மனைவி குழந்தையைப் பிடிக்க, சிறுத் தொண்டர் அரிந்தார். சமைத்து வைரவரை உண்ண அழைத்தனர்.

வைரவர் உண்ண இலையின் முன் உட்கார்ந்தார். நரப்பசுவின் உருப்புக்கள் எல்லாம் உள்ளதா என நோக்கி, தலை மட்டும் இல்லாமல் இருப்பதைக் கண்டு, "ஏன் அதை மட்டும் பரிமாறவில்லை" எனச் சினந்தார்.

திருவெண்காட்டு நங்கை, "ஆண்டவனே! அதைச் சாப்பிடத் தகாதது என நீக்கினேன். அதையும் இதோ பரிமாறி விடுகிறேன்" என்று கூறித் தலைக் கறியையும் பரிமாறினாள்.

வைரவர் தன்னுடன் உண்ண, சிவனடியார்களைத் தேடி வரும்படித் தொண்டரிடம் கூறினார். அவர் எங்கு

Koviloor Digital Library

போவார்? அன்று ஒருவரேனும் அவர் கண்ணுக்குத் தோற்றம் அளிக்கவில்லை.

இதைக் கண்ட வைரவர், "அடியார் இல்லாவிடில் நீயே எனது பக்கத்தில் அமர்ந்து நான் உண்ணும் நரப்பசுக் கறியை நீயும் உண்ண வேண்டும்" என்று தொண்டரை நோக்கிக் கூறினார்.

தொண்டரும் வாயைத் திறவாது பக்கலில் அமர்ந்தார். "குழந்தை இல்லாது சாப்பிடுவது நியாயமல்ல. ஆகையால் உன் குழந்தையை அழைத்து வா" என அடியாரை நோக்கி வைரவர் கூறினார்.

சிறுத் தொண்டர் ஒன்றும் சொல்ல மாட்டாது மனைவியுடன் வாயிலில் சென்று, "குழந்தாய்! சீராளா! வைரவருடன் உண்ண வா" என அழைத்தனர்.

சீராளன் உயிர் பெற்று பள்ளிக் கூடத்தில் இருந்து தனது தாய் தந்தையரை அணைத்துக் கொண்டான்.

இந்த அதிசயத்தைக் கண்டு பெற்றோர் வியப்புற்று குழந்தையுடன் உள் நுழைந்தனர். உள்ளே வைரவரைக் காணோம்; இலையில் இடப்பட்டிருந்த குழந்தைக் கறி அமுதையும் காணோம்.

இச்செயல் கடவுள் லீலைதான் என நினைத்துத் தொண்டர் உருகி நின்றார். சிவபெருமானும் உமா தேவியுடன் காட்சி அளித்து அவர்களைத் தமது பாதத்தில் சேர்த்துக் கொண்டார்.

Koviloor Digital Library

38. கழறிற்றறிவார் நாயனார்

மலை நாட்டில் கொடுங்காளூர் என்ற ஊரில் பிறந்தவர் நமது நாயனார். இவர் சேர வம்சத்தைச் சார்ந்தவர். இவரின் பிள்ளைத் திருநாமம் பெருமாக் கோதையார் என்பது. சிவபக்தியில் சிறந்தவர்.

சேர நாட்டை ஆண்டு வந்த செங்கோற் பொறையன் என்ற ஓர் அரசன் துறவு பூண்டு தவம் செய்ய வனம் சென்று விட்டான். மந்திரிகள் அந்நாட்டை ஆள பெருமாக் கோதையாரே சிறந்தவர் எனத் தீர்மானித்து அரசை ஏற்று நடத்த பெருமாக் கோதையாரை வேண்டினர்.

பெருமாக் கோதையார், அரசை ஏற்றால் சிவத்தொண்டிற்கு ஏதேனும் பழுது ஏற்படுமோ என்று சிவபெருமானைப் பணிந்து நின்றார்.

பரமனது அருளால் தொண்டுக்குப் பழுது வராமல் அரசியற்றும் ஆற்றலும், யார், யாவும் கழறுவதை உணரும் அறிவையும், அழியாத வலிமை யும், கொடைக் குணமும், படையும் மாக் கோதை யாருக்குக் கிடைத்தன.

பிறர் கழறுவதை உணரும் ஆற்றலைப் பெற்றதால் கழறிற்றறிவார் என்ற பெயர் அவருக்கு உண்டாயிற்று.

அரசியலை ஏற்று நீதி பிறழாது ஆண்டு வந்தார். ஒரு நாள் இவர் யானையின் மீது ஏறி ஊர்வலம் வரும்பொழுது, ஒரு சலவையாளர் உப்பு மூட்டை

Koviloor Digital Library

யுடன் வந்து கொண்டிருந்தான். மழையினால் அம்மூட்டையிலுள்ள உப்பு கரைந்து அவனுடைய உடலில் படிந்திருந்தது. அதனால் அவன் திருநீறு பூசிய ஓர் சிவனடியார் போல் காணப்பட்டான். கழறிற்றறிவார் அவனைச் சிவனடியார் என நினைத்து யானையிலிருந்து இறங்கி அவனை வணங்கினார். இதைக் கண்டு மந்திரிகள் வியப்புற்றனர்.

கழறிற்றறிவார் நாள்தோறும் சிவபூசை செய்வது வழக்கம். சிவபெருமானின் பாதச் சிலம்பொலி பூசையின் போது தினந்தோறும் அடியாருக்குக் கேட்கும்.

இவ்வாறு அடியார் சிவபக்தியில் மூழ்கி அரசியலை நடத்தி வரும் பொழுது, சோமசுந்தரக் கடவுளால் எழுதிக் கொடுத்த ஓர் ஓலையை எடுத்துக் கொண்டு பாணன் ஒருவன் கழறிற்றறிவாரை அடைந்தான். அவர் அவனை "நீ யார்?" என வினவ, "மதுரையம்பதியில் வசிக்கும் பாணன் யான். சிவபெருமான் உம்மிடம் இவ்வோலையைச் சேர்க்க கட்டளை இட்டார். அதனால் வந்தேன்" என்றான்.

பாணபத்திரர் கூறிய மொழிகளைக் கேட்ட அடியாராகிய அரசர் வியப்புக் கடலில் ஆழ்ந்தார். உடனே பாணரை நமஸ்கரித்து அவரிடமிருந்து கடவுளால் எழுதப்பட்ட ஓலையைப் பயபக்தியுடன் படித்தார்.

மதிமலிபுரிசை என்னும் பாசுரத்தைப் படித்து ஆனந்தத்தில் ஆழ்ந்தார். அவ்வோலையில் உள்ள வாறு கணக்கிட முடியாத செல்வத்தைப் பாண

Koviloor Digital Library

ரிடம் கொடுத்து அவரை யானை மீது ஏற்றி அனுப்பினார்.

ஒரு நாள் கழறிற்றறிவார் பூசை செய்யும் பொழுது கடவுளின் பாதச் சிலம்பொலி கேட்க வில்லை. அவர் மிகவும் வருந்தி, துன்பம் தாங்க மாட்டாதவராகிக் கத்தியைக் கையில் கொண்டு மார்பில் குத்திக் கொள்ள நினைத்தார். கடவுளின் பாதச் சிலம்பொலி கேட்டது.

அடியவர் ஆனந்தம் அடைந்து "இந்நேரம் ஆண்டவனின் சிலம்பொலி கேட்காமலிருந்ததற்குக் காரணமென்ன?" எனக் கேட்டார். உடனே "திருவாரூரில் உள்ள வன்தொண்டன் என்னைப் பூசித்துக் கொண்டிருந்தான்; அவனுடைய இனிய இசையைக் கேட்டுக் கொண்டே இருந்து விட்டேன். அது தான் உனக்குச் சிலம்பொலி கேட்காததற்குக் காரணம்" என்று அசரீரி வாக்கு உண்டாயிற்று.

சேரமான் பெருமானும் வன்தொண்டரைப் பார்க்க விருப்பம் கொண்டு திருவாரூர் சென்றார். இருவரும் இணை பிரியாதத் தோழராயினர். சுந்தர மூர்த்தி நாயனாருக்குச் சேரமான் தோழர் என்ற பெயருண்டாயிற்று.

இவர் திருமறைக் காட்டில் (வேதாரண்யம்) திருவந்தாதி பாடினார். திருவாரூரில் மும்மணிக் கோவை என்ற நூலைப் பாடினார்.

சுந்தர மூர்த்தி நாயனார் யானையின் மேல் ஏறி கயிலை சென்றார். அதை அறிந்த கழறிற்றறிவாரும் தானும் குதிரை மீது ஏறி கயிலை சென்றார்.

Koviloor Digital Library

38. கணநாத நாயனார்

கணநாத நாயனார் சீர்காழியில் வேதியர் குலத்தில் பிறந்தவர்.

இவர் சுவாமிக்கு பூஜைக்குரிய புஷ்பங்களை நந்தவனம் வைத்துப் பயிராக்கினார். கோயிலுக்கு வேண்டிய பணிவிடைகள் யாவும் சிறிதேனும் சலிப்பின்றி பக்தியுடன் செய்து வருவார்.

நான்மறையும் நன்கு உணர்ந்தவர். அனைவருக்கும் சிவத்தொண்டாற்றும் முறையை மரபு வழாமல் போதிப்பார்.

ஞான சம்பந்தர் இடத்தில் இவருக்கு மிகவும் பக்தி. அதன் காரணமாக அவருடன் இவருக்கும் கயிலை சென்று சிவகணங்களில் ஒருவராகும் பதவி கிடைத்தது.

39. கூற்றுவ நாயனார்

கூற்றுவ நாயனார் குறுநில அரசர். இவர் களந்தை என்ற ஊருக்குத் தலைவராக இருந்தார். இவருக்குப் பஞ்சாட்சரமே பெரியதொரு தனம்.

கூற்றுவ நாயனார் பல அரசர்களை வென்று வெற்றி மாலை சூடினார். இவர் எல்லா செல்வத்தைப் பெற்றிருந்தும் திருமுடி மட்டும் இவருக்குக் கிட்ட

Koviloor Digital Library

வில்லை. அதற்காக அவர் தில்லைவாழ் அந்தணர் களைத் தனக்கு முடி சூட்டுமாறு வேண்டினார்.

அவர்கள், "நாங்கள் சேர, சோழ, பாண்டியர் களுக்கு அன்றி மற்றையோருக்குச் சூட்டோம்" எனக் கூறி விட்டனர்.

அடியாரும் மனம் வருந்தி ஆண்டவன் திருவடியை முடியாக வேண்டி நின்றார். பரமனது அருளையும் அவர்தம் திருவடியையும் பெற்று, அநேக நாட்கள் அரசாண்டார். முடிவில் ஆண்டவனை அடைந்தார்.

40. புகழ்ச் சோழ நாயனார்

புகழ்ச் சோழர் சோழ நாட்டை ஆண்டு வந்தார். சைவ மதம் பெருக வேண்டும் என்று விருப்பம் கொண்டவர். கோயில்களில் பூசைகள் காலந் தவறாது நடத்தி வந்தார். தொண்டர்களின் முகக் குறிப்பு அறிந்து வழங்கும் வள்ளல்.

இவர் கொங்கு நாட்டு மன்னரிடமும் குடகு நாட்டு மன்னரிடமும் திறை வாங்கும் பொருட்டு அந் நாட்டுக்குச் சென்றார். வழியில் காணப்பட்ட கருவூரில் ஆனிலைப் பெருமானை வழிபட்டு வணங்கினார்.

தனக்குத் திறை (கப்பம்) செலுத்தாத அதிகன் என்ற அரசனைப் போரில் வென்று வெற்றி கொண்டு வீர முழக்கம் செய்தார். அதிகன் தோற்று ஓடி ஒளிந்தான்.

Koviloor Digital Library

பகைவர்களின் வெட்டுண்ட தலைகளில் ஒன்று சிவனடியார் தலையாக இருக்கக் கண்டு மிகவும் வருந்தினார். மந்திரிமார்களைக் குழி வெட்டச் செய்து நெருப்பு வளர்த்து அதில் சிவநாமத்தைக் கூறிக் கொண்டே வீழ்ந்தார், ஆண்டவன் நீழலை அடைந்தார்.

41. நரசிங்க முனையரை நாயனார்

திருமுனைப்பாடு என்ற நாட்டை ஆண்டு வந்தவர் நரசிங்க முனையரையார் ஆவார். அவர் நீதி தவறாது ஆண்டு வந்ததும் அல்லாமல் சிவ பக்தியிலும் மேம்பட்டு வந்தார்.

திருவாதிரைக்குத் திருவாதிரை அடியார்களுக்கு அன்னமிட்டு அவர்கள் ஒவ்வொருவருக்கும் நூறு பொன் கொடுப்பது வழக்கம்.

ஒரு முறை அடியார்களுடன் ஒரு துஷ்டனும் வந்தான். அவன் விபூதி அணிந்திருந்தான்.

அவரைக் கண்ட மற்ற அடியார்கள் விலகி னார்கள்.

நரசிங்க முனையார் 'துஷ்டனாயினும் கடவுள் விரும்பிய திருநீற்றை அணிந்துள்ளான். ஆகையால் அவனும் அடியார்களில் ஒருவனே' என்பதை உலகோர் அறிய அவனைச் சென்று வணங்கினார். அவனுக்கு இரட்டிப்பாக இருநூறு பொன் கொடுத்தார்; அவனை உபசரித்து அனுப்பினார்.

Koviloor Digital Library

இவ்வாறு தொண்டாற்றி ஆண்டவனை அடைந்தார்.

42. அதிபத்த நாயனார்

நாகப்பட்டினத்தில் அதிபத்த நாயனார் வலைஞர் குலத்தில் பிறந்தார். அவர் மீன் பிடிக்கும் பொழுது முதலில் அகப்படுவதைச் சிவபெருமானுக்கு என்று கடலில் விட்டு விடுவார். வலையில் ஒரு மீன் கிடைத்தால் அதைச் சிவபெருமானுக்கு எனவே விட்டுவிடுவார்.

பெருமான் அவரைச் சோதிக்க நாடோறும் ஒரு மீனே வலையில் அகப்படும்படிச் செய்தார். இவரோ அவ்வொரு மீனைக் கடலில் விட்டு வந்தார். அதனால் அதிபத்த நாயனாரின் செல்வம் நாளடைவில் குறுகி, சுற்றத்தார் வறுமையினால் பீடிக்கப்பட்டார்கள். அப்பொழுதும் அவர் வருந்தவில்லை.

ஒரு நாள் வலையில் ஒரு பொன் மீன் அகப்பட்டது. அதை வலைஞர்கள் நாயனார் முன்னிலையில் கொண்டு வந்தார்கள். அப்பொன் மீனையும் நாயனார் 'சிவபிரானுக்கு ஆக' எனக் களிப்புடன் கூறி கடலில் விட்டார்.

சிவபெருமான் உமாதேவியுடன் அதிபத்த நாயனாருக்குக் காட்சியளித்து அவருக்கு சிவலோக வாழ்வைக் கொடுத்தார்.

Koviloor Digital Library

43. கலிக்கம்ப நாயனார்

கலிக்கம்ப நாயனார் திருப்பெண்ணாகடத்தில் வணிகர் குலத்தில் பிறந்தவர். அவர் திருத்தூங்கானை மாடத்துள் வீற்றிருக்கும் சிவபிரானை வழிபட்டு அடியார்களுக்கு அமுதிட்டு வந்தார்.

இவர் இவ்வாறு வழிபட்டு வரும் நாளில், அடியார்கள் ஒரு நாள் கூடியிருந்தார்கள். கலிக்கம்ப நாயனாரின் மனைவி நீரைக் குடத்தில் எடுத்து அடியவர்களின் பாதங்களில் விட்டுக் கொண்டே வந்தாள். நாயனார் அவர்கள் பாதங்களைக் கழுவிக் கொண்டே வந்தார். இவ்வாறு வரும் பொழுது ஒரு அடியாரின் முன்னிலையில் வந்த உடன் நாயனாரின் மனைவி நீரை விடாமல் நின்று விட்டாள்.

அவ்வடியார் கலிக்கம்ப நாயனாரின் பணியாளாக இருந்தவன். கோபித்துக் கொண்டு வேலையிலிருந்து விலகியவன். அதனால்தான் தன்னுடைய மனைவி அவனுடைய பாதத்தில் நீரைவிடச் சம்மதிக்கவில்லை என்று நாயனார் நினைத்து அவளுடைய கையை வாள் கொண்டு வெட்டி விட்டு அந்நாயனார் அடியாரின் பாதத்தைத் தானாகவே சுத்தம் செய்தார்.

இவ்வாறு எல்லாம் தொண்டு செய்து சிவ பிரானை அடைந்தார்.

Koviloor Digital Library

44. கலிய நாயனார்

தொண்டை நாட்டில் உள்ள திருவொற்றியூரின் கண் பிறந்தவர் கலிய நாயனார். அவர் அவ்வூர் கோயிலில் உள்ளும் புறமும் திருவிளக்கு ஏற்றி வைத்துத் திருத்தொண்டு ஆற்றுபவர்.

இவரைச் சிவபெருமான் சோதிக்க எண்ணினார். அதனால் கலிய நாயனாரின் செல்வம் நாளுக்கு நாள் குறையலாயிற்று.

அவர் கூலிக்கு எண்ணெய் வாங்கி திருவிளக்குத் தொண்டாற்றி வந்தார். எண்ணெய் கொடுப்போரும் மறுத்து விட்டார்கள்.

செக்காட்டும் இடத்திற்குச் சென்று எள்ளிட்டு, மாட்டுக்குப் பதில் தானே நின்று செக்கைச் சுற்றி, வரும் எண்ணெயில் சிறிது கூலியாகப் பெற்று விளக்கேற்றி வந்தார். தொழிலாளர்கள் பெருகி விட்டதால் அங்கும் அவருக்கு வேலை கிடைக்கவில்லை.

தன் மனைவியை அரிச்சந்திரன் போல விற்கத் தொடங்கினார். வாங்குவார் இல்லை. ஆயினும் தொண்டிலிருந்து விலக எண்ணாதவராய்த் தன் னுடைய இரத்தத்தைப் பெருக்கி அதன் மூலம் விளக்கேற்ற எண்ணினார். கையில் கத்தியை எடுத்தார். கழுத்தை அரிந்து கொள்ளத் தீர்மானித்து, கழுத்து வரை கத்தியைக் கொண்டு போய் விட்டார். கடவுள் இதை அறிந்து அவருடைய கையைப் பிடித்துக் கொண்டார். ஆண்டவனைக் கண்டவுடன் கலிய

Koviloor Digital Library

நாயனார் ஆனந்தத் தாண்டவமாடினார். பெருமான் அவரைச் சிவபதத்திற்கு அழைத்துச் சென்றார்.

45. சக்தி நாயனார்

சக்தி நாயனார் வரிஞ்சை ஊரில் பிறந்தவர். இவர் சிவனடியார்களை யாரொருவர் இகழ்வாரோ அவர்களுடைய நாவைத் தமது ஆயுதத்தால் இழுத்து அறுப்பார். இதுவே அவருடைய சிவத் தொண்டு.

இவ்வாறு தொண்டாற்றி ஆண்டவன் பாதத்தை அடைந்தார்.

46. ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

இவர் காஞ்சீபுரத்தில் பல்லவர் குலத்தில் பிறந்தவர். எல்லோரும் இன்பத்துடன் வாழ வேண்டும் என்பது இவருடைய கொள்கை. ஐயடிகள் அநேக இடத்திற்குச் சென்று அரசர்களை வெற்றி கொண்டு தம்முடைய அரசைப் பெருக்கினார்.

இவர் ஆட்சியில் எல்லோரும் சைவ மதத்தில் பற்றுடையவரானார்கள். பல கலைகள் பெருகின. தன்னுடைய அந்திக் காலத்தில் அரசைத் தன்னுடைய புதல்வனிடம் ஒப்புவித்து, தான் சிவ தலங்கள் தோறும் சென்று பல பாட்டுக்களைப் பாடி சிவபதம் சேர்ந்தார்.

Koviloor Digital Library

47. கணம் புல்ல நாயனார்

வடவெள்ளாற்றுத் தென்கரையில் இருக்கு வேளூர் என்ற ஓர் ஊர் உண்டு. இவ்வூரில் பணக்காரர் ஒருவர் இருந்தார். அவர் சிவன் கோயிலுக்குத் திருவிளக்கு ஏற்றுவதையே தமது தொண்டாகக் கொண்டார். நாளடைவில் இவருடைய செல்வம் குறையலாயிற்று.

சிதம்பரத்தை அடைந்து தில்லைநாதரை வழிபட்டு வந்தார். இவர் யாசித்து சிவத்தொண்டு செய்ய விரும்பாததால் தினந்தோறும் வயலில் சென்று கணம்புற்களை அறுத்து அதனால் வரும் ஊதியத்தைக் கொண்டு கோயிலுக்கு விளக்கேற்றி வந்தார்.

ஒரு நாள் அவர் கொண்டு வந்த கணம் புற்கள் விற்கவில்லை. அப்பொழுதும் அவர் சிறிதேனும் சோர்வடையாது, அப்புற்களைத் திரித்து விளக்கு எரித்தார். அப்புற்களும் போதவில்லை.

அப்பொழுதும் அவர் மனம் சலியாது தனது தலைமயிரை அரிந்து எரித்தார். அக்காரியத்தைக் கண்ட சிவபெருமான் அவருக்கு முக்திப் பதத்தை அளித்தார்.

இவர் கணம் புல்லரிந்து விளக்கேற்றி வந்ததால் இவருக்குக் கணம் புல்ல நாயனார் என்ற பெயர் வந்தது.

Koviloor Digital Library

48. காரி நாயனார்

காரி நாயனார் திருக்கடவூரில் பிறந்தவர்; தமிழ் மொழியில் வல்லவர்; சிவபிரானை என்றும் மறக்க மாட்டார். திருக்கோவை பாடுவது அவருடைய வழக்கம்.

காரியர் சேர சோழ பாண்டியர்களிடம் மிகவும் அன்பு கொண்டவர். மூவேந்தரையும் தம்முடைய பாட்டுக்களால் மகிழ்விப்பார். அவர்கள் மனம் களிக்குமாறு இனிய தமிழைச் சொற் பொருள் விளங்க விரிப்பார். அவர்கள் மகிழ்ந்து அவருக்கு வேண்டிய பொருட்களைக் கொடுப்பார்கள்.

அப்பொருட்களைக் கொண்டு கோயில் கட்டுவித்தல், சிவனடியார்களுக்கு உதவல் முதலிய தொண்டு செய்து உலகெல்லாம் புகழக் கயிலையை அடைந்தார்.

49. நின்றசீர் நெடுமாற நாயனார்

நின்றசீர் நெடுமாறர் பாண்டிய மன்னர். இவர் மங்கையர்க்கரசியாரின் கணவர்; முதன் முதலில் சமண சமயத்தில் பற்று கொண்டு சைவ சமயத்தை வெறுத்து வந்தார். அவர் மனைவியும், மந்திரியாகிய குலச்சிறை யாரும் அவரைச் சைவ சமயத்தில் திருப்பவும் எண்ணி சம்பந்தரை வருவித்தார். திருஞானசம்பந்தரின்

Koviloor Digital Library

அருளால் நெடுமாற நாயனார் சைவ மதத்தைத் தழுவினார்.

இவ்வாறு சிவத் தொண்டாற்றி இறுதியில் சிவபதத்தை அடைந்தார்.

50. வாயிலார் நாயனார்

வாயிலார் நாயனார் திருமயிலையில் வேளாளர் குலத்தில் பிறந்தார்.

அவர் தமது உள்ளத்திலேயே சிவன் கோயில் அமைத்துக் கொண்டார். அக்கோயிலில் உள்ள பெருமானுக்கு அபிஷேகம் செய்வார்; பூக்கொண்டு அருச்சிப்பார்; பூசை செய்வார்.

இவ்வாறு ஞான பூசை செய்து சிவபெருமான் பாதத்தை அடைந்தார்.

51. முனையடுவார் நாயனார்

சோழ நாட்டில், நீடூரிலே, வேளாள குலத்தில் ஒருவர் தோன்றினார். அவர் சிவபக்தியில் சிறந்தவர். அவர் சண்டையில் எதிரிகளைக் கொன்று வீழ்த்து வதில் முயன்று இருந்தார். ஆகையினால் முனையடு வார் என்ற பெயர் உண்டாயிற்று.

Koviloor Digital Library

அவர் வெற்றி கொண்ட பொருளால் சிவத் தொண்டாற்றி வருவார்; சிவனடியார்களுக்கு அமுதூட்டுவார்; அவர் வேண்டிய பொருட்களை உதவுவார்.

முனையடுவார் பல நாட்கள் இவ்வாறு தொண்டு ஆற்றிச் சிவபதம் அடைந்தார்.

52. கழற்சிங்க நாயனார்

இவர் பல்லவர் குலத்தில் தோன்றியவர். சிவ பக்தர். வடக்கே உள்ள பல அரசர்களை வென்று சைவமதம் தழைக்க அரசாண்டு வந்தார்.

ஒரு நாள் பல்லவரும் அவர் மனைவியாரும் திருவாரூர் தியாகேசனைப் பணியச் சென்றனர். தியாகேசனைப் பணிந்து விட்டு கழற்சிங்கரின் மனைவியார் கோயிலைச் சுற்றிக் கொண்டு வந்தார். அங்கு ஓர் மண்டபத்தில் ஒரு புதுப் புஷ்பம் இருந்தது. அதை எடுத்து மோந்தார்.

அங்கு சிவத் தொண்டாற்றி வந்த செருத்துணை நாயனார் என்பவர் அரசி பூவை முகந்ததைப் பார்த்து, "ஆண்டவனுக்குரிய பூவை முகந்தவர் யார்?" எனக் கூவிக் கொண்டே வெகுண்டு ஓடி வந்தார். அரசியின் மூக்கை அறுத்து விட்டார்.

கழற்சிங்கர், "அரசியர் மூக்கை அறிந்தவர் யார்" எனக் கேட்டார். செருத்துணை நாயனார் நடந்ததைக் கூறினார். "பூவை எடுத்த கையையும் அன்றோ துணிக்க

Koviloor Digital Library

வேண்டும்" என்று கூறி கழற் சிங்கர் மனைவியின் கையையும் அரிந்தார்.

அச்செய்கையைக் கண்ட தேவர்கள் பூமாரி பெய்தனர். இவ்வாறு அநேக நாட்கள் சிவத் தொண்டாற்றிச் சிவபதத்தை அடைந்தார்.

53. இடங்கழி நாயனார்

கோனாட்டில் கொடும்பாளூரில், வேளீர் குலத்தில், ஆதித்தன் குடியில் ஓர் பெரியவர் தோன்றினார். அவர் மன்னவர்.

இவருடைய பெயர் இடங்கழியார் என்பது.

இவர் சைவ மதத்தில் பற்றுடையவர். இவருடைய நாட்டில் சிவத்தொண்டும் கோயில் திருப்பணிகளும் பெருகின.

அவர் நாளில் ஓர் சிவனடியார், அடியவர்களுக்கு மகேஸ்வர பூசை செய்விப்பதைத் தமது வழக்கமாகக் கொண்டார்.

ஒரு நாள் அப்பூசை செய்வதற்குப் பணம் இல்லாமல் போய் விட்டது. அதனால் திருடியேனும் அப்பூசையை முடிக்கத் தீர்மானித்து இடங்கழியார் அரண்மனைக்குச் சென்று கூட்டிலுள்ள நெல்லை எடுத்துக் கொண்டார்.

மன்னரின் வேலையாள் அவரைப் பார்த்து விட்டார்கள். அவரைப் பிடித்துக் கொண்டு மன்ன

Koviloor Digital Library

னுடைய முன்னிலையில் கொண்டு போய் நிறுத்தி னார்கள்.

மன்னர், அவர் நெல்லைத் திருடிய காரணத்தை அறிந்தார். அவர் மனம் உருகி அவருக்கு அடியார் பணி செய்ய வேண்டியதற்கு உரிய நெற் குவியல்களையும், பொன்னையும் பொருட்களையும் தந்தார்.

நெற் கூண்டுகளைத் திறந்து விட்டு அவற்றை எடுத்துச் செல்லுமாறு சிவனடியார்களிடம் தெரிவித் தார். இவ்வாறு அநேக நாட்கள் சிவத் தொண்டாற்றி வந்து சிவபதம் அடைந்தார்.

54. செருத்துணை நாயனார்

இவர் தஞ்சாவூரில் வேளாள குலத்தில் பிறந்தவர். சிவனடியார் பக்தியிலும் சிவபக்தியிலும் சிறந்தவர்.

இவர் திருவாரூரை அடைந்து சிவத்தொண்டு ஆற்றி வந்தார். செருத்துணையார் புஷ்பத்தொண்டு செய்து வரும் நாளில் பல்லவ அரசி ஒரு பூவை முகந்தார். அப்பூவை முகந்ததால் அரசியின் மூக்கை அறுத்து விட்டார்.

இவ்வாறு மிகப் பக்தியுடன் இருந்து சிவபதம் அடைந்தார்.

Koviloor Digital Library

55. புகழ்த்துணை நாயனார்

புகழ்த்துணை நாயனார் செருவிலிப்புத்தூரில் சைவ குலத்தில் பிறந்தார். அவர் சிவபெருமானை முறைப்படி அருச்சித்து வந்தார். இவ்வாறு சிவத் தொண்டாற்றி வரும் நாளில் அவ்வூரில் பஞ்சம் வந்து சூழ்ந்து கொண்டது. இதன் காரணமாக அவர் சிவத் தொண்டினின்றும் சிறிதும் வழுவவில்லை. ஆயின் நாளுக்கு நாள் பசியால் மெலிந்து வாடி விட்டார்.

இவ்வாறு பசியினால் வாடி ஒரு நாள் சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்து கொண்டு இருக்கும்பொழுது அவருடைய கையிலுள்ள குடம் சிவபெருமானின் தலை மீது விழுந்து விட்டது.

அது கண்ட நாயனார் வருந்தி சிவனுடைய சன்னிதியிலேயே விழுந்து தவித்தார். பரமனது அருளால் அவருக்கு உறக்கம் வந்தது.

கடவுள் அவருடைய கனவில் தோன்றி பஞ்சம் ஒழியும் வரை நாடோறும் ஓர் காசு வைப்பதாகக் கூறினார்.

நாயனார் துயிலிலிருந்து எழுந்தார். ஐயனின் பாதத்து அடியில் ஓர் காசு இருந்தது. ஆனந்தங் கொண்டு அக்காசைப் பெற்று தானும் சீவித்துப் பெருமானையும் துதித்து வந்தார். இவ்வாறாகப் பஞ்சம் ஒழியும் வரை தமது திருத்தொண்டை வழுவாது செய்து வந்தார்.

Koviloor Digital Library

56. கோட்புலி நாயனார்

சோழ நாட்டில், நாட்டியத்தான் குடியில் பிறந்தவர் கோட்புலியார். இவர் குலம் வேளாள குலமாகும். சிவபக்தர்.

கோட்புலியார் சோழ மன்னனின் சேனாதிபதி. அவர் அநேக சிற்றரசர்களை வெற்றி கொண்டு அதனால் வரும் செல்வங்களால் அநேக சிவன் கோயில்களை எழுப்பினார். அடியார்களின் சாப் பாட்டிற்கு என கணக்கற்ற நெற் குவியல்களைச் சேமித்து அவர்களை உண்பித்துப் பூசிப்பார். இவ்வாறு இருக்க ஒரு முறை அரசனது கட்டளையால் வேற்று அரசருடன் போர் புரிய வேண்டி இருந்தது. அதற்காக அவர் தான் வரும் வரை அடியார்களுக்கு வேண்டிய நெற்குவியல்களை நெற் கூண்டில் சேமித்து வைத்து அதை வேறு ஒருவரும் தொடக் கூடாது என்று கட்டளை இட்டுப் போருக்குச் சென்றார்.

இவர் சண்டையிடச் சென்றதும் இவருடைய ஊரில் பஞ்சம் ஏற்பட்டு விட்டது. இதன் காரணமாக அவர்களுடைய சுற்றத்தார்கள் அடியார்களுக்காகக் கோட்புலியார் சேமித்து வைத்த நெற் குவியல்களைச் செலவழித்து விட்டார்கள்.

போரில் இருந்த கோட்புலியார் தமது சுற்றத் தாரின் செய்கையை அறிந்து அவர்களைக் கொன்று விட நினைத்தார். தனது பேர் கொண்ட ஓர் காவல்காரனை வாயிலில் காவல் வைத்து விட்டுத்

Koviloor Digital Library

தமது சுற்றத்தார்களை விருந்து சாப்பிட அழைத்தார். விருந்து சாப்பிட வந்த சுற்றத்தார்களை வாளால் வெட்டிக் கொன்று வீழ்த்தினார். ஒரே ஒரு சிறுவன் தப்பியோட முயன்றான். அவனையும் வெட்டி வீழ்த்தினார். தன்னைத் தடுத்த தனது காவலாளிக்கு இச் சிறுவனும் சிவத் துரோகம் செய்தவள் பாலை உண்டவன் எனக் கூறிக் கொன்றார்.

சிவபிரான் காட்சியளித்து, "கோட்புலியாரே! நீர் எமது பக்தியில் ஈடுபட்டுக் கொன்றவர்கள் அனைவரையும் நம்முடைய பாதத்தில் அழைத்துக் கொண்டோம்" எனக் கூறினார்.

57. பூசல் நாயனார்

இப்பூசல் நாயனார் தொண்டை நாட்டில் திருநின்ற ஊரில் பிறந்தவர். அந்தணர் குலத்தவர், சிவபக்தியில் சிறந்தவர். இவர் சிவபெருமானுக்குக் கோயில் அமைக்க விரும்பினார். ஆயின் பொருள் கிடைக்க வில்லை. தன் மனத்திலேயே ஓர் கோயிலைக் கட்டினார். அம்மனக் கோயிலில் பெருமானைப் பிரதிஷ்டை செய்ய நாளைக் குறித்திருந்தார்.

இங்கு இவ்வாறு பூசலார் மனத்தில் கோயில் அமைத்து நிற்க, காடவர் கோனாகிய காஞ்சி மன்னன் காஞ்சியில் சிவபெருமானுக்கு என ஓர் அழகிய கோயிலைக் கட்டி அக் கோயிலில் சிவலிங்கத்தைப்

Koviloor Digital Library

பிரதிஷ்டை செய்யத் தீர்மானித்து இருந்தான். அதற்கு என நாளையும் குறித்து இருந்தான்.

கடவுள் காடவர் கோனின் கனவில் எழுந்தருளி, "அரசனே! திருநின்ற ஊரிலுள்ள பூசல் நாயனார் ஓர் கோயிலைக் கட்டி என்னைப் பிரதிஷ்டை செய்ய நாளைய தினத்தைக் குறித்து இருக்கிறான்; நான் அங்கு செல்ல வேண்டும்; ஆகையால் நீ உன் கோயிலில் என்னைப் பிரதிஷ்டை செய்ய மற்றும் ஒரு நாளைக் குறித்துக் கொள்" எனக் கூறினார்.

அரசன் விழித்து வியப்புற்றான். பூசலாரைக் காண விரும்பி திருநின்றவூரை அடைந்தான். அவ்வூராரை, "பூசலார் கட்டிய கோயில் எங்குள்ளது?" என வினவினான். அவ்வூரார், "பூசலார் கட்டிய கோயில் இங்கு ஒன்றும் கிடையாதே" எனக் கூறி பூசலாரை அழைத்து வந்தார்கள். பூசலாரைக் கண்டவுடன் அரசன் வணங்கினான்; பூசலார் கோயிலில் கடவுள் எழுந்தருளப் போவதாகக் கூறியதைச் சொல்லி மறுபடியும் வணங்கி கோயிலைக் காட்டும்படி வேண்டினான்.

பூசலார் திகைப்பு அடைந்து, "இவ்வேழையின் மனக்கோயிலில் எம்பெருமான் எழுந்து அருளுவதாகக் கூறினாரோ? என்னே நான் செய்த பாக்கியம்!" என மனமகிழ்ந்து நின்றார்.

அரசன் பூசலார் கட்டிய மனக்கோயிலை அறிந்து ஆச்சரியம் மிகுந்த ஆனந்தக் கடலில் மூழ்கி அவரை மீண்டும் வணங்கித் துதித்தான்.

Koviloor Digital Library

பூசலாரும் மனக்கோயிலில் எழுந்தருளிய பெருமானைப் பூசித்துச் சிவபதம் சேர்ந்தார்.

58. மங்கையர்க்கரசியார்

இவ்வம்மை சோழ மன்னரின் புதல்வி, நின்ற சீர் நெடுமாற நாயனாரின் மனைவியார். அவர், திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகளைக் கொண்டு தன் கணவன் சைவ மதத்தைத் தழுவச் செய்தவர். சிவனடியார் வேண்டியன கொடுத்து அவர்களை ஆதரித்தார். திருநீற்றையே தன்னுடைய துணையாகக் கொண்டு சிவபெருமானைத் துதித்து இறுதியில் சிவபதம் சேர்ந்தார்.

59. நேச நாயனார்

இவர் காம்பீலி நகரத்தில் சாலியர் குலத்தில் பிறந்தவர். எப்பொழுதும் தன் மனத்தால் சிவ பெருமானை வழிபட்டு, பஞ்சாட்சரத்தைச் சொல்லு வார். சிவனடியார்களுக்கு வேண்டிய ஊன், உடை முதலியன கொடுத்து உதவுவார். இவ்வாறு எல்லாம் தொண்டு ஆற்றி சிவனடி சேர்ந்தார்.

Koviloor Digital Library

60. கோச்செங்கட் சோழ நாயனார்

சோழ நாட்டிலுள்ள காவேரி நதிக்கரையில் ஓர் அழகிய நீர்நிலை இருந்தது. அதற்குப் பெயர் சந்திர தீர்த்தம் என்பது. அதன் அருகில் ஓர் காடு இருந்தது. அதில் ஓர் வெண்ணாவல் மரம் இருந்தது. அதன் கீழ் ஓர் சிவலிங்கம் இருந்தது.

அச்சிவலிங்கத்தை ஓர் யானை வழிபட்டு வந்தது. அந்த யானை தினந்தோறும் தன்னுடைய துதிக்கை யால் நீர் கொணர்ந்து ஆண்டவனுக்கு அபிஷேகம் செய்து மலர் சாத்தி வந்தது. அதனால் அப்பெருமான் இருக்கும் ஊருக்கு திருவானைக் காவல் என்று தற்காலத்திலும் பெயர் வழங்குகிறது. இத்திருவானைக் கா திருச்சிராப் பள்ளிக்கு அருகில் இருக்கிறது.

இவ்வாறு யானை பூசித்துக் கொண்டு வரும் பொழுது ஓர் சிலந்தி அச்சிவபெருமானிடத்தில் பக்தி கொண்டு அவருடைய சிரசின் மேல் நாவல் மரச்சரகுகள் உதிருவதைக் கண்டு அதைத் தடுக்க எண்ணங் கொண்டது. உடனே தனது வாயின் மூலமாக நூலைக் கொண்டு சரகு விழாமல் தலைக்கு நேராக வலை பின்னிற்று.

கடவுளைத் தொழவரும் யானை சிலந்தியின் கூட்டைக் கண்டு வெகுண்டு அதைக் கலைத்து விட்டு அபிஷேகம் செய்து பூசித்தது.

சிலந்தியும் விடாமல் கூடு கட்டி வந்தது. யானையும் தினந்தோறும் கலைத்து வந்தது. இதைக்

Koviloor Digital Library

கண்டு சிலந்தி கோபித்து யானையின் துதிக்கையில் புகுந்து கொண்டது, கடித்தது. யானை தும்பிக்கையைத் தரையில் மோதி இறந்தது. சிலந்தியும் யானையுடன் இறந்தது.

சிவபெருமான் யானைக்குச் சிவகதி அளித்து சிலந்தியைச் சோழ அரசனாகப் பிறக்கும்படிச் செய் தார். அவர் பிறக்கும் பொழுது கண் சிவப்பாக இருந்ததால் அவருக்குக் கோச் செங்கட் சோழன் எனப் பெயர் வந்தது.

கோச்செங்கட் சோழருக்கு பூர்வ ஜன்மத்து அறிவு இருந்ததால் தான் சிவபெருமான் அருளால் மானிடப் பிறவி எடுத்தோம் என்றும், அரச பதவியும் கிட்டிற்று என்பதையும் அறிந்தார். தான் முதல் ஜன்மத்தில் வழிபட்ட திருவானைக்கா பெருமானுக்குக் கோயில் கட்டினார். மேலும் அநேக சிவகோயில்களைக் கட்டினார்.

இவர் சிவச்சிதம்பரம் சென்று தில்லைவாழ் அந்தணர்களுக்கெல்லாம் வீடுகள் கட்டிக் கொடுத்தார். சிவனடியார்களைப் பூசித்தார் இவ்வாறெல்லாம் சிவத் தொண்டாற்றி சைவ நிலையைப் பெருக்கி சிவபதம் அடைந்தார்.

61. திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்

இவர் எருக்கத்தம்புலியூரில் பிறந்தவர். இவர் சிவபிரானைக் குறித்து பல பாடல்களை யாழில் வாசிப்பது வழக்கம்.

Koviloor Digital Library

இந்த யாழ்ப்பாணர் பல தலங்களுக்குச் சென்று சிவபெருமானைத் தம்முடைய யாழில் வாசித்து வந்தார். மதுரைக்கும் வந்து சோமசுந்தரக் கடவுளின் புகழை யாழில் வாசித்தார்.சிவபெருமான் அவ்வூர் சிவபக்தர்களின் கனவில் தோன்றி யாழ்ப்பாணரைக் கோயிலுக்கு அழைத்துச் செல்லும்படிக் கூறினார். அவர்களும் அவ்வாறே செய்தனர். யாழ்ப்பாணர் சோம சுந்தரக் கடவுளைப் பாடிக் கொண்டிருக்கும் பொழுது கடவுள் அவருக்குப் பொற்பலகையை இடும்படிக் கட்டளை இட்டார். பொற்பலகையைப் போட்டார்கள். அதன் மேல் பாணர் நின்று பாடினார்.

திருவாரூரில் யாழ்ப்பாணருக்கு எனக் கோயிலின் வடக்குப் புறத்தில் ஓர் வாயில் திறந்தது. உட்சென்று யாழ்ப்பாண கடவுளை ஆனந்தமாய்ப் பாடினார். பிறகு பாணசர் சீர்காழி சென்றார். அங்கு ஞான சம்பந்தரின் பாடல்களைத் தமது யாழில் வாசித்து வந்தார்.

இவ்வாறு வெகு நாட்கள் ஆண்டவனைப் பாடி ஞானசம்பந்தருடன் சோதியில் கலந்தார்.

62. சடைய நாயனார்

இவர் அந்தணர் குலத்தில் பிறந்தவர். சுந்தர மூர்த்தி நாயனாரின் தந்தையார். நாயனாருடன் தானும் சிவபக்தியில் மூழ்கி ஆண்டவன் அடி நீழலை அடைந்தார்.

Koviloor Digital Library

63. இசை ஞானியார்

இவ்வம்மையார் சடைய நாயனாரின் மனைவி. தூய்மையான உள்ளத்தவர். எப்பொழுதும் சிவபக்தி பூண்டவர். அடியார்களை ஆனந்தமாய் வரவேற்று வேண்டியன நல்குவார்.

சுந்தரமூர்த்தி நாயனாரைப் பெற்றெடுத்த புண்ணியவதி ஆவார். நாயனாருடன் சிவபக்தியில் ஈடுபட்டு வீட்டை அடைந்தார்.

KOVILOOR ANDAVAR
A. No. 2674
LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library

Koviloor Digital Library

நமது சிறுவர் நூல்களில் சில...

1. இந்து மத உபாக்கியானம் I & II ... ... கிருஷ்ணஸ்வாமி ஐயர்
2. பால ராமாயணம் .... 'ராமாயண சக்ரவர்த்தி' பண்டித கல்யாணராமன்
3. பால பாரதம் ... ஏ.வரதாச்சாரி
4. பால பாகவதம் ... ஏ.வரதாச்சாரி
5. பால கந்த புராணம் ... பி.எஸ்.சுப்ரமணியம்
6. தாயுமானவர் ... பி.ஸ்ரீ.
7. தத்துவக் கதைகள் ... பி.ஸ்ரீ.
8. மோலியேரின் நகைச் சுவை நாடகங்கள் ... பி.ஸ்ரீ.
9. காதம்பரி ... பி.ஸ்ரீ
10. சுடர்க! தமிழ் நாடே! ... பி.ஸ்ரீ.
11. கிழவியின் தந்திரம் ... கி.வா.ஜ.
12. நன் மாணவன் ... ம.க.ஜயராம்
13. இளமைப் பருவம் ... ரவீந்திரநாத் டாகுர்
14. ஜாவா யாத்திரை ... ரவீந்திரநாத் டாகுர்
15. தாகூரின் நகைச்சுவை நாடகங்கள் ... ரவீந்திரநாத் டாகுர்
16. போஸ்ட் மாஸ்டர் ... ரவீந்திரநாத் டாகுர்
17. ஞானக் குழந்தைகள் ... சரவணபவன்
18. மீராபாய் ... கே.எஸ்.இராமசாமி
19. உருவகக் கதைகள் ... ஐ.சுவாமிநாதன்
20. பதுமைகள் சொன்ன கதைகள் ... ஸ்ரீநிவாசன்
21. சிரிப்பூட்டும் திராவிடக் கதைகள் ... ஸ்ரீநிவாசன்
22. மீண்டும் வாழ்ந்தால்... ... Rt.Hon'ble வி.எஸ்.ஸ்ரீநிவாச சாஸ்திரி
23. என் வாழ்க்கையின் அம்சஸங்கள்... Rt.Hon'ble வி.எஸ்.ஸ்ரீநிவாச சாஸ்திரி
24. இளமை நினைவுகள் ... கனம் பி.எஸ். குமாரசாமி ராஜா
25. தமிழ் நாட்டு ராஜீயத் தலைவர்கள் ... முனுசாமி
26. பாரத நதிகள் ... எம்.ராதாகிருஷ்ண பிள்ளை
27. தமிழர் வீரம் ... எம்.ராதாகிருஷ்ண பிள்ளை
28. பீஷ்மர் சொன்ன தத்துவக் கதைகள் ...பி.என்.பரசுராமன்
29. சித்ரகுப்தன் கதைகள் ... பி.என்.பரசுராமன்
30. மூன்று மாத கடுங்காவல் ... கல்கி
31. நவகாளி யாத்திரை ... சாவி

அல்லயன்ஸ் கம்பெனி * மயிலாப்பூர் * சென்னை – 600 004